Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU




முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2044 சித்திரை 13 வெள்ளிக்கிழமை (26.04.2013) பக்கங்கள் 20 ஓசை – 208
















# வடக்கு மாகாண தேர்தலில் கனவுடன் களமிறங்குகிறார் ரணில்

## யாழில் சூறாவளி சுற்றுப்பயணம்



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத் தேர்தலை இலக்குவைத்து ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐ.தே.க. கட்சியின் குழுவினர் வடக்கில் பிரசார சுற்றுப் பயணம் ஒன்றை ஆரம்பித்து நேற்று யாழ்ப்பாணம் வந்தடைந்தனர்.

வடக்கு மாகாணத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி நிச்சயம் போட்டியிடும் என்று அதன் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணத்தில் தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக மையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களான திஸ்ஸ அத்தநாயக்க, ரவிகருணாநாயக்க, டி.எஸ்.சுவாமிநாதன் ஆகியோர் பங்கேற்றிருந்தனர். இந்த

19 ஆம் பக்கம் பார்க்க

## பெண்கள் இருவரை காணவில்லை

சுன்னாகம் பொலிஸ் நிலையப் பகுதியில் இரண்டு பெண்கள் காணாமற் போயுள்ளதாக சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் உறவினர்களால் முறையிடபபட்டுள்ளது.

மல்லாகம் கோட்டைப் பகுதியில் உள்ள 16 வயதான மாணவி ஒருவர் வீட்டில் ஏற பட்ட முரண்பாட்டைத் தொடர்ந்து வீட்டில் இருந்து வெளிச்சென்றவர் திரும்பிவரவில்லையென முறையிடப்பட்டுள்ளது.

இதேவேளை சுன்னாகம் காங்கேசன்துறை வீதியைச் சேர்ந்த 26 வயதான பெண ஒருவரும் வீட்டில் இருந்து சுகயீனம் காரணமாக வெளியேறுவதாகக் கூறி கடிதம் எழுதி வைத்துவிட்டு காணாமல் போயுள்ளதாக பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது. காணமல் போனவர்கள் சம்பந்தமான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## காணி சுவீகரிப்பு விவகாரம் ஜனாதிபதியின் கவனத்திற்கு

வலிகாமம் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் காணிகள் அபகரிக்கப்படுவது தொடர்பில் ஜனாதிபதியை விரைவில் தாம் சந்தித்து உண்மை நிலைவரங்களை தெளிவுபடுத்தவுள்ளதாக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமைச்சரின் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற வடமாகாண பதவி நிலை வெளிக்கள அலுவலர் மற்றும் மாகாண கலாசார உத்தியோகத்தர்கள் சங்கப் பிரதிநிதிகளுடனான சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாம் எப்போதும் உண்மையானதும் யதார்த்தமானதுமான அரசியலை முன்னெடுத்து வருவதையே விரும்புவதுடன் அதையே இன்றுவரை செயற்படுத்தியும் வருகின்றோம்.

கடந்தகாலங்களில் பல்வேறு அபிவிருத்தி செயற்திட்டங்களை அர்சுடன் இணைந்து முன்னெடுத்து வந்துள்ளோம் என்பதுடன், எதிர்காலங்களிலும்

19 ஆம் பக்கம் பார்க்க

## இந்திய வீடமைப்பு; பூரண திருப்தி

### தூதரகம் பெருமிதம்

போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு பகுதிகளில் இந்திய அரசின் உதவியுடன் நடந்துவரும் வீடு கட்டும் பணியில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது. இது குறித்து இந்தியத் தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது, இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 40,000 வீடுகளை கட்ட இந்திய அரசு நிதியுதவி வழங்கியுள்ளது. இலங்கை அரசுடன் செய்து கொண்ட ஒப்பந்தப்படி கடந்த ஆண்டு அக்ரோபர் மாதம் இந்த வீடு கட்டும் பணிகள்

19 ஆம் பக்கம் பார்க்க

## வலி. வடக்கு செல்லவேண்டாம் மாவையின் விசித்திர ஆலோசனை



(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கு மக்களைப் படையினருடன் ஒத்துழைக்க வேண்டாம் என்றும் காணிச் சொந்தக்காரர்கள் தமது காணியினைப் படையினருக்கு அடையாளம் காட்டவேண்டாம் என்றும கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா பொதுமக்களிடம் கோரியிருக்கிறார்.

காணி சுவீகரிக்கும் விவகாரம் சர்ச்சையாக உருவெடுத்திருக்கும் இந்நிலையில் வலி. வடக்கில் உள்ள காணிகளின் உரிமையாளர்களைப் பார்வையிட அங்கு செல்லவேண்டாம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா வேண்டுகோள் விடுத்திருக்கின்றார்.

வலிகாமம் வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேசங்களில் ஒரே நேரத்தில் 6400 ஏக்கர் பொது மக்களின் குடியிருப்பு காணிகளை சுவீகரிக்கும் நடவடிக்கைகள்ள எதிர்த்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, அந்தக் காணிகளைப் பொதுமக்கள் சென்று பார்வையிடக்கூடாது

19 ஆம் பக்கம் பார்க்க

## ரணிலுடன் சுரேஷ் இரகசியப் பேச்சு

### வெளிவர மறுக்கும் உண்மைகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கு நேற்று விஜயம் செய்த எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் இரகசியப் பேச்சுக்களை நடாத்தியுள்ளார். யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற இந்த இரகசியப் பேச்சுக்களில் உதவியாளர்கள் எவரும் இன்றி இருவரும் தனியாக மூடிய அறையில் சந்தித்து உரையாடியுள்ளனர்.

நீண்டநேரம் நடைபெற்ற இந்தச் சந்திப்பின் போது அச்சூழலில் பத்திரிகையாளர் எவரும் அனுமதிக்கப்படவில்லை. பேச்சுக்களின் போது கூட்டமைப்பில்

19 ஆம் பக்கம் பார்க்க




## அமைச்சர் ஹக்கீம் யாழ்ப்பாணத்தில்

(யாழ்ப்பாணம்)

நீதி அமைச்சர் ரவூக் ஹக்கீம் யாழ்ப்பாணத்திற்கு இன்று வருகை தரவுள்ளார். தந்தை செல்வா நினைவாக நடைபெறவிருக்கும் நினைவு நிகழ்வில் அவர் நினைவுப்பேருரை நிகழ்த்தவுள்ளார். (25)

உள்ளே... புலமைப் பரிசில் மாதிரி வினாத்தாள்

# முல்லையில் இன நல்லிணக்கம் கட்டி எழுப்பப்பட வேண்டும்

## வலியுறுத்துகிறது பெண்கள் அமைப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் மீள்குடியேறுகின்ற மக்களுக்கு வழங்கப்படுகின்ற உதவிகள் அரசியலாக்கப்பட்டு, தமிழ் முஸ்லிம் சமூகத்தினரை இன ரீதியாகப் பிரிப்பதற்குப் பயன்படுத்தப்படுகின்றன என்று இலங்கையின் பெண்கள் அமைப்பு ஒன்று குற்றஞ்சாட்டியுள்ளது.

இந்த நிலைமையினை, நிதியுதவி வழங்குபவர்களும், உதவி நிறுவனங்களும் உணர்ந்து கொள்ள வேண்டும். தமது உதவிகளும், அவற்றின் பயன்பாடுகளும் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பலனளிக்கும் வகையில் சென்றடைவதற்கு ஏதுவாக, அரசியல் கலப்பற்ற சிவில் நிர்வாகக் கட்டமைப்பு ஒன்றுக்காக அவர்கள் அரசாங்கத்திடம் வலியுறுத்த வேண்டும் என்று பெண்கள் செயற்பாட்டு வலையமைப்பு என்னும் அமைப்பு கோரியிருக்கின்றது.

முல்லைத்தீவு மாவட்டம் முள்ளியவளைப் பகுதியில் முஸ்லிம் மக்களைக் குடியேற்றுவதற்காக பெருமளவான காட்டுப் பகுதியை அழித்து, காணிகள் வழங்குவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கையையடுத்து, அங்கு முஸ்லிம்களுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள முறுகல் நிலை தொடர்பில் உண்மை நிலைமையை அறிவதற்காக அந்த அமைப்பின் பிரதிநிதிகள் மேற்கொண்ட விஜயத்தையடுத்து வெளியிடப்பட்டுள்ள அறிக்கையொன்றிலேயே இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டிருக்கின்றது.

முள்ளியவளை பிரதேசத்தில் மீள்குடியேறுவதற்காக வந்துள்ள முஸ்லிம்கள் மற்றும் தமிழ் மக்கள், மீள்குடியேற்றம் தொடர்பான பணிகளில் சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகள் ஆகியோரைச் சந்தித்து உண்மை நிலைமைகள் குறித்து பெண்கள் செயற்பாட்டு வலையமைப்பின் பிரதிநிதிகள் விரிவாகக் கலந்துரையாடியிருக்கின்றனர். இந்த விஜயம் தொடர்பாக அந்த அமைப்பு விரிவான அறிக்கையொன்றை விடுத்துள்ளது.

மிகப் பெரிய அளவில் துன்பங்களுக்கும் கஸ்டங்களுக்கும் முகம் கொடுத்துள்ள தமிழ் மக்கள் முன்னுரிமை அடிப்படையில் மீள்குடியேற்றம் செய்யப்பட வேண்டும் என்பதை ஏற்றுக் கொண்டுள்ளது. இருப்பினும் கடந்த 1990 ஆம் பலவந்தமாக தமிழ் முஸ்லிம் வெளியேற்றப்பட்டு பெரும் துயரங்களைச் சந்தித்துள்ள முஸ்லிம் மக்களும், அவர்களது சந்ததியினரும், கண்ணியமான முறையில் தாங்கள் குடியிருந்த பிரதேசத்தில் மீள்குடியேற்றப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துவதாகவும் அந்த அமைப்பு தெரிவித்திருக்கின்றது.

இருபது வருடங்களுக்கு மேலாக இடம்பெயர்ந்துள்ள முஸ்லிம்கள் சுயமாகத் தமது பிரதேசங்களுக்குத் திரும்பி வருவதற்குரிய வசதிகள் செய்யப்படுவதுடன், அதற்கான விழிப்புணர்வையும், ஏற்படுத்த வேண்டும்.

தமிழ் முஸ்லிம் சமூகங்களுக்கிடையில் நல்லிணக்கம் ஏற்படுத்துகின்றோம் என்ற போர்வையில், இரு தரப்பினருக் குமிடையில், அரசியல் சுயலாபத்திற்காக தப்பபிப்பிராயங்களை உருவாக்குவதற்கான அணுகுமுறையை கைக்கொள்ளக் கூடாது. பிரிவினையை ஏற்படுத்தும் வகையில் சலுகைகள்,



சித்திரைப் புத்தாண்டு தினத்தை முன்னிட்டு ஓமந்தை சமுர்த்தி வங்கியில் சமுர்த்தி பயனாளிகளுக்கு இடையே கிடுகு பின்னுதல் போட்டி நடைபெறுவதனைக் காணலாம்.

## அடிப்படை வசதிக்காக ஏங்கித் தவிக்கும் மாணவர்கள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பாரதிபுரம் அன்னை சாரதாதேவி வித்தியாலயம் எந்தவித அடிப்படை வசதிகள் எதுவுமற்ற நிலையில் மிகவும் நெருக்கடியின் மத்தியில் கல்விச் செயற்பாடுகளை மேற்கொண்டு வருவதாக மாணவர்கள் தெரிவித்தனர்.

இப்பிரதேசத்தில் மக்கள் மீள்குடியேறியதைத் தொடர்ந்து இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், தற்போது தரம் ஒன்று முதல் 7 வரையான வகுப்புக்களில் 420 மாணவர்கள் கல்விச் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில், இப்பாடசாலையின் வகுப்பறைகள் கிடுகு மற்றும் தறப்பாள்களினால் அமைக்கப் பட்ட கொட்டில்களிலும் இடம்பெற்று வருகின்றது.

கடந்த திங்கட்கிழமை இதே வேளை பற்றிக்ஸ் மிஷன் திருச்சபையின் போதகர் ரமேஸ் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவை பாடசாலை அபிவிருத்திச் சங்கத்திடம் கையளித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனவே இப்பாடசாலை மாணவர்கள் சிரமமற்ற கல்விச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு ஏதவாக அப்படை வசதிகளை ஏற்படுத்தி தருமாறு மாணவர்களும், பெற்றோரும் கேட்டுக்கொள்கின்றனர். (28)

## மெய்வன்மைப் போட்டி

(சாவகச்சேரி)

அ-ல்லாரை ஐங்கரன் முன்பள்ளியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று பிற்பகல் 2.00 மணிக்கு ஐங்கரன் முன்பள்ளி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

சி.துரைர்ாசா தலைமையில் நடபெறும் இந்நிழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் திருமதி சுதர்சினி, சிவத்திரை சிவநாதன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி பிரதேச சபையின் செயலாளர் செல்வி முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் பாக்கியராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (11)

## உலக புத்தக தினம் நாவற்குழியில் நிகழ்வு

(சாவகச்சேரி)

உலக புத்தக தினத்தை முன்னிட்டு நாவற்குழி பொதுநூலகத்தின் புத்தக தின நிகழ்வுகள் நாளை காலை 9.30 மணிக்கு நூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சாவகச்சேரி பிரதேச சபையின் தவிசாளர் எஸ்.துரைராஜா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் எழுத்தாளர் அறவன் புலவோர் கணபதிப்பிள்ளை சச்சிதானந்தன் பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

இந்நிகழ்வில், உலக புத்தக தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வும் கந்தையா கனகம்மா நினைவு நிலையத்தினால் க.பொ.த. உயர்தரத்தில் சித்தியெய்திய மாணவர்களுக்கு கல்வி ஊக்குவிப்பு நிதி வழங்கப்படவுள்ளதுடன், மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளது. (11)

## கொக்குவிலில் திருட்டு

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் மஞ்சவனப் பதி ஆலயத்தின் முன்பாகவுள்ள வளைவு ஒன்றின் இரும்புக் கேற்நேற்று முன்தினம் இரவு திருடர்களால் சுமார் 40 ஆயிரம் ரூபா பெறுமதியான குறித்த இரும்புக் கேற் கொக்குவில் மஞ்சவனப் பகுதி ஆலயத்தின் தேர் முட்டிக்கு முன்பாகவுள்ள வெற்றுக்காணிக்குள் போடப்பட்டிருந்தது.

நேற்று முன்தினம் இரவு 10.00 மணிக்கு அப்பகுதிக்கு வந்த திருடர்கள் குறித்த கேற்றை ஏற்றிச் சென்றுள்ளதாகத் தெரிய வருகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பில் யாழ்.பொலிஸ் நிலையத்தில் பாதிக்கப்பட்டவர்களால் நேற்று முன்தினம் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருப்பதாகவும் தெரியவருகின்றது. (பா)

## பொதுக்கூட்டம்

யா/மட்டுவில் சந்திரபுர ஸ்கந்த வரோதய மகாவித்தியாலயத்தின் அபிவிருத்திச் சங்க வருடாந்த பொதுக்கூட்டம் இன்று பி.ப.2.30 மணிக்கு பாடசாயின் பிரதான் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

## திருட்டுக்கள் பலவிதம் அதில் இதுவும் ஒன்று

(யாழ்ப்பாணம்)

இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான நூறு புறாக்கள் கொழும்புத்துறைப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இருந்து நேற்று அதிகாலை திருடர்களால் அபகரித்துச் செல்லப்பட்டுள்ளது.

கொழும்புத்துறை மூன்றாம் குறுக்குத் தெருவில் உள்ள வீடு ஒன்றில் வேறு இடங்களில் இருந்து கொண்டு வரப்பட்டு இந்த நல்ல இனப்புறாக்கள் வளர்க்கப்பட்டு வந்துள்ளது. இதனைச் சாதகமாகப் பயன்படுத்திய திருடர்கள் வீட்டிலிருந்தவர்கள் உறக்கத்தில் இருந்தபோது இரவு 11.30 மணிக்கு பிற்பாடு திருடர்களால் அபகரித்துச்செல்லப்பட்டுள்ளது.

இதுபோன்று ஏற்கனவேய் நான்கு நாட்களுக்கு முன்னர் பிறிதொரு வீட்டில் இவ்வாறு புறாக்கள் காணாமற் போயிருப்பதாகவும் தெரியவகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பாக பாதிக்கப்பட்டவர்கள் நேற்று பிற்பகல் யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்திருப்பதாகவும் தெரியவருகின்றது. (பா)

## ஓமந்தையில் சிறுபோகம்; பணிகள் ஆரம்பம்



ஓமந்தைக் கிராமத்தில் சிறுபோகச் செய்கையினை பணிகள் முழு வீச்சில் ஆரம்பிக்கப் பட்டுள்ளன. 2012 ஆம் ஆண்டு டிசம்பர் 2013 ஜனவரி காலப் பகுதிகளில் அதிகளவான மழை பெய்ததினால் காலபோகச் செய்கையில் விவசாயிகள் பெரதும் நட்டம் அடைந்தனர் அதனை நிவர்த்தி செய்யும் வகையில் விவசாயிகள் குறைந்த காலப்பகுதியில் அதிகளவு விளைச்சல் தரக்கூடிய நெல்லினங்களைத் தெரிவு செய்து தரக்கூடிய நெல்லிணங்களைத் தெரிவு செய்து தரக்குகூடிய நெல்லினங்களைத் தெிவு செய்து சிறுபோக செய்கையில் ஈடுபடுவதனை காண முடிகின்றது. (139)

## உதவிப் பணம் பெறுவதற்கு 12 கிலோமீற்றர் நடைப்பயணம்

கிளிநொச்சியில் உள்ள றெட்பானா மாணிக்கபுரம், வள்ளுவர்புரம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த முதியோர்கள் தமது முதியோர்களுக்கான ஆயிரம் ரூபா மாதாந்தக் கொடுப்பனவைப் பெறுவதில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாக அவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இக்கிராமங்களுக்கென் பொது தபால் நிலையம் இல்லாமையால் தாம் இக்கொடுப்பனவைப் பெற 12 கிலோமீற்றர் தூரம் நடந்து சென்று விஸ்வமடுவில் உள்ள தபாலகத்திலே பெற்றுக கொள்ள வேண்டியுள்ளதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

எனினும், அவ்வளவு தூரம் நடந்து வந்தும் விஸ்வமடு தபாலகத்தில் உள்ள அதிகாரிகள் சினத்துடன் செயற்படுவதாகவும் இத்னால் தாம் கொடுப்பனவை பெறமுடியாது திரும்பிச் செல்வதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

மீள்குடியேறி மிகவும் பின்தங்கிய நிலையில் வாழ்ந்து வரும் நாம் வாழ்வாதார ரீதியாக கஷ்டப்படுவதாகவும் இந்நிலையில் அதிகாரிகளின் சில செயற்பாடுகளால் தாம் கவலையடைவதாகவும் அவர் தெரிவிக்கின்றனர்.

எனவே இக்கிராம மக்களின் நலன்கருதி இக்கிராமத்திற்கென உபதபாலகம் ஒன்றை அமைக்க உரிய் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர்கள கோரிக்கை விடுகின்றனர்.

## மண்டைதீவில் இந்திய வீட்டுத்திட்டம்; 186 குடும்பங்கள் பயனடையும்

(மண்டைதீவு)

மண்டைதீவுக் கிராமத்தில் முதற்கட்டமாக 186 குடும்பங்கள் இந்திய வீட்டுத்திட்டத்தினால் நன்மை பெற்றுள்ளன.

மண்டைதீவுக் கிராமத்தின் ஜே/07, ஜே/08, ஜே/09 ஆகிய கிராம சேவகர் பிரிவுகளில் இருந்து தெரிவு செய்ய, இந்தக் குடும்பங்களுக்கான வீடு நிர்மாணம் குறித்த ஆரம்பக்கூட்டம் நேற்று முன்தினம் மண்டைதீவு மகா வித்தியாலயத்தில் இருபிரிவுகளாக இடம்பெற்றுள்ளன.

இதன்படி இந்திய வீட்டுத்திட்டத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு, அவர்களது வங்கிக் கணக்குகளில் முதற் கட்டமாக நிதியும் வைப்பிலிடப்பட்டுள்ளது.

சுமார் ஐந்தரை இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப் படவுள்ள இந்த இந்திய வீட்டுத்திட்டத்தின் நிர்மாணப்பணிகள் நான்கு கட்ட நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளது.

முதற்கட்டமாக ஒரு இலட்சம் ரூபாவும், இரண்டாம், மூன்றாம கட்டமாக இரண்டு இலட்சம் ரூபாவும், இறுதியாக 50 ஆயிரம் ரூபாவும் பயனாளிகள் கணக்கில் வைப்பிலிடப் படவுள்ளது.

சம்பத் வங்கியின் ஊர்காவற்றுறைக் கிளையின் ஊடாகவே பயனாளிகளுக்கான நிதி வழங்கப்படவுள்ளதுடன், 6 மாதங்களில் இந்த வீட்டுத்திட்டம் பூர்த்தியாக்கப்படவேண்டும் என்றும் பயனாளிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (பா)

## வேள்ட் விஷன் நிறுவனத்தால் பிரதேச அபிவிருத்தித் திட்டம்

(வலிகாமம்)

வலிகாமம் மேற்கில் பிரதேச அபிவிருத்தித் திட்டம் (Area Development Project) ஒன்றை மேற்கொள்வதற்கு வேள்ட் விஷன் லங்கா நிறுவனம் முன் வந்துள்ளது.

இதன்படி இந்நிறுவனம் 15 ஆண்டுகள் குறித்த பிரதேசத்தில் சிறுவர்களை மையமாகக் கொண்டு திட்டங்களை ஆரம்பிக்கவுள்ளது.

இத்திட்டத்தின் முதற்கட்டமாக 19 கிராம சேவகர் பிரிவுகள் தெரிவுசெய்யப்படவுள்ளதுடன், இக்கிராம சேவகர் பிரிவுகளில் உள்ள ஒன்பது வயதுக்குட்பட்ட சிறுவர்கள் தொடர்பான விபரங்கள் சேகரிக்கும் பணிகள் தற்போது இடம் பெற்றுவருகின்றன.

ஏற்கனவே வாழ்வாதாரம், சுகாதராம், கல்வி, சமூகப் பிரச்சினைகள் ஆகிய விடயங்களை உள்ளடக்கியதாக மக்களின் தேவைகள், பிரச்சினைகள் இனங் காணப்பட்டு திட்ட வரைபுகள் தயாரிக்கும் செயற்பாடுகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன்படி இத்திட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்ட 19 கிராம சேவகர்கள் பிரிவுகளாக,

வட்டு. வடக்கு ஜே/158, சங்கரத்தை ஜே/159, அராலி மேற்கு ஜே/160, அராலி மத்தி ஜே/161, அராலி தெற்கு ஜே/162, அராலி கிழக்கு ஜே/163, அராலி வடக்கு ஜே/164, அராலி தெற்கு ஜே/165, வட்டு. மேற்கு ஜே/167, தொல்புரம் கிழக்கு ஜே/168, தொல்புரம் மேற்கு ஜே/169, பொன்னாலை ஜே/170, மூளாய் ஜே/171, சுழிபுரம் மத்தி ஜே/173, சுழிபுரம் கிழக்கு ஜே/174, பண்ணாகம் ஜே/175, பனிப்புலம் ஜே/176, சங்கானை தெற்கு ஜே/180, சங்கானை மத்தி ஜே/181.

மேற்படி கிராம சேவகர் பிரிவுகளில் வேள்ட் விஷன் நிறுவனமானது சிறுவர்களை மையமாகக் கொண்டு இத்திட்டங்களை எதிர்வரும் 15 ஆண்டுகளுக்கு மேற்கொள்ளவுள்ளது.

இதற்கான கள ஆய்வுகள் பிரச்சினைப் பகுப்பாய்வுகள் ஆகியன மேற்கொள்ளப்படுவதாக நிறுவனத் தகவல்கள் தெரிவித்துள்ளன. (55)

## சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

ஈ-சிற்றி ஆங்கிலக் கல்லூரியில் ஆங்கில டிப்ளோமா கற்கைநெறிகளைப் பூர்த்தி செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு 28 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு யாழ்ப் பாணம் மின்சாரநிலைய வீதியில் அமைந்துள்ள ஞானம்ஸ் விருந்தினர் விடுதியில் நடைபெறவுள்ளது.

கல்லூரியின் தலைவர் ஜெ.றஜீவனின் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு சான்றிதழ்களை வழங்கிவைப்பார்.

## பாலம் புனரமைப்பால் போக்குவரத்து தடை

(அரியாலை)

அரியாலை கனகரத்தினம் வீதியில் செம்மணி வீதியை அண்மித்த பகுதியில் பிள்ளையார் கோவிலின் பெரிய குளத்தையும், வயல்வெளிக்குளக் கால்வாயையும் இணைக்கும் பாலம் தற்போது புனரமைக்கப்பட்டு வருகின்றது.

முன்னர் இப்பாலம் புனரமைக்கப்படாமல் போக்குவரத்து பெரும் சிரமத்தின் மத்தியில் இடம்பெற்றுவந்த நிலையில், தற்போது இப்பாலம் புனரமைக்கப்படுவதால் இனிவரும் காலங்களில் இதனூடான போக்குவரத்து சிரமமற்றதாகக் காணப்படும் என மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதேவேளை இப்பாலம் புனரமைக்கப்படுவதால் தென்புறமாக சுப்பிரமணியம் வீதியும், வடக்குப்புறமாக உள்ள வீதிச்சந்தியும் போக்குவரத்துக்குத் தடைசெய்யப்பட்டுள்ளது.

இப்பாலம் புனரமைக்கப்படாமை குறித்தும், இதனால் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் முன்னர் தினமுரசு சுட்டிக் காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (23)

## கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் "நிலவும் சுடும்" நாளை வெளியீடு

(அச்சுவேலி)

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி ஆசிரியை திருமதி சிவலிங்கம் இராஜினிதேவியின் 'நிலவும் சுடும்' சிறுகதைத் தொகுப்பு நூல் வெளியீடு நாளை சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மண்டபத்தில் கல்லூரியின் அதிபர் இ.இராஜசேகரம் தலைமையில் இடம் பெறவுள்ளது.

மனித உறவுகளின் அடிச்சுடரான அன்பின் நெகிழ்ச்சி, சக மனிதன் மீதான நேசம், நலிந்தவர்களுக்கு உதவும் பண்பு, வசதி படைத்தவர்களின் வரட்டுக் கௌரவம், எனப் பல அம்சங்களையும் தாங்கி வெளிவரும் இச்சிறுகதைத் தொகுப்பு நூலின் வெளியீட்டுரையினை யாழ்ப்பாண பல்கலைக்கழக ஓய்வுநிலை தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் சிவலிங்கராஜா, நூல் அறிமுக உரையினை புத்தூர் சோமஸ்கந்தாக்கல்லூரியின் அதிபர் இ.இராஜமகேந்திரன் மற்றும், ஆசிரியர் சு.சிவநேசராஜன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

நூலின் முதற்பிரதியை ஆசிரியர் ம.கணேசானந்தன், சிறப்புப் பிரதியை ஆசிரியர் திருமதி சு. வெனான்சியஸ் ஆகியோர் பெறவுள்ளனர்.

நூல் அறிமுக உரைகளை யாழ். புத்தூர் சோமாஸ்கந்தாக் கல்லூரி அதிபர் இ.இராஜமகேந்திரன், ஆசிரியர் சு.சிவநேசராஜன் ஆகியோர் ஆற்றவுள்ளனர். ஏற்புரையையும் நன்றியுரையையும் நூலாசிரியர் சி.இராஜினிதேவி நிகழ்த்தவுள்ளார். (03,90)

## பாடல் இறுவட்டு வெளியீடு

வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் க. பரந்தாமனினால் கலை வளர்ச்சியை மையப்படுத்திய பாடல் இறுவட்டு வெளியிடப்பட்டது.

வவுனியா வடக்கு பிரதேச செயலாளராக சேவையாற்றி வரும் இவரினால் வவுனியா வடக்கு பிரதேசத்தின் கலை அம்சங்கள், அதன் வளர்ச்சி, பிரதேசத்தின் செழிப்பை உள்ளடக்கி 'கலைத்தாயை பணிவோமடா' எனும் பாடல் இறுவட்டினை வெளியிட்டுள்ளார்.

பிரதேச செயலாளரினாலேயே பாடல் இயற்றி, பாடப்பட்ட இவ்இறுவட்டுக்கு கண்ணன் இசைக்குழுவினர் இசை அமைத்துள்ளனர். (160)

## கொட்டடி கிராம அபிவிருத்திச் சங்கத்தின் புத்தாண்டு விழாவும், கௌரவிப்பும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கொட்டடி கிராம அபிவிருத்திச் சங்கத்தின் புத்தாண்டு விழாவும், சேவையாளர்கள் கௌரவிப்பும் எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 மணிக்கு, கொட்டடி சனசமூக நிலைய கலையரங்கில் கலாநிதி நா.தனேந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ளன.


இந்நிகழ்வில் பிரதம அதிதியாக யாழ். பல்கலைக்கழகம், கல்வியியற்துறை பேராசிரியர் மா.சின்னத் தம்பி கலந்து கொள்ளவுள்ளார்.

மேலும் சிறப்பு அதிதிகளாக யாழ்.பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் அ.யூட், தபாலதிபர் க.கேதீஸ்வரன், ஆசிரியர் இரா.செல்வவடிவேல், கொட்டடி சனசமூக நிலையத்தலைவர் ஜே. சுஜீந்திரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் க.பொ.த. உயர்தர பரீட்சையில் சிறப்புச் சித்திபெற்றவர்களுக்கு புலமைப்பரிசில்கள் வழங்கலும், சமூக சேவையாளர்கள் கௌரவிப்பு நிகழ்வும் இடம்பெறவுள்ளன.

விசேட நிகழ்வாக சுழிபுரம் பெரியபுல அண்ணா சனசமூக நிலைய முத்தமிழ் கலா மன்றம் வழங்கும் எம்.நாகராஜா வின் 'பப்பரவாஜன் வடமொழி நாட்டுக்கூத்தும்' மேடையேற்றப் படவுள்ளன.

இவ்விழாவில் 'சமூக திலகம்' விருதினை, பேரம்பலம் நாகரட்ணம், ந.சத்தியரூபன், மீ.லாபீர், கு.விக்னேஸ்வரன், சி.ஜெயசங்கர், அ.கனியூட்னெஸ், சு.சுந்தரலிங்கம், கை. விக்னேஸ்வரன், டாக்டர் செல்வி. ரி.சபாரட்ணம், செ.கதிர்காமத்தம்பி ஆகியோர் பெறவுள்ளனர். (105)





கல்வியங்காடு வீரபத்திரர் ஆலயத்தில் இடம்பெற்ற தேர் உற்சவத்தின்போது சுவாமி எழுந்தருளுவதையும், தேர் வீதியூலா வருவதையும், அடியவர் ஒருவரின் பறவைக் காவடியையும் காணலாம். (137)

நம்பிக்கை குறையும் போது ஒவ்வொரு மனிதனும் நெறியற்ற கொள்கையை மேற்கொள்கிறான். - ஜான்மில்டன்.

தினப்பதிப்பு தினமுரசு THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## பாடுவதை நிறுத்தித் தேடுங்கள்!

வெள்ளத்தில் அகப்பட்டவன் பற்றிப் பிடிப்பதற்கு ஒரு சிறு கட்டை கிடைத்தாலும் அதன்மீது பெருநம்பிக்கை வைப்பதும், பின்னர் கட்டையுடன் சேர்த்து வெள்ளத்தில் அடிபட்டுப் போகும்போது கவலை கொள்வதும் போலவே நமது ஊடகங்கள், ஆய்வாளர்களும் காலத்துக்குக் காலம் ஏதேதோ கானல் நம்பிக்கைகளைக் காட்டிக் காட்டி தமிழ்மக்களை தொடர்ந்து வெள்ளத்தில் மூழ்க வைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

ஜெனீவா மகாநாடு, அமெரிக்க அழுத்தம், ஆட்சியில் இல்லாவிட்டால் ஆவேசப்படும் கருணாநிதி, மத்திய அரசை மிரட்ட நம்மைப் பயன்படுத்தும் ஜெயலலிதா, பின்னர் தமிழக மாணவரின் போராட்டம் என்று ஒவ்வொன்றையும் ஒவ்வொரு காலத்தில் ஊதிப் பெருப்பித்து மக்களிடம் வெற்று நம்பிக்கைகளை உருவாக்குவதும் – அவை கலைந்து போனது கண்டாலும் அதுபற்றி சுயவிமர்சனம் ஏதும் செய்து கொள்ளாமலே அடுத்த கற்பனையில் மிதக்கவிட கட்டை ஒன்றைத் தேடுவதுமாக... தாங்களும் ஏமாந்து மக்களையும் ஏமாற்றிக்கொண்டிருக்கிறார்கள்.

• ஜெனீவாவில் அமெரிக்காவும் மேற்குலகும் செய்வது, தங்களது ராஜதந்திர தேவைகளுக்கான சிறுசிறு மிரட்டல்களே தவிர, இலங்கைத் தமிழ்மக்களுக்கான தீர்வின் அக்கறை அல்ல என்பது நம்மெல்லோருக்குமே நன்கு தெரியும். இருந்தாலும் அதிலேயே சில காலம் தொங்கியாடிப் பின்னர் தொய்ந்து போவதைத் தொடர்ந்து வருடாவருடம் செய்துவருவது குறித்து யாரும் கேள்வி கேட்டதுமில்லை; திரும்பத் திரும்ப ஏமாறுவது பற்றி வெட்கப்பட்டதுமில்லை.

கருணாநிதி, ஜெயலலிதாவின் ஏட்டிக்குப் போட்டி வீரப் பேச்சுகளெல்லாம் அங்கு வந்த – வரப்போகும் தேர்தல் காலங்களுக்குரிய வேடிக்கைக் காட்சிகள்தான் என்பதும் நமக்குத் தெரியும். அடுத்த வருடம் தேர்தல் நடந்து முடிந்த பிறகு அவர்களது சூடாறிவிடும் என்பது தெரிந்தும், அவர்களது கதையளப்பிலிருந்து கூட ஏதாவது "காலக்கனிவை" சுட்டிக்காட்டி ஏமாற்றுப் பந்தல் போடுவதை நிறுத்துவதில்லை இவர்கள். மக்களும் நூற்றெட்டாவது தடவையாகவும் அதன்பின்னால் கொஞ்சதூரம் இழுபட்டுவிட்டு ஏமாந்து திரும்பத் தயார்?

தமிழக மாணவர் எழுச்சி பற்றியும் எத்தனை விதமாய் நம்பிக்கையூட்டி எழுத ஆரம்பித்தார்கள் இந்தச் சில நாட்களுக்குள்! தமிழக மாணவர்களின் கோரிக்கைகளில் இருந்தவை வெறும் உணர்ச்சியாவேசங்கள்தானே தவிர நடைமுறைக்குச் சாத்தியமானவை பற்றியோ உண்மையில் ஏதாவது நடக்க வேண்டும் என்ற அக்கறையோ காணமுடியவில்லை. இத்தனைக்குப் பிறகும் தனித்தமிழீழம் என்று அவர்கள் பொங்குவதில், வரலாற்றுப் பட்டறிவுடன் உள்ள நமக்கு நம்பிக்கை வைக்க என்ன இருக்கிறது? அதிலிருந்தெல்லாம் நமது மக்களுக்கு நம்பிக்கைக்கீற்றைக் காட்ட நினைக்கும் அரைவேக்காட்டில்தான் நமது ஆய்வாளர்களின் பக்குவம் இருப்பதை அறியநேர்வது எத்தனை பெரிய தமிழ்த்துயரம்!

இப்போது மாணவர்களும் அடங்கிவிட்டார்கள். அல்லாவிடினும் இந்திய அரசின் உளவுப்பிரிவுகளால் அடக்கப்பட்டு விடுவார்கள் என்பதும் நமக்குத் தெரியும். தெரிந்துகொண்டும் இப்படியான சிறு சிறு துரும்புகளைப் பற்றி ஏமாந்துகொண்டும் ஏமாற்றிக்கொண்டும் இருப்பதாகவே நம் "தமிழ் விவேகம்" இருக்கிறது.

முதலில், வெள்ளத்திலேயே நிற்பதாகக் கற்பனை பண்ணிக்கொண்டு, பிடிக்கத் துரும்புகள் தேடித் துழாவிக் கொண்டிருக்கும் இவர்கள் செய்கையிலேயே இவர்களின் முழு அபத்தமும் இருக்கிறது. பேசுவதற்கும் தீர்வொன்றை அடைவதற்கு நடைமுறைச் சாத்தியமானதிலிருந்து தொடங்குவதற்கும் நமக்கு வாய்ப்புகள் உள்ளன. அதைத்தான் நாம் முயற்சி செய்ய வேண்டும். வெள்ளத்தில் இருப்பதாக பாவனை செய்துகொண்டு, மக்களை உண்மையிலேயே தத்தளிக்க வைத்துக்கொண்டிருக்கும் அபத்தத்தை இனி நிறுத்த வேண்டும்.

"நான் ஏரிக்கரை மேலிருந்து எட்டுத்திசை பார்த்திருந்து ஏந்திழைக்குக் காத்திருந்தேன் காணலே" என்று எசப்பாட்டுப் பாடிக் கொண்டிருக்கும் இவர்களது அப்பாவி ஏமாற்றுத்தனத்தைக் கண்டித்து, "போங்கடா போய் ஊருக்குள்ள தேடுங்கடா" என்றுதான் சொல்ல வேண்டும் போலிருக்கிறது.

- ஆசிரியர்

# கல்வி நிர்வாகசேவை நியமனத்தில் அரசியல் தலையீடென வழக்கு

(கொழும்பு)

இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கான பரீட்சை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை புறக்கணித்துவிட்டு, பரீட்சையில் தோற்றாத ஆளும்கட்சி ஆதரவாளர்களுக்கு நியமனங்களை வழங்குவதற்கு அரசாங்கம் எடுத்துள்ள முடிவை இரத்துச் செய்யவேண்டும் என்று இலங்கை ஆசிரியர் சங்கம் வழக்கு ஒன்றை தாக்கல் செய்துள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனுவில் கல்வி அமைச்சரும், அதிகாரிகளும் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கான இந்தப் பரீட்சையில் 37 ஆயிரத்திற்கும் அதிகமானோர் பரீட்சை எழுதியதாகவும், அதில் 410 பேர் தேறியதாகவும் அந்த மனுவில் கூறப்பட்டுள்ளது.

இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை புறக்கணித்துவிட்டு, பரீட்சையில் தோற்றாத அரசியல் செல்வாக்குப் பெற்ற 600 இற்கும் அதிகமானோருக்கு நியமனம் வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகவும் ஆசிரியர் சங்கம் தமது மனுவில் கூறியுள்ளது.

இந்த மனுவை விசாரணைக்கு ஏற்றுக்கொண்ட மேன்முறையீட்டு நீதிமன்றம் 15 ஆம் திகதி விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளது.

# கண்பார்வையற்ற மாணவனுக்கு மும்பையில் சத்திர சிகிச்சை

கண் பார்வை இழந்த நிலையிலும் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் 3ஏ சித்திகளைப் பெற்று சாதனை படைத்த மாணவன் சொர்ண லிங்கம் தர்மதனின் கண் சிகிச்சைக்காக முதல் கட்டமாக 6 இலட்சத்து 29 ஆயிரம் ரூபாவுக்கான காசோலையை நேற்று முன்தினம் வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி தர்மதனிடம் வழங்கினார்.

மே 30 ஆம் திகதி கண் சத்திரசிகிச்சைக்காக மாணவன் தர்மதன் மும்பையில் உள்ள கண் வைத்தியசாலைக்குச் செல்லவுள்ளார். இவருக்கு உதவியாக அவரது தந்தை செர்ணலிங்கம் செல்வதற்கு அனுமதியளிககப் பட்டுள்ளது.

க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சாதனை படைத்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்றபேறது தர்மதனின் நிலையைத் தெரிந்துகொண்டு மனம் நெகிழ்ந்த ஆளுநர் தர்மதனுக்காக சிகிச்சையை மேற்கொள்ள முடியுமா என ஆராயுமாறு பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி ஆ.கேதீஸ்வரனைக கேட்டுக்கொண்டார. மும்பையில் இருந்து வருகைதந்திருந்த கண் சத்திரசிகிச்சை நிபுணர் ஒருவரிடம் தர்மதன் காண்பிக்கப்பட்டபோது அவரை மும்பைக்கு அழைத்து வருமாறும், சத்திரசிகிச்சை மூலம் அவருக்கு ஒரு கண் பார்வையை வழங்க முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

பத்து வயதில் பொக்கிளிப்பான் நோயின் காரணமாக தர்மதன் தனது இரண்டு கண் பார்வையையும் இழந்திருந்தார். இரண்டு மாத இடைவெளியில் இரண்டு சத்திரசிகிச்சைகள் மேற்கொள்ள வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி சிகிச்சைக்குத் தேவையான செலவுகளை வழங்குவதற்கு வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி முன்வந்துள்ளார். (137)

## யாழ்ப்பாணம் – கொழும்புக்கான குளிரூட்டப்பட்ட அரச பேருந்துசேவை

இலங்கை போக்குவரத்துச் சபையினால் மக்களின் நன்மை கருதி விசேட சேவையாக குளிரூட்டப்பட்ட பேருந்து சேவை நடைபெற்று வருவதாக இ.போ.ச. வடபிராந்திய முகாமையாளர் செ.அ.அஸ்கர் தெரிவித்துள்ளார்.

இச்சேவையானது புறக்கோட்டை மத்திய பேருந்து நிலையத்தில் இருந்து இரவு 8.30, 10.00 மணிக்கும் இரண்டு சேவைகளாக இடம்பெற்று வருகின்றன. இதற்கான ஒருவழிக்கட்டணம் ரூபா 950.00 இதற்கான ஆசனப் பதிவுகளை யாழ்.மத்திய பேருந்து நிலையத்திலும், கொழும்பு மத்திய பேருந்து நிலையத்திலும் மேற்கொள்ளமுடியும்.

பொதுமக்களின் நன்மை கருதி இச்சேவை வெள்ளவத்தை வரை நீடிக்கப்படவுள்ளது. அத்துடன் வெள்ளவத்தையில் ஆசனப் பதிவு செய்வதற்கான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படுகின்றது. வெள்ளவத்தையில் ஆசனப்பதிவு செய்யப்படும் இடம் தொடர்பான விபரம் விரைவில் பொது மக்களுக்கு அறிவிக்கப்படும் என அவர் தெரிவித்தார்.

# எரிபொருள் மானியத்தில் முறைகேடு மன்னார் மீனவர்கள் விசனம்

கடற்றொழில் அமைச்சால் வழங்கப்படுகின்ற மண்ணெண்ணெக்கான எரிபொருள் மானியம் தங்களுக்கு உரிய முறையில் வழங்கப்படுவதில்லை என்பதுடன், அதில் முறைகேடுகள் இடம் பெறுவதாகவும் மன்னார் மாவட்ட மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

எரிபொருள் விலையேற்றப்பட்டதைத் தொடர்ந்து அரசாங்கம், மீனவர்களுக்கு மானிய அடிப்படையில் எரிபொருளை வழங்க முன்வந்தது. இந்த நிலையில், மீனவர் ஒருவருக்கு ஒரு மாதத்துக்கு 9,375 ரூபா பெறுமதியான மானிய முத்திரை வழங்கப்பட்டு வந்தது. இந்த மானிய அடிப்படையில் மீனவர்கள் எரிபொருளைக் கொள்வனவு செய்து வந்தனர்.

தற்போது மார்ச் மாதத்திற்கான மானிய முத்திரைகள் வழங்கப்படுகின்றன. இந்த நிலையில், ஒவ்வொரு மீனவ சங்கங்களிலும் பல மீனவர்களுக்கு மானிய முத்திரை வழங்காது அநாவசியமான காரணங்களைக் கூறி முத்திரை இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

தெரிவுசெய்யப்பட்ட அனைத்து மீனவர்களுக்கான மானிய முத்திரைகளை கடற்றொழில் அமைச்சு, மன்னார் மாவட்ட உதவி கடற்றொழில் பணிமனைக்கு அனுப்பிவைக்கின்றது. ஆனால் இங்குள்ள அதிகாரிகள் சிலர் அநாவசியமான காரணங்களைக் கூறி பல மீனவர்களுக்கு மானிய முத்திரைகளை வழங்காதுள்ளதுடன், அதனை அவர்கள் தங்களது தேவைக்குப் பயன்படுத்துவதாகவும் மீனவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இதனால் பாதிக்கப்பட்ட மீனவர்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும் மன்னார் மாவட்ட மீனவர்கள் கூறியுள்ளனர்.

'இது தொடர்பில் மன்னார் மாவட்ட கடற்றொழில் உதவிப் பணிப்பாளர் வி.எஸ்.மெராண்டாவிடம் கேட்டபோது,

மன்னார் மாவட்டத்தில் மீனவர்களுக்கு தற்போது வழங்கப்படுகின்ற எரிபொருளுக்கான மானிய முத்திரைகளில் 10 சதவீதமான முத்திரைகளை கடற்றொழில் அமைச்சு குறைத்துள்ளது.

இந்த நிலையில் மார்ச் மாதத்தில் 2,900 பேருககு எரிபொருள் மானிய முத்திரைகள் தேவை என கடற்றொழில் அமைச்சுக்கு விண்ணப்பித்திருந்தோம். ஆனால் 2,450 முத்திரைகளே கிடைத்துள்ளன. ஏனைய 450 முத்திரைகள் கிடைக்காத நிலையில் நிபந்தனைகளுக்கு உட்படாத 450 மீனவர்களுக்கு மார்ச் மாதத்திற்கான எரிபொருள் மானிய முத்திரைகளை வழங்க வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

கடற்றொழில் அமைச்சின் அறிவுறுத்தலுக்கு அமைய இலக்கம் இல்லாத படகுகள், துறைமுகத்தில் படகுகளை நிறுத்தி வைக்காமை, 20 தினங்களுக்கு குறைவாக படகுகள் கடற்றொழிலில் ஈடுபட்டமை, இயந்திரம் பழுதடைந்துள்ள படகுகள், 2 படகுகளில் ஒரு இயந்திரம் பயன்படுத்துதல், படகுத் தொகுதிக்கான புதிய பதிவுகள் மேற்கொண்டமை ஆகிய காரணங்களை வைத்து 450 மீனவர்களுக்கான எரிபொருள் மானிய முத்திரை இரத்துச் செய்யப்படவுள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்தக் காரணங்கள் அனைத்தும் கடற்றொழில் அமைச்சினால் அமுல்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.




# விடுதலைப் புலிகளை அழித்த ஊடகங்கள்

## 36

**வே. அர்ச்சுணன்**

**கிளிநொச்சி மாவட்ட பாடசாலை ஒன்றின் ஆசிரியராக கடமையாற்றிய இந்த நாடாளுமன்ற உறுப்பினர் இறுதிவரைக்கும் தீபனுடன் முரண்பட்டுக் கொண்டே இருந்தவர். தீபன் உயிருடன் இருந்த காலப்பகுதியில் இவரை அவர் ஒரு பொருட்டாகவே கருதியதில்லை. ஏற்கனவே இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தில் இருந்த காலப்பகுதியில் பெரும் நிதிக் கையாடல்களிலும், மோசடிகளிலும் ஈடுபட்டு வந்ததாகக் கூறி புலிகளின் புலனாய்வுத் துறையினர் விசாரணைகளை மேற்கொண்டுவந்த சமயத்தில் இவர், தான் கேணல் தீபனின் மைத்துனர் எனக் கூறி தனது தவறுகளிலிருந்து விடுபட முற்பட்டார்.**



புலிகளின் முக்கிய தளபதிகளின் இழப்புகளைக் கண்டுகொள்ளாத தமிழ்ஊடகங்கள் புலிகள் பெரியளவிலான மரபுவழித்தாக்குதல் ஒன்றை நடாத்துவதற்கு தயாராகிவருவதாகவும் இந்தத் தாக்குதல் மூலம் யாழ். மாவட்டம் அல்லது வவுனியாவின் பெரும் பகுதியைக் கைப்பற்றி தங்களது கட்டுப்பாட்டில் வைத்திருப்பார்கள் என்ற தோரணையில் ஆய்வுக் கட்டுரைகளையும்,செய்திகளையும் வெளியிட்டு வந்தன.ஆனால் இயக்கமோ தளபதிகளின் இழப்புகளால் பல்வேறு நெருக்கடிகளைச் சந்தித்து வந்ததுடன் ஆயுத விநியோகமும் முற்று முழுதாகத்துண்டிக்கப்பட்டிருந்த நிலையில் அடுத்தகட்டத்திற்கு நகர முடியாத அளவிற்கு நெருக்கடிகளை சந்தித்துக் கொண்டிருந்தது.

இந்த நேரத்தில் தான் இருக்கின்ற வளங்களை வைத்துக்கொண்டு தற்காப்புச்சண்டைகளில் ஈடுபடவேண்டிய தேவை புலிகளிற்கு ஏற்பட்டது. பால்ராஜின் இழப்பு, தமிழ்ச் செல்வனின் இழப்பு, பாலசிங்கத்தின் இழப்பு என்பன புலிகளின் மனோவலிமையைக் கடுமையாகப் பாதித்திருந்த சூழ்நிலையில் படையினரின் மனோவலிமை அதிகரிக்கத் தொடங்கியது. அதாவது படையினர் கடுமையான முயற்சிகளை பெரியளவில் மேற்கொள்ளாமல் சிறியளவிலான தந்திரோபாயங்களின் ஊடாகவே தங்களது தாக்குதல்களை மேற்கொண்டு பெரியளவிலான இராணுவ வெற்றிகளை சந்தித்துக் கொண்டிருந்தனர்.

சண்டைகளிலே முன்அரங்கிலே நின்று போராடிய புலிப் போராளிகள் கூடுதலாக சாவைத்தழுவ வேண்டியநெருக்கடியான சூழ்நிலைகள் கிளிநொச்சியை படையினர் கைப்பற்றியதன் பின்னர் தொடர்ச்சியாக உருவாகத் தொடங்கியது. இதற்குப் பிரதான காரணம் தாக்குதல் அணிகளுக்கு கொமாண்டிங் செய்த புலிகளின் தளபதிகள் தான். "நீங்கள் சிறிய ஆயுதங்களால் தாக்குதல்களை நடத்திக் கொண்டிருங்கள், கிட்டு பீரங்கி படையணியினர் நீங்கள் குறிப்பிடும் பிக்ஸ்களில் ஆட்லறித்தாக்குதல்களை மேற்கொள்வார்கள். இதன் மூலம் படையினர் நிலைகுலைந்து சிதறி ஓடுவார்கள்" என்று கூறியே போராளிகள் களமுனைக்கு அனுப்பப்பட்டார்கள். ஆனால், கேணல் பானு, கிட்டு பீரங்கிப் படையணிக்கு எந்தவொரு கட்டளையையும் வழங்காமல் ஏனோ தானோ என்று நடந்துகொண்டார். அத்துடன் களமுனைகளில் ஆட்லறி எறிகணைகளை ஏவாத காரணத்தால் பெரிய ஆயுதங்களுடன் முன்னேறிய படையினரை எதிர்கொள்வது புலிகளிற்கு பெரும் சிக்கலாக இருந்தது. தளபதிகளின் உத்தரவுகளை எதிர்த்தும் கதைக்கமுடியாமல் திண்டாடிய போராளிகள் குறிப்பாக வலுக்கட்டாயமாக இணைக்கப்பட்ட பல போராளிகள் இந்தக் களமுனைகளில் சாவைத் தழுவவேண்டிய துர்ப்பாக்கிய நிலை உருவாகத் தொடங்கியது.

இத்தகைய மரணங்கள் கிளிநொச்சியில் இருந்து முள்ளிவாய்க்கால் வரை தொடர்ச்சியாக இடம்பெற்றுக் கொண்டிருந்தன. தினமும் இருபது தொடக்கம் முப்பதிற்கும் மேற்பட்ட விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் களமுனைகளில் இறக்கத் தொடங்கினர். இவ்வாறு இறந்த போராளிகளின் உடல்களை முழுமையாகக் கைப்பற்ற முடியாத நிலைமை தொடர்ச்சியாக நீடித்து வந்தது. சில சந்தர்ப்பங்களில் போராளிகளின் உடல்கள் முழுமையாகச் சிதைவடைந்த சூழ்நிலையில், போராளிகளின் வீடுகளுக்கு உடல்களை வழங்கிவந்த புலிகள் அந்தப் போராளிகளின் உடல்களில் ஒரு பகுதியையும், மிகுதி உடலத்திற்கு வாழைக் குற்றிகளை சவப்பெட்டிகளில் வைத்து பொதிசெய்து வீடுகளில் ஒப்படைத்து "இந்த பொடி சீல் செய்யப்பட்டுள்ளது இதனை உடைக்கமுடியாது" என்று கூறி ஆயுதங்களுடன் காவலுக்கு போராளிகளை நிறுத்தி வைத்திருந்தனர்.

இவ்வாறு அடிக்கடி செய்து வந்த சூழ்நிலையில் ஒருதடவை விசுவமடுப் பகுதியில் பொதிசெய்யப்பட்ட உடலத்தை உடைத்துக் காட்டவேண்டும் என இறந்தவரின் உறவினர்கள் கதறி அழுதபோது பெரும் சிக்கலை எதிர்கொண்ட புலிகள் உடனடியாக மாவீரர் பணிமனைக்குப் பொறுப்பாக இருந்த பொன். தியாகம் அப்பாவுடன் தொடர்புகொண்டு, இந்தச் சிக்கலை தீர்த்து வைப்பதற்கு முன்வருமாறு அழைத்தனர். பொன் தியாகம் அப்பா உடனடியாக சம்பந்தப்பட்ட வீட்டு உரிமையாளர்களுடன் கதைத்து படாத பாடுபட்டு சமரசத்தை ஏற்படுத்தினார்.

இவ்வாறு போராளிகளின் உடலங்களை வழங்குவதிலும் பல்வேறு நெருக்கடிகளைப் புலிகள் சந்தித்துக்கொண்டிருந்த சூழ்நிலையில் வன்னிக் களமுனை கடும் நெருக்கடிகளைச் சந்தித்துக்கொண்டிருந்தது. கிளாலியிலிருந்து நாகர் கோவில் வரையான முன்னரங்க நிலைகளை மிகவும் பிற்றாக அதாவது இறுக்கமாக வைத்திருந்த கேணல் தீபனிற்கு விடுதலைப் புலிகளின் தலைமைச் செயலகத்திலிருந்து அவசரமான அழைப்பு ஒன்று கிடைக்கிறது. அதாவது முகமாலையிலிருந்து நாகர்கோவில் வரையிலான முன்னரங்குகளில் உள்ள விடுதலைப் புலிகளை ஒருங்கிணைத்து உடனடியாக சுண்டிக்குளம் கல்லாறு ஊடாக பின் நகர்த்துமாறு அந்த உத்தரவு விடுக்கப்பட்டது. இந்த உத்தரவை மறுதலித்த கேணல் தீபன், தானும் தங்களது தளபதிகள், போராளிகள் அனைவரும் இந்தப் பகுதியிலிருந்து ஒருபோதுமே வெளியேறப் போவதில்லை எனவும், இறந்தாலும் இந்தப் பகுதியிலேயே தான் இறப்போம் என்றும் கூறி மறுத்துவிட்டார். இந்தப் பகுதியை இராணுவம் மீட்பதற்கு எடுத்த பல முயற்சிகளை முறியடித்து பல ஆயிரக்கணக்கான போராளிகள் தங்களது உயிர்களைத் தியாகம் செய்திருக்கிறார்கள். இந்தப் பகுதியின் ஊடாக நாங்கள் இராணுவத்தை இதுவரை முன்னேற விடவில்லை. இந்த நிலையில் நாங்கள் பின்வாங்குவது என்பது நினைத்துக்கூடப்பார்க்கமுடியாத விடயமென தீபன் கூறியபொழுது பதில் கூறமுடியாத தலைமைச் செயலகப் போராளிகள் உடனடியாக தீபனின் பதிலை விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவரிடம் தெரியப்படுத்தினர்.

இதனையடுத்து பிரபாகரன், கேணல் தீபனுடன் தொடர்புகொண்டு பின்வாங்குமாறு உத்தரவிட்டார். ஆனால், தீபன் இதற்கு மறுப்புத் தெரிவிக்கவே இருவருக்கும் இடையில் பெரும் முறுகலும், வாய்த்தர்க்கமும் ஏற்பட்டு இறுதியில் தீபன் அந்த மண்ணை இறுதித் தடவையாக முத்தமிட்டுவிட்டு பிரபாகரனின் கட்டளைக்கு இணங்க சுண்டிக்குளம் கல்லாறு ஊடாக பின்வாங்கத் தொடங்கினர்.


தீபனுடன் லோறன்ஸ் உள்ளிட்ட பல முக்கிய தளபதிகள் அந்த மண்ணை விட்டுப் பிரிய மனமின்றிப் பிரிந்தனர். அங்கிருந்து விலகிய கேணல் தீபன் பின்னர் மீண்டும் அந்த மண்ணிற்கு இறுதிவரைக்கும் செல்லமுடியாமல் போய்விட்டது. ஆனந்தபுரத்தில் படையினர் மேற்கொண்ட பொக்ஸ் ஒன்றை உடைக்கமுடியாமல் புலிகள் பெரும் நெருக்கடியைச் சந்தித்துக் கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் தீபன் அங்கே சாவைத் தழுவிக்கொண்டார்.

தீபனின் மைத்துனர் ஒருவரே தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கிறார். கிளிநொச்சி மாவட்ட பாடசாலை ஒன்றின் ஆசிரியராக கடமையாற்றிய இந்த நாடாளுமன்ற உறுப்பினர் இறுதிவரைக்கும் தீபனுடன் முரண்பட்டுக் கொண்டே இருந்தவர். தீபன் உயிருடன் இருந்த காலப்பகுதியில் இவரை அவர் ஒரு பொருட்டாகவே கருதியதில்லை. ஏற்கனவே இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தில் இருந்த காலப்பகுதியில் பெரும் நிதிக் கையாடல்களிலும், மோசடிகளிலும் ஈடுபட்டு வந்ததாகக் கூறி புலிகளின் புலனாய்வுத் துறையினர் விசாரணைகளை மேற்கொண்டுவந்த சமயத்தில் இவர் தான் கேணல் தீபனின் மைத்துனர் எனக் கூறி தன்து தவறுகளிலிருந்து விடுபட முற்பட்டார். புலனாய்வுத் துறையினர் தீபனுடன் தொடர்புகொண்டு நிலமையை தெரியப்படுத்திய போது தீபன், இந்த விடயத்தில் இறுக்கமாக முடிவுகளை எடுங்கள் எங்களைப் பயன்படுத்தி மக்களின் சொத்துக்களில் கைவைக்கும் இந்த மோசடிகளுக்கு இடமளிக்கக் கூடாது எனவும் இவருக்கு எதிராக நீங்கள் எடுக்கும் எந்த நடவடிக்கைக்கும் நான் குறுக்கே நிற்கமாட்டேன் எனவும் உறுதியாகச் சொல்லிவிட்டார்.

பின்னர் குறித்த நாடாளுமன்ற உறுப்பினரிற்கு என்ன நடந்தது? அவர் எப்படி வன்னியை விட்டுத் தப்பி ஓடிவந்தார்? தற்போது இறுதி யுத்தத்தை தான் சந்தித்தேன் என்று கதை அளந்து மக்களை ஏமாற்றும் நடவடிக்கையில் எவ்வாறு ஈடுபட முடிகிறது? இதைத் தமிழ் ஊடகங்கள் கண்டுகொண்டனவா? அல்லது கண்டும் காணாமல் கண்ணை மூடி விடுதலைப் புலிகளை அழித்தது போன்று கூட்டமைப்பையும் அழிக்க தமிழ் ஊடகங்கள் முடிவுகட்டிவிட்டனவா? என்பதைத் தொடர்ந்து பார்ப்போம்.

(தொடரும்)

# இருபக்க வர்த்தக விரிவாக்கம் விருப்பம் கொள்கிறது சீனா



(கொழும்பு)

இலங்கையுடன் இருபக்க வர்த்தகத்தை மேலும் விரிவுபடுத்திக் கொள்வதற்கும், இலங்கையில் முதலீடுகளை ஊக்குவிப்பதற்கும் சீனா விருப்பம் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை நேற்று முன்தினம் அலரி மாளிகையில் சந்தித்துப் பேசியபோதே, சீனாவின் உதவி வரத்தக அமைசசர் சென் ஜியான் இந்த விருப்பத்தை நேரில் வெளியிட்டுள்ளார்.


சீன உதவி வர்த்தக அமைசசருடன் உயர் மட்ட அதிகாரிகளைக் கொண்ட சீனக் குழுவொன்றும் ஜனாதிபதியை நேற்று முன்தினம் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளது.

இலங்கை உற்பத்திகள் சீனாவில் வேகமாகப் பிரபலமாகி வருவதாகவும், எதிர்காலத்தில் இன்னும் பல இலங்கை உற்பத்திப் பொருட்கள் சீனாவில் சந்தைப்படுத்தப்படும் வாய்ப்புகள் உள்ளதாக நம்புவதாகவும் சீன உதவி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மேலும், இலங்கையில் பெரியளவிலான திட்டங்களுக்கு மேலதிகமாக சிறிய மற்றும் நடுத்தரத் திட்டங்களிலும் முதலீடு செய்வதற்கான சீனாவின் விருப்பத்தையும் அவர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் வெளிப்படுத்தியுள்ளார்.

சீன வர்த்தக அமைச்சை சேர்ந்த உயர் அதிகாரிகள் பலரைக் கொண்ட இந்தக் குழு, இலங்கை அதிகாரிகளுடன், அடுத்த மூன்று தொடக்கம் 5 ஆண்டுகளுக்கான கூட்டு பொருளாதார மற்றும் வர்த்தக திட்டங்கள் தொடர்பாகப் பேச்சு நடத்தவுள்ளது.

# காலியில் குப்பை அள்ளிய அமெரிக்கத் தூதுவர்



கொழும்பு காலிமுகத்திடல் கடற்கரையில் அமெரிக்கத் தூதுவர் மிச்சேல் ஜே சிசன் குப்பைகளைச் சேகரித்து அகற்றும் பணியில் ஈடுபட்டார். கடந்த திங்கட்கிழமை கொண்டாடப்பட்ட உலக பூமி நாளை முன்னிட்டு, கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தினால், காலிமுகத்திடல் கடற்கரையை தூய்மைப்படுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அமெரிக்கத் தூதுவர் மிச்சேல் ஜே சிசன் இலங்கை மற்றும் அமெரிக்காவைச் சேர்ந்த 40 தூதரகப் பணியாளர்களுடன் இணைந்து காலிமுகத்திடல் கடற்கரையில் காணப்பட்ட குப்பைகளை சேகரித்து, இந்தத் தூய்மைப் படுத்தல் நடவடிக்கையில் ஈடுபட்டார்.

# பிரிட்டன் விசா விண்ணப்பங்களை இணையம் மூலம் சமர்ப்பிக்கலாம்

இணையத்தின் ஊடாக பிரித்தானிய விசா விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் மே மாதம் 6 ஆம் திகதி முதல் பிரித்தானியாவிற்கான சகல விசா விண்ணப்பங்களும் இணையத்தின் ஊடாக சமர்ப்பிக்கப்பட வேண்டுமென இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது. இனிவரும் காலங்களில் கையெழுத்து மூலம் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது எனக் குறிபபிட்டுள்ளது. விசா விண்ணப்பத்திற்கான நேர முகத்தேர்வின் விண்ணப்பங்களை கணனிப் பிரதி எடுத்துக் கொண்டு செலல முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நீதிச்சேவை ஆணைக்குழுவால் நீதிபதிகள் இடமாற்றம்

(கொழும்பு)

நீதிச்சேவை ஆணைக்குழுவினால் நீதவான் நீதிமன்ற நீதிபதிகள் பலபேர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

வருடாந்த இடமாற்றம் என்ற அடிப்படையில் எதிர்வரும் மே 2 ஆம் திகதி முதல் இந்த இடமாற்றம் இடம்பெறவுள்ளதாகவும் நீதிச்சேவை ஆணைக்குழு அறிவித்துள்ளது.

மன்னார் நீதவான் ஏ.பி.யூட்சன் கல்முனை நீதவான் நீதிமன்றத்திற்கும், கல்முனை நீதவான் நீதிமன்ற நீதிபதி எம்.ஐ.எம்.றிஸ்வான் வாழைச்சேனை நீதவான் நீதிமன்றத்திற்கும் இடமாற்றப்பட்டுள்ளனர்.

மேலும், சம்மாந்துறை நீதவான் செல்வி ஏ.கனகரட்னம் மன்னார் நீதவான் நீதிமன்றத்திற்கும் மட்டக்களப்பு மேலதிக நீதவான் கே.கருணாகரன் சம்மாந்துறை நீதவான் நீதிமன்றத்திற்கும், இடமாற்றப்பட்டுள்ளனர்.

இதேவேளை, மன்னார் நீதவான் ஏ.பி.யூட்சனை அமைச்சர் றிசாட் பதியுதீன் தொலைபேசி ஊடாக அச்சுறுத்தினார் என்ற குறறச்சாட்டு தொடர்பான வழக்கு விசாரணைகள் மன்னார் நீதிமன்றத்தில் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.



மின்கட்டண அதிகரிப்பிற்கு எதிராக நாடளாவிய ரீதியிலான கையெழுத்து வேட்டையை ஜே.வி.பி. நேற்று முன்தினம் ஆரம்பித்துள்ளதனைக் காணலாம்.

# அமெரிக்க வெளிநாட்டுக் கொள்கை இலங்கை விடயத்தில் சமநிலையற்றது

## அரசாங்கம் குற்றச்சாட்டு



(கொழும்பு)

இலங்கை தொடர்பான அமெரிக்காவின் வெளிநாட்டுக் கொள்கை சமநிலையற்றதாக இருப்பதாக இலங்கை குற்றம் சுமத்தியுள்ளது.

மத்திய வங்கியின் ஆளுனர் அஜித் நிவாட் கப்ரால் இந்த குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

போர்ப்ஸ் சஞ்சிகைக்கு அவர் எழுதியுள்ள அறிக்கை ஒன்றில் இந்த விடயத்தை சுட்டிக்காட்டியுள்ளார்.

சிறுபான்மை மக்களின் நல்லிணக்கம் தொடர்பில் அமெரிக்கா தொடர்ந்து இலங்கை மீது அழுத்தங்களைப் பிரயோகித்து வருகிறது. எனினும், மறுசீரமைப்பு விடயத்தில் ஏற்கனவே இலங்கை மேற்கொண்டுள்ள செயற்பாடுகள் தொடர்பில் அமெரிக்கா அவதானம் செலுத்தவில்லை என்று அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இதேவேளை, பொருளாதார ரீதியாக மிகவும் வேகமாக வளர்ந்து வரும் நாடு என்ற அடிப்படையில், இலங்கைக்கு அமெரிக்கா ஒத்துழைப்புகளை வழங்க மறுப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# நீதிபதிகளின் பணி இடமாற்றம் விசாரணை நடத்த விசேட குழு

(கொழும்பு)

நாட்டில் அண்மைக் காலத்தில் நடந்துள்ள நீதிபதிகளின் பணி இடமாற்றங்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்கு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் விசேடகுழு ஒன்றை நியமித்துள்ளது.

மூத்த சட்டத்தரணிகள் ஐந்து பேர் கொண்டதாக இந்தக் குழு அமையும். தலைமை நீதிபதியாக மொஹான் பீரிஸ் நியமிக்கப் பட்டதன் பின்னர் இலங்கையில் அறுபதுக்கும் அதிகமான நீதிபதிகள் இடமாற்றப்பட்டுள்ளனர் என்றும், விதிகள் கடைப்பிடிக்கப்படாமல் நீதிபதிகள் பணி இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர் என்றும் சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் வழக்கறிஞர் உபுல் ஜயசூர்ய கூறியுள்ளார்.

பழிவாங்கல் நடவடிக்கையாக நீதிபதிகள் சிலர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக புகார்கள் வந்துள்ள நிலையில், அது பற்றிய உண்மைகளைக் கண்டறிவதற்காக இந்த விசாரணை நடத்தப்படவுள்ளதாக ஜயசூர்ய கூறினார்.

விசாரணைகளை நடத்தி முடித்த பின்னர், இந்த இடமாற்றங்களின் நியாயங்கள் தொடர்பில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தலைமை நீதிபதியிடம் கேள்வி எழுப்பும் என்று உபுல் ஜயசூர்ய கூறினார்.

# மத வழிபாட்டுத் தலங்களுக்கான கட்டணங்களில் மாற்றமில்லை

(கொழும்பு)

மின்சாரக் கட்டணங்களில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளபோதும் மத வழிபாட்டுத் தலங்களுக்கான மின்சாரக் கட்டணங்களில் மாற்றம் ஏற்படுத்தப்படவில்லையென இலங்கை மின்சார சபையின் மேலதிக நிதி முகாமையாளர் பி. கே. குலதுங்க தெரிவித்தார்.

அண்மையில் மின்சார கட்டணங்களில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்ட போதும் ஏற்கனவே நடைமுறையிலுள்ள கட்டணங்களே மத வழிபாட்டுத் தலங்களுக்கு அமுலிலிருக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதற்கிணங்க பௌத்த, இந்து, இஸ்லாம் மற்றும் கிறிஸ்தவ மதத்தலங்களுக்கு இந்த விதிமுறை ஏற்புடையதாக இருக்கும் எனத் தெரிவித்த அவர் ஏற்கனவே நடைமுறையிலுள்ள கட்டணங்களைத் தொடர்ந்து அமுல்படுத்த இலங்கை மின்சாரசபை தீர்மானித்துள்ளதாகவும் மேலும் தெரிவித்தார்.

# இலங்கையுடன் பாதுகாப்புக் கருத்தரங்கு கொழும்பில் நடத்தும் அமெரிக்கா



(கொழும்பு)


அமெரிக்காவின் பசுபிக் கட்டளைப் பீடத்துடன் இணைநது இலங்கை இராணுவம் ஒழுங்கு செய்துள்ள பல்தேசிய தொடர்பாடல் இயங்குநிலை திட்ட கருத்தரங்கு கொழும்பில் நடைபெற்று வருகிறது.

கொழும்பு கலதாரி விடுதியில் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமாகிய இந்த ஐந்து நாள் கருத்தரங்கு நாளை வரை இடம் பெறவுள்ளது. இதில் 25 நாடுகளைச் சேர்ந்த கேணல் பதவிக்கு மேற்பட்ட தரங்களைச் சேர்ந்த 63 இராணுவ அதிகாரிகள் உள்ளிட்ட 90 பேர் பங்கேற்கின்றனர்.

இவர்களில் ஐவர் இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த அதிகாரிகளாவர். ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் மனிதாபிமான உதவிகள் மற்றும் அனர்த்த நிவாரணப் பணிகளில் ஒத்துழைப்புகளை வலுப்படுத்தும் நோக்கிலேயே இந்தக் கருத்தரங்கு நடத்தப்படுகிறது.

# கொள்கை, கோட்பாடுகளின்றி அரசியல் நடத்தும் கூட்டமைப்பு





(யாழ்ப்பாணம்)

இரண்டு வார காலத்திற்குள் கட்சியைப் பதிவு செய்யுங்கள் என தமிழரசுக்கட்சிக்கு அதன் பங்காளிகள் பகிரங்கமாக கால அவகாசம் வழங்கியுள்ளதன் மூலம் அரசியல் கொள்கை, கோட்பாடுகள் இல்லாத ஒரு பித்தலாட்ட அரசியலைத் தமிழ்த தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்கள் மீது நடாத்திக் கொண்டிருக்கின்றது என்பது பட்டவர்த்தனமான உண்மை என்பதற்கு மற்றொரு சான்றாக அமைந்துள்ளது என பருத்தித்துறை பிரதேசசபை எதிர்க்கட்சித் தலைவரும், ஈ.பி.டி.பி.யின் வடமராட்சி பிரதேச இணைப்பாளருமான ஜயாத்துரை சிறி ரங்கேஸ்வரன் தெரிவித்தார்.

கடந்த திங்கட்கிழமை பொது மண்டபத்தில் மக்களுடனான கலந்துரையாடல் ஆழியவளை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் கிருஸ்ணா ஜெயப்பிரகாஷ் தலைமையில் இடம்பெற்றது. அதன் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் மக்களின் அவலங்களில் அரசியல் நடாத்திக் கொண்டிருக்கும் கூட்டமைப்பினரின் குடும்பச்சண்டை அம்பலத்திற்கு பகிரங்கமாகவே வந்துள்ளது. சந்தர்ப்பவாதக் கூட்டமைப்பினர் தமிழ் மக்களை எவ்வாறு ஏமாற்றி வந்துள்ளனர் என்பதை அவர்களே இன்று தமது அறிக்கைகள் மூலம் அம்பலப்படுத்தி வருகின்றனர்.

கூட்டமைப்பினரின் கபடத்தனங்களுக்கு தாம் ஆளாகி விட்டதைக் கண்டு வருத்தமடைகின்றனர். ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினராகிய நாம் எமது நிலைப்பாடுகளை மக்களிடம் தெளிவாகவே சொல்லி வருகின்றோம்.

தற்பொழுது கூட்டமைப்பிற்குள் இருக்கின்ற கூட்டுக்கட்சிகள் தங்களை கேடயங்களாக பயன்படுத்தி மிதவாத அரசியல் அமைப்புக்கள் தங்கள் மேல் சவாரி செய்வதை தெரிந்து கொண்டுள்ளதுடன், தமிழ்மக்களுக்கான அரசியல் தீர்மானங்களை எடுப்பதில் பழைமைவாத கட்சிகள் பின்னடிப்பதையே எடுத்துக் காட்டுகின்றது. எனவே அரசியல் ஞானமற்ற கட்சிகளை நம்பி தமிழ் மக்கள் மீண்டுமொருமுறை ஏமாறுவதை தவிர்க்க வேண்டும். பிரதேச அபிவிருத்தி, அரசியல் தீர்வு இரண்டும் எமது மக்களுக்கு அவசியமானது இதனடிப்படையிலேயே நாம் எமது அரசியல் பயணத்தைத் தொடர்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

# சங்கானைக் கல்விக் கோட்டத்தில் 15 பாடசாலைகள் அபிவிருத்தி

(அளவெட்டி)

மகிந்த சிந்தனையின் கீழ் 5000 ஆரம்பப் பாடசாலைகள் மற்றும் 1000 இடைநிலைப் பாடசாலைகளைப் புனரமைக்கும் தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சங்கானை கோட்டத்திற்குட்பட்ட 15 பாடசாலைகள் தேர்ந்தேடுக்கப்பட்டுள்ளன.

இதன்படி மூளாய் அ.மி.த.க. பாடசாலை வட்டு. மேற்கு அ.மி.த.க.பாடசாலை, வட்டு. திருநாவுக்கரசு வித்தியாசாலை, பண்ணாகம் அ.மி.த.க.பாடசாலை, தொல்புரம் அ.மி.த.க.பாடசாலை, சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாசாலை, சுழிபுரம் கிழக்கு அ.மி.த.க.பாடசாலை, திருவடிநிலை சைவத்தமிழ்க் கலவன் பாடசாலை, சங்கரத்தை சின்னம்மா வித்தியாசாலை, வட்டு. கார்த்திகேய விததியாசாலை, காட்டுப்புலம் அ.த.க.பாடசாலை, வட்டு.சுப்பிரமணிய வித்தியாசாலை, சங்கானை சிவப்பிரகாச இந்து ஆரம்பப் பாடசாலை, பழவத்தை அ.மி.த.க. பாடசாலை, தாவளை சைவத்தமிழ் வித்தியாசாலை. ஆகியனவையே தெரிவு செய்யப்பட்டவைகளாகும்.

இப் பாடசாலைகளுக்கான அடிப் படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு தலா ஐந்து இலட்சம் ரூபா நிதி ஒதுக்கப் பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கான ஆரம்பக்கட்ட வேலைகள் விரைவு படுத்தப்பட்டுள்ளதுடன், திட்டத்தினை சிறப்பாக மேற்கொள்ளும் வகையில் அனைத்துத் தரப்பினரும் பெரும் ஆர்வம் காட்டி வருகின்றனர். (55)

## விடுமுறை

(குருநகர்)

எதிர்வரும் மே 1 ஆம் திகதி விடுமுறை தினமாக யாழ். மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கம், கடந்த பொதுக்கூட்டத்தில் தீர்மானித்துள்ளதற்கு அமைவாக அன்றைய தினம் தமது அங்கத்துவ நிலையங்களை மூடி ஒத்துழைக்க தவிசாளர் கணபதிப்பிள்ளை ஸ்ரீராஜன் கேட்டுள்ளார்.

மீறி நிலையங்களைத் திறப்பவர்கள் மீது சட்ட ஒழுங்கு கடைப்பிடிக்கப்பட்டு தண்டப் பணமாக 2 ஆயிரம் ரூபா அறவிடப்படுமென்று அவர் எச்சரித்துள்ளார். (68)

## பொய்யுள்



மூல்பாரதி

### எதிர்காலம்?

பாலியல் வல்லுறவு பாலர்களோ
பருவம் தப்பின் தறுக்கணிக்கும்!
காலியோ மண்டை இருப்பதுவே
காலமிது கலியென் தப்பாகுமோ?

பாலூட்டிப் பார்த்த குஞ்சையுமே
பார்க்கும் காமுகக் காலமாமோ
வாலாட்டி பிழைக்கும் நாய்க்குணமும்
வந்திடல் பரம்பரை வித்தாமோ?

அனாதைச் சிறுமியர் எதிர்காலம்
ஆற்றை கைகளில் அடங்கியுள?
வினாவை கேலிக் கூத்தாக்கின்
விடியாது நம்மவர் எதிர்காலம்!

## பொதுக்கூட்டம்

அச்சுவேலி பிரதேச வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்க பொதுக்கூட்டம் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் டாக்டர் கு.கணேசலிங்கம் தலைமையில் வைத்தியசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கூட்டத்திற்கு விருந்தினர்களாக யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன், கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபன், வலி.கிழக்கு பிரதேச எதிர்க்கட்சித் தலைவரும், ஈ.பி.டி.பி.யின் கோப்பாய் பிரதேச இணைப்பாளருமான இ.ஐங்கரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

எனவே, நலன்புரி சங்க அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், புதிதாக நோயாளர் நலன்புரிச் சங்கத்தில் இணைய விரும்புவோர் வைத்தியசாலை நிர்வாகத்தினரிடம் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

## முரசின் இன்றைய பலன்

(26.04.2013 – வெள்ளிக்கிழமை)

விஜய வருஷம் : சித்திரை மாதம் 13 ஆம் திகதி.
நட்சத்திரம் சுவாதி பிற்பகல் 4.12 வரை. திதி பிரதமை, சித்தம்.
இரவு 12.12 வரை. இராகுகாலம் 10.29 - 11.59 வரை.
சுபநேரம் 5.59 - 7.29 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | தகுதி உடையவருக்கு உதவ விரும்புவீர்கள். தொழிலில் வேலைப்பளு அதிகரிக்கும். திடமான முடிவுகளை எடுப்பீர்கள். சலுகைகளும் பதவியும் தேடி வரும். உடல்நலத்திற்கு உணவில் கவனம். மாணவர், சாகச விளையாட்டுகளில் ஈடுபடக்கூடாது. |
| ரிஷபம் | உங்களை சிலர், தவறாக புரிந்து பகைமை பாராட்டுவர். நிதானம் பின்பற்றுவது நல்லது. தொழில் சராசரி அளவில் இருக்கும். சேமிப்பு, முக்கிய செலவுக்கு பயன்படும். வாகன பயணத்தில் கவனம். நண்பருடன் பழைய நினைவுகளை அசைபோடுவீர். |
| மிதுனம் | சிலர் உங்களை அவதூறு பேசுவர். எவரிடமும், தேவையற்ற விவாதம் கூடாது. தொழில், சில தடங்கல்கள் இருக்கும். அளவான பணவரவு. புதிய செலவுகள் சில வரலாம். உடல்நலத்தில் கவனம் வேண்டும். எதிர்பார்த்த செய்தி வர தாமதமாகும். |
| கடகம் | குடும்ப உறுப்பினர்கள், கூடுதல் பாசத்துடன் நடப்பர். மனதில் நம்பிக்கை அதிகரிக்கும். தொழில், செழிக்க தகுந்த பணிபுரிவீர்கள். பணவரவும், நன்மையும் கூடும். விவகாரத்தில் சாதகமான தீர்வு வரும். உறவினர் வருகையால் இல்லத்தில் மகிழ்வு. |
| சிம்மம் | எதிர்பார்த்த உதவி கிடைக்க தாமதம். தொழிலில் உள்ள அனுகூலம் பாதுகாக்க, ஆர்வமுடன் பணிபுரிவீர்கள். சராசரி பணவரவு. பகட்டுக்காக, பயன் தராத பொருள் வாங்க வேண்டாம். அலைச்சல் இருக்கும். வழிபாடு மனதிற்கு நிம்மதி தரும். |
| கன்னி | சிலர் உங்களை சுயநல எண்ணத்துடன் பாராட்டுவர். விழிப்புணர்வுடன் செயல்படுவது நல்லது. தொழில், அனுகூலநிலை பாதுகாக்க, உழைப்பு உதவும்., சிக்கனம் அவசியம். போக்குவரத்தில் கவனம். பொறுமை சிக்கல்களைத் தவிர்க்கும். |
| துலாம் | மனதில் கலை உணர்வு அதிகரிக்கும். செயல்களை முழுமனதுடன் நிறைவேற்றுவீர்கள். தொழிலில், அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும். தாராள பணவரவு. இல்லறத்துணை விரும்பியது வாங்கித் தருவீர்கள். அரசால் அனுகூலம். பிள்ளைகள் புரிந்துணர்வு. |
| விருச்சிகம் | உத்வேகமுடன் செயல்படுவீர்கள். உங்கள் செயல்கள் பாராட்டு பெற்றுத் தரும். தொழிலில் திட்டமிட்ட இலக்கு நிறைவேறும். கொடுக்கல், வாங்கல் முன்னேற்றம். பெண்கள் விரும்பிய பொருட்களை வாங்குவர். மாணவர், கலைஞர்க்கு சாதனை நாள். |
| தனுசு | செயல்கள் நிறைவேற, தெய்வ அருளை நம்புவீர்கள். தொழில், வளர்ச்சி அதிகரிக்கும். உபரி வரவுடன் நிலுவைப் பணமும் வந்து சேரும். வீட்டுப் பொருள வாங்குவீர்கள். உத்தியோகத்தர்களுக்கு, சலுகையும் மதிப்பும். வெளியூர் பயணத் திட்டம். |
| மகரம் | சிலரது பேச்சு மனதை சங்கடப்படுத்தலாம். எவருக்கும் தகுதிக்கு மீறிய வாக்குறுதி தரவேண்டாம். தொழில் இடையூறு சரி செய்வதால் அபிவிருத்தியாகும். அளவான பணவரவு. ஆபத்தான இடங்களில் செல்ல வேண்டாம். ஓய்வெடுப்பது நல்லது. |
| கும்பம் | உற்சாக மனதுடன் செயல்படுவீர்கள். வெகுநாளாக தேங்கியிருந்த வேலை நிறைவேறும். தொழிலில், அதிக மூலதனம் செய்வீர்கள். கடன் வசூலாகும். நண்பருக்கு உதவுவீர்கள். பிள்ளைகள் மூலம் நற்செய்தி. விரும்பிய உணவுண்டு மகிழ்வீர்கள். |
| மீனம் | எல்லோருடனும் இனிமையாகப் பழகுவீர்கள். உங்களுக்குத் தொல்லையாக இருந்தவர்கள் மாறுவர். தொழில் வளர்ச்சி அதிகரிக்கும். ஆதாய பணவரவு பெறுவீர்கள். விருந்து, விசேஷத்தில் கலந்து கொள்வீர்கள். தம்பதியர் அன்யோன்யம் அதிகரிக்கும். |

# ஐ.பி.எல். துளிகள்



மைதானம் ஓட்டங்கள் குவிப்பிற்கு நன்கு ஒத்துழைத்தது. மும்பை அணியினர் அருமையாக ஆடினர். எல்லோருமே கூட்டு முயற்சியாக ஆடி அசத்திவிட்டனர். வெற்றிக்கு அவர்கள் உரித்தானவர்கள் தான். சுனில் நரைன் சிறப்பான முறையில் செயற்பட்டு எதிரணிக்கு நெருக்கடி கொடுத்தார். இனி வரும் ஆட்டங்களில் சிறப்பாக விளையாடுவோம் என கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி கப்டன் கம்பீர் தெரிவித்தார்.



கப்டனாக செயற்பட்ட முதல் ஆட்டத்திலேயே வெற்றி பெற்றது மகிழ்ச்சியாக உள்ளது. முதலில் ஒருவித பதற்றம் இருந்தது. நேரம் செல்லச்செல்ல சரியாகிவிட்டது. துடுப்பாட்டத்தில் ஆரம்பம் சரியாக அமையாத நிலையில் அதன்பின்னர் சுதாகரித்து ஆடியதால் வெற்றி பெற முடிந்தது. மைதானத்தில் பந்து மிகவும் தாழ்வாக வந்த நிலையில் ஸ்மித் பிரமாதமாக ஆடினார் என மும்பை இந்தியன்ஸ் அணி கப்டன் ரோகித் சர்மா தெரிவித்தார்.

# தகுதியானவர்



(கொல்கத்தா)

எல்லாச் சாதனைகளும் முறியடிக்கப்படக்கூடியது தான். எனது சாதனையை கெய்ல் தன்வசப்படுத்தியது மகிழ்ச்சி அளிக்கிறது என கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி வீரர் மக்கலம் தெரிவித்தார்.

நான் பயிற்சியை முடித்துக் கொண்டு பேருந்தில் திரும்பி சென்று கொண்டிருந்த போது, அவரது ஆட்டத்தைப் பார்த்தேன்.

இது நம்ப முடியாத ஆட்டம். 20 ஓவர் கிரிக்கெட்டில் அவர் மிகவும் சக்தி வாய்ந்த துடுப்பாட்ட வீரர்.. இந்த சாதனைக்கு அவர் தகுதியானவர் எனவும் அவர் தெரிவித்தார்.

## இன்றைய ஆட்டம்




கொல்கத்தா நைட் ரைடர்ஸ்
எதிர் கிங்ஸ் லெவன் பஞ்சாப்
இடம் : கொல்கத்தா
இரவு 8.00 மணி

# ஆஷஸ் தொடருக்கான அவுஸி அணி அறிவிப்பு



அணி விபரம் அறிவிக்கப்பட்ட வேளை முன்னாள் கப்டன்களான ஸ்ரீவோ, மார்க் ரெய்லர் மற்றும் கப்டன் கிளார்க், துணைக் கப்டன் ஹடின் ஆகியோரைக் கணலாம்.

(சிட்னி)

ஆஷஸ் தொடருக்கான அவுஸ்ரேலிய அணி அறிவிக்கப்பட்டது. இதில், பிராட் ஹடின் துணைக் கப்டனாக நியமிக்கப்பட்டுள்ளார்.

அவுஸ்ரேலிய, இங்கிலாந்து அணிகள் மோதும், ஐந்து டெஸ்ட் போட்டிகள் கொண்ட வரலாற்று சிறப்புமிக்க ஆஷஸ் தொடர் வரும் ஜூலை 10ஆம் திகதி முதல் ஓகஸ்ட் 25ஆம் திகதி வரை இங்கிலாந்தில் நடைபெறவுள்ளது. இதற்கான 16 வீரர்கள் கொண்ட அவுஸ்ரேலிய அணி அறிவிக்கப்பட்டது. இதில், பல மாதங்களுக்குப்பின் பிராட் ஹடின் இடம்பெற்றுள்ளார். விக்கெட் கீப்பரான இவர், கடந்த 14 மாதங்களில் ஒரு டெஸ்ட் போட்டியில் மட்டுமே பங்கேற்றுள்ளார். தவிர, துணைக் கப்டன் அந்தஸ்தும் இவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

இது குறித்து அவுஸ்ரேலிய அணி தேர்வுக்குழுத் தலைவர் ஜோன் இன்வெராரிட்டி கூறியது: ஹடின் முதல் தர விக்கெட் காப்பாளர். தவிர, துணைக் கப்டன் பதவி, சிரேஷ்ட வீரருக்கு கொடுக்க எண்ணினோம். இதற்கு ஹடின் தகுதியானவர். கப்டன் கிளார்க்கும் சிறப்பான ஒத்துழைப்பு கொடுப்பார். மத்யூ வேட் திறமையான வீரர் ஆவார். ஆஷஸ் தொடரை விட, கிரிக்கெட் அரங்கில் போட்டி மிகுந்த தொடர் கிடையாது, எனவே, இதை கைப்பற்றும் எண்ணத்தில், வலிமையான அணியை, தேர்வுக்குழு தேர்ந்தெடுத்துள்ளது. இந்த அணி, ஒவ்வொரு போட்டியிலும் கடுமையான போராட்டத்தை வெளிப்படுத்தும் எனத் தெரிவித்தார்.

அணி விவரம்: மைக்கல் கிளார்க் (கப்டன்), பிராட் ஹடின் (துணைக் கப்டன்), டேவிட் வோர்னர், எட் கோவன், கிறிஸ் ரோஜர்ஸ், பிலிப் ஹியுஸ், வட்சன், கவாஜா, மத்யூ வேட், ஜேம்ஸ் போல்க்னர், பீற்றர் சிடில், ஸ்டார்க், பட்டின்சன், ரியான் ஹரிஸ், ஜோக்சன் பேர்ட், நதன் லியன்.

# இரசிகர்களுக்கு நன்றி



(கொல்கத்தா)

இந்தியா மட்டுமல்லாமல் உலகம் முழுவதிலிருந்தும் என் மீது அன்பு செலுத்தி வரும் இரசிகர்களுக்கு நன்றி என சச்சின் தெரிவித்தார். இந்திய அணியின் நட்சத்திர வீரர் சச்சின் நேற்று முன்தினம் தனது 40ஆவது பிறந்தநாளை கொல்கத்தாவில் கொண்டாடினார். பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு 15 முறை கேக் வெட்டினார். அப்போது ஓய்வு பெறும் எண்ணம் தற்போதைக்கு இல்லை என்று சூசகமாக கூறினார். கொல்கத்தா ஈடன் கார்டன் அரங்கில் பிரமாண்ட கேக் வெட்டிய பின் சச்சின் கூறியது

இந்தியா மட்டுமல்லாமல், உலகம் முழுவதிலிருந்தும் கடந்த 24 ஆண்டுகளாக எல்லை கடந்த அன்பு செலுத்தும் இரசிகர்களுக்கு என் நன்றி. ஒவ்வொருவரையும் நேரில் சந்தித்து, நன்றி சொல்ல விரும்புகிறேன். இருப்பினும், இது முடியாத காரியம். எனவே இதை நல்ல வாய்ப்பாக பயன்படுத்திக் கொள்கிறேன். நான் காயத்திலிருந்தபோது பல வழிகளில் அன்பு காட்டிய, உங்களைப் போன்றவர்களால்தான், நான் தற்போது நலமுடன் இருக்கிறேன். என்னைப் பொறுத்தவரை வயது என்பது ஒரு விடயமே இல்லை.40 வயதை எட்டிவிட்டதாக ஒருபோதும் நினைக்கவில்லை அப்படி நினைத்தால், அந்த வயதுக்கேற்ப செயற்பட தொடங்கி விடுவோம். மனது, உடலின் ஒத்துழைப்புடன், மகிழ்ச்சியாக விளையாடும் வரை கிரிக்கெட்டில் நீடிக்கலாம். 1989இல் ஸ்ரீகாந்த் கப்டனாக இருந்த போது அறிமுகமானேன். தற்போது அவரது மகன் அனிருத்தாவுக்கு (சென்னை அணி) எதிராக பிரிமியர் கிரிக்கெட் தொடரில் விளையாடுவது வியப்பானது என்றார்.

இதேவேளை, சச்சின் பிறந்த தின வாழ்த்துக்களை கும்ளே, யுவராஜ்சிங், லாரா, பிரெட்லீ, கபில்தேவ் போன்ற பல வீரர்கள் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

# பாகிஸ்தான் வீரர்களுக்கு ஐ.சி.சி. அறிவுறுத்தல்

ஆட்ட நிர்ணயத்தில் ஈடுபட்ட பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் சல்மான் பட், முஹமட் ஆஷிப் மற்றும் முஹமட் ஆமிர் ஆகியோர் இரசிகர்களை தவறான வழியில் இட்டுச் செல்வதை நிறுத்த வேண்டும் என சர்வதேச கிரிக்கெட் சபை வலியுறுத்தியுள்ளது.

இதுபோன்ற செயற்பாடுகளைக் கைவிட்டு, கிரிக்கெட் ஆட்ட நிர்ணயத்திற்கு எதிராகச் செயற்பட அவர்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என சர்வதேச கிரிக்கெட் சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரி டேவ் ரிச்சட்சன் குறிப்பிட்டுள்ளார்.

பாகிஸ்தான் கிரிக்கெட் ஆதரவாளர்களைப் பிழையான வழியில் இட்டுச் செல்லும் வகையிலான தகவல்களை வெளியிட வேண்டாம் என்றும் அவர் கோரியுள்ளார்.

ஆட்டநிர்ணயம் தொடர்பில் தங்களுக்குதெரிந்த முக்கிய தகவல்களை வெளியிட்டு கிரிக்கெட் டில் இடம்பெற்றுவரும் ஆட்டநிர்ணயங்களை ஒழிப்பதற்கு பங்களிக்குமாறும் சர்வதேச கிரிக்கெட்சபை, குறித்த மூன்று வீரர்களையும் கேட்டுக்கொண்டுள்ளது. சல்மான் பட் மற்றும் முஹமட் அஷிப் ஆகியோர் தமக்கு எதிராக விதிக்கப்பட்ட போட்டித் தடைக்கு எதிராக தாக்கல் செய்த மேன்முறையீடு நீதிமன்றத்தால் கடந்த வாரம் நிராகரிக்கப்பட்டிருந்தது.

கிரிக்கெட் போட்டிகளின்போது ஆட்டநிர்ணயத்தில் ஈடுபட்டமை நிரூபிக்கப்பட்டதைஅடுத்து சல்மான் பட், முஹமட் அஷிப் மற்றும் முஹமட் ஆமிர் ஆகியோருக்கு எதிராக போட்டித் தடை விதிக்கப்பட்டது.

# நூறு பேரில் ஒருவர்




டைம்ஸ் பத்திரிகையின் உலகின் புகழ்பெற்ற 100 நபர்களில் இத்தாலியின் கால்பந்தாட்ட வீரர் மரியோ பேலடெலி இடம்பிடித்துள்ளார். 22 வயதேயான மரியோ பேலடெலி, இத்தாலி அணிக்கு 4.லீக் பட்டத்தையும், கப்பா இட்டாலியா மற்றும் எப்.ஏ கிண்ணப் போட்டிகளில் வெற்றிப் பட்டத்தையும், யூரோ-2012 கிண்ணத்தில் இரண்டாவது இடத்தையும் பெற்றுத் தந்தார்.

தற்போது, டைம்ஸ் பத்திரிகை வெளியிட்டுள்ள 2013ஆம் ஆண்டு உலகின் புகழ் பெற்ற 100 நபர்களில் ஒருவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

இந்த 100 நபர்களில் வெறும் 14 பேர் மட்டுமே உலகின் வலிமையான அடையாளங்கள் என்று டைம்ஸ் பத்திரிகை தெரிவித்துள்ளது. மலாலா யூசுபாய், மிச்சேல் ஒபாமா, ஜஸ்டின் டிம்பர்லேக், கேட் மிடில்டன், லீ நா ஆகியோர் வரிசையில் மரியோ பேலடெலியும் இடம்பெற்றுள்ளார்.

# சிக்ஸர் மழை



(லண்டன்)

லண்டனில் தொழில் முறையிலான சம்பியன்சிப் செகண்ட் லெவன் கிரிக்கெட் போட்டிகள் நடைபெற்றன. இதில் லாங்ஷைர்ஸ் அணியும் யார்க்ஷைர் அணியும் மோதின. லாங்ஷைர்ஸ் அணியின் துடுப்பாட்ட வீரர் ஜோர்டன் கிளார்க் ஒரு ஓவரில் ஆறு சிக்சர்கள் அடித்து அசத்தினார் என்று இங்கிலிஸ் கவுண்டி தெரிவித்துள்ளது.

1968ஆம் ஆண்டு மேற்கிந்தியத்தீவுகளின் சகலதுறை வீரர் கேர்பீல்ட் சோபர்ஸ் இந்த சாதனையை முதல் முதலாக செய்தார். ரவிசாஸ்திரி (இந்தியா), ஹெர்செல்லே கிப்ஸ் (தென்னாபிரிக்கா),யுவராஜ்சிங் (இந்தியா) ஆகியோரை அடுத்து 5ஆவதாக பிரிட்டனின் 22 வயதான ஜோர்டன் கிளார்க் இந்த சாதனையை நிகழ்த்தியுள்ளார்.

# மட்ரிட் அதிர்ச்சித் தோல்வி



பொருசியா டார்ட்மண்ட் அணிக்கெதிரான சம்பின்ஸ் லீக் கால்பந்து தொடரின் அரையிறுதி முதல் சுற்றில் ரியல் மட்ரிட் அதிர்ச்சி தோல்வி அடைந்தது.

ஐரோப்பாவின் முக்கிய நகரங்களில் சம்பியன்ஸ் லீக் கால்பந்து தொடர் நடக்கிறது. இதன் அரையிறுதி முதல் சுற்றில் பொருசியா டார்ட்மண்ட், ரியல் மட்ரிட் அணிகள் மோதின. இதன் முதல் பாதியில் டார்ட்மண்ட் அணியின் ராபர்ட் லிவாண்டோவஸ்கி (8ஆவது நிமிடம்) ஒரு கோல் அடித்தார். இதற்கு ரியல் மட்ரிட் அணியின் கிறிஸ்டியானோ (43ஆவது நிமிடம்)ரொனால்டோ ஒரு கோல் அடித்து பதிலடி கொடுத்தார். இரண்டாவது பாதியிலும் அசத்திய டார்ட்மண்ட் அணிக்கு ராபர்ட் (50, 55ஆவது நிமிடம்) இரண்டு கோல் அடித்து கைகொடுத்தார். தனது ஆதிக்கத்தை தொடர்ந்த டார்ட்மண்ட் அணியின் ராபர்ட் 67ஆவது நிமிடத்தில் கிடைத்த பெனால்டி வாய்ப்பை கோலாக மாற்றினார். இதற்கு ரியல் மட்ரிட் அணி வீரர்களால் பதிலடி கொடுக்க முடியவில்லை. முடிவில், பொருசியா டார்ட்மண்ட் அணி 4-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

# மாவட்ட மட்ட கரப்பந்து ஆவரங்கால் மகாஜனா சம்பியன்



(ஆவரங்கால்)

யாழ். மாவட்ட பாடசாலை அணிகளுக்கிடையிலான 15 வயதுப் பிரிவினருக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் ஆவரங்கால் மகாஜனா வித்தியாலய அணி சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

யாழ். மாவட்ட பாடசாலை அணிகளுக்கிடையிலான மாவட்ட மட்ட கரப்பந்தாட்டத் தொடர் அண்மையில் ஆவரங்கால் இராமலிங்கம் வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

இத்தொடரின் இறுதிப் போட்டிக்கு கோப்பாய் மகாவித்தியாலய அணியும், ஆவரங்கால் மகாஜனா வித்தியாலய அணியும் மோதின. முதல் செட்டை 25-17 என்ற புள்ளிகள் கணக்கில் வெற்றிபெற்ற கோப்பாய் மகாவித்தியாலய அணி முன்னிலை வகித்தது. தொடர்ந்து இரு செட்களிலும் சுதாகரித்துக் கொண்ட ஆவரங்கால் மகாஜனா வித்தியாலய அணி 25-20, 25-10 என்ற கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

தொடர்ந்து நடைபெற்ற மூன்றாமிடத்திற்கான போட்டியில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணியும், சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரி அணியும் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரி அணி 20-25, 25-20, 26-24 என்ற கணக்கில் வெற்றிபெற்று மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டது. (93, 118)





மானிப்பாய் பொலிஸ் பிரிவு, வர்த்தகர்கள், சிவில் பாதுகாப்புப் படையினர் இணைந்து தமிழ் - சிங்களப் புத்தாண்டு விளையாட்டு விழா நிகழ்வுகளை கடந்த சனிக்கிழமை நவாலி அட்டகிரி விளையாட்டு மைதானத்தில் நடத்தினர். சறுக்கு மரம் ஏறுதல், தலையணைச் சண்டை, பலூன் உடைத்தல், முட்டி உடைத்தல், கயிறு இழுத்தல், தேசிக்காய் கரண்டி போன்ற விளையாட்டுக்கள் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

# 34 ஓட்டங்களால் அரியாலை ஐக்கியம் வெற்றி

(கொக்குவில்)

தெல்லிப்பளை கிறாஸ்கோப்பர்ஸ் அணிக்கெதிரான போட்டியில் அரியாலை ஐக்கிய அணி 34 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

கொக்குவில் கே.சி.சி.சி. விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்டு வரும் யாழ். மாவட்ட அணிகளுக்கிடையில் 30 ஓவர்களைக் கொண்ட கிரிக்கெட் தொடரின் இரண்டாவது சுற்று ஆட்டமொன்று அண்மையில் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இதில் அரியாலை ஐக்கிய அணியும், தெல்லிப்பளை கிறாஸ்கோப்பர்ஸ் அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய அரியாலை ஐக்கிய அணி 30 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 162 ஓட்டங்களைப் பெற்றது. லினோரதன் 32, கோபி 31 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் அஜித் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு 163 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய கிறாஸ் கோப்பர்ஸ் அணி 27.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 128 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத்தழுவியது. இதில் காந்தசீலன் 30 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். பந்துவீச்சில் சுபேசன் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

# துரையப்பாவில் நாளை மாவட்ட மட்ட கரப்பந்து

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கம் வருடாவருடம் நடாத்தும் மாவட்ட அணிகளுக்கிடையிலான கரப்பந்தாட்ட்ச் சுற்றுப் போட்டிநாளையும், நாளை மறுதினமும் யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெறவுள்ளது.

இப்போட்டி ஆண், பெண் என இருபாலாருக்குமிடையில் இடம்பெறவுள்ளது. இதில் நாளை ஆண்கள் அணியின் 'பி' பிரிவுக்கான போட்டியும், நாளை மறுதினம் ஆண்கள் அணியின் 'ஏ' பிரிவுக்கான போட்டியும், பெண்களுக்கான போட்டியும் இடம்பெறவுள்ளதாகவும், இப்போட்டிகளில் பங்குகொள்ளவுள்ள அணிகளை குறித்த நேரத்திற்கு வருகை தந்து நேர விரயத்தைத் தவிர்த்துக் கொள்ளுமாறு யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கச் செயலாளர் கேட்டுள்ளார். (93, 118)

# கிண்ணம் வென்றது மட்டுவில் வளர்மதி



(மட்டுவில்)

நவசன சனசமூக நிலையத்தின் 48ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை மட்டுவில் வளர்மதி அணி கைப்பற்றிக் கொண்டது.

தென்மராட்சிப் பிரதேச மென்பந்து கிரிக்கெட் அணிகளுக்கிடையில் நவசன சனசமூக நிலையத்தின் ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை நவசக்தி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இதில் மட்டுவில் வளர்மதி அணியும், மட்டுவில் கண்ணகை அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய மட்டுவில் வளர்மதி அணி, அஜந்தன், சுஜீபன் ஆகியோரின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் மட்டுவில் வளர்மதி அணி 15.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 112 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அஜந்தன் 41, சுஜீபன் 23, கவி 16 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் செந்தூரன் ஐந்து, கௌசிகன் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 113 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய மட்டுவில் கண்ணகை அணி, கவி, பானு ஆகியோரின் பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இருப்பினும் துசி, நந்தகோபன் ஆகியோரின் பொறுப்பான ஆட்டத்தின் மூலம் கண்ணகை அணி போராடித் தோற்றது. இறுதியில் மட்டுவில் கண்ணகை அணி 15.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 106 ஓட்டங்களைப்பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் துசி 29, நந்தகோபன் 25, ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் கவி, பானு தலா மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். இப்போட்டியின் ஆட்டநாயகனாக வளர்மதி அணியைச் சேர்ந்த அஜந்தன், தொடர்நாயகனாக அதே அணியைச் சேர்ந்த கவிராஜ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இப்போட்டி நிகழ்வில் சனசமூக நிலையத் தலைவர், செயலாளர், கழகத் தலைவர், இரு அணி ஆதரவாளர்கள், நலன்விரும்பிகள், விளையாட்டு ஆர்வலர்கள், இரசிகர்கள் எனப் பலர் கலந்து கொண்டு போட்டியைக் கண்டு களித்தமை குறிப்பிடத்தக்கது. (118)

# கறைபடிந்தவர்களின் குற்றச்சாட்டு!

– எஸ்.எல்.குணசேகரா

சம்பந்தன் (ரி.என்.ஏ) மற்றும் சுரேந்திரன் (ஜி.ரி.எப்) ஆகிய இருவரும் நடத்தப்பட்ட அட்டூழியங்கள் யாவும் வடக்கிலுள்ள தமிழர்கள் மீது அரசாங்கத்தால் மேற்கொள்ளப் பட்டவை என்று பேசி வருகிறார்கள். தமிழ் தேசியக்கூட்டமைப்பின் கூட்டங்களில் மேற்கொள்ளப் பட்டதாக கூறப்படும் தாக்குதல்கள்மீது சம்பந்தன் கவனம் செலுத்தி வருகிறார்.

எதிராளிகளை உடல்ரீதியாக தாக்கும் பழக்கம் வடக்கிலுள்ள அரசாங்கத்தின் தமிழ் எதிராளிகளுக்கு மட்டும் என்று மட்டுப்படுத்தப்பட்ட ஒன்றல்ல. இத்தகைய தாக்குதல்கள் நாட்டின் இதர பாகங்களிலுள்ள சிங்களவர்கள் மற்றும் முஸ்லிம்கள் மீதும் நடத்தப்பட்டுள்ளன. ஒன்றில் சம்பந்தன் அல்லது சுரேந்திரன் நடைபெற்றதாக புலம்பும் விடயங்களில் உண்மையான அல்லது நேர்மையான ஏதாவது தடயங்கள் வைத்திருப்பார்களானால், ஒருவர் இயற்கையாகவே எதிர்பார்க்ககூடியது, அவர்கள் பாதகமான கருத்துக்களை வெளியிடுவதுபோல, சிங்களவர்கள் மற்றும் முஸ்லிம்கள் மீதான தாக்குதல்களையும் நிறுத்தும்படி குரல் கொடுத்திருக்க வேண்டும்.

எனினும் அவர்கள் அப்படி செய்யாதது மட்டுமல்ல, சம்பந்தன் அல்லது சுரேந்திரன் ஆகியோரில் ஒருவர்கூட இதுபோல் எல்.ரீ.ரீ.ஈ மேற்கொண்ட அட்டூழியங்கள் பற்றியும் ஒரு வார்த்தை கூட மூச்சு விட்டதில்லை. அப்படிச் செய்வது உண்மையில் அவர்களது கொள்கைகளுக்கு முற்றிலும் முரணானது.

எல்.ரீ.ரீ.ஈ, சிங்களவர்கள் மற்றும் முஸ்லிம்களை தொடர்ச்சியாக தாக்கிவந்துள்ளது. மற்றும் சகல இனம், பால், வயது என்பனவற்றை சேர்ந்த அனைவரும் அவர்களால் கொல்லப்பட்டவர்களில் அடங்குவார்கள். சம்பந்தன் மற்றும் ரி.என்.ஏ, அதேபோல சுரேந்திரன் மற்றும் இன்னும் பிறக்காத ஜி.ரி.எப் இனை சேர்ந்த, அதன் ஏனைய அங்கத்தவர்கள் ஆகிய அனைவரும் இவ் விடயத்தில் பெரும் மௌனத்தை கடைப்பிடித்தார்கள். அவர்கள் தங்களது பிழைப்புக்கு முக்கியமான எல்.ரீ.ரீ.ஈ. யை எந்தக் காரணத்துக்காகவும் தாக்குவதற்கு தைரியமோ அல்லது கவலையோ கொள்ளமாட்டார்கள்.

அவர்கள் ஒன்றில் நடப்பதை சரி என்று ஏற்றுக்கொண்டிருக்க வேண்டும் (இதற்குத்தான் அதிக வாய்ப்பு உள்ளது), அல்லது எல்.ரீ.ரீ.ஈ.இற்கு எதிராக எந்தவிதமான எதிர்ப்பு குரல்களை எழுப்புவதற்கும் அவர்கள் மிகவும் பயந்திருக்க வேண்டும். எனினும் எல்.ரீ.ரீ.ஈ மீதிருந்த அத்தகைய மரண பயம் காரணமாக தமிழ் மக்களுக்கு அவர்கள் புரிந்த இத்தகைய தவறான அட்டூழியங்களையும் பார்த்து மௌனமாக இருந்த இவர்களுக்கு, சரியான முறையிலோ அல்லது தவறான முறையிலோ ராஜபக்ஷ அரசாங்கத்துக்கும் மற்றும் ஆயுதப்படையினருக்கும் எதிராக கடுமையான பொது விமர்சனங்களில் ஈடுபடுவதற்கு மனச்சாட்சி என்ற ஒன்று இடம் தராது. இது விசித்திரமானதாக உள்ளது அல்லவா?



சுரேந்திரன் போன்றவர்கள் வெளிநாட்டு சூழலில் வாழும் எளிதில் ஏமாறக்கூடிய தமிழர்களின் கடின உழைப்பில் பெறப்பட்ட பணத்தில் எப்படி தின்று கொழுத்துள்ளார்கள் என்பதை பேராசிரியர் ரட்னஜீவன் ஹூல் அவர்கள் எழதியுள்ள "நாடு கடந்தவர்களின் திரும்புதல் அல்லது திரும்பிவந்த நாடுகடந்தவர்கள்" எனும் தலைப்பிலான புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார்...

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் கடலோரப் பகுதிகளில் வாழும் தமிழர்களுக்கும் மற்றும் முஸ்லிம்களுக்கும் மீன்பிடி ஒரு பிரதான தொழில் என்பதில் சந்தேகமில்லை. அங்குள்ள எளிய தமிழ் மற்றும் முஸ்லிம் மீனவர்கள், மீன்பிடிப்பதை தங்கள் வாழ்வாதாரமாக கொண்டு வாழ்க்கை நடத்தவும் மற்றும் இந்த நாட்டிலுள்ள முழு மக்களுக்கும் கட்டுப்படியான விலையில் மீன்களை வழங்கவும் செய்கிறார்கள். எனினும் அந்த மீன்பிடி, தென்னிந்தியாவை சேர்ந்த தமிழ் மீனவர்களால் தொடர்ச்சியான அடிப்படையில் திருடப்பட்டு வருகின்றன, இந்த எளிய மீனவர்களின் மீன்களை தண்டனை எதுவும் இல்லாது திருடிச்செல்வது' காரணமாக இலங்கையிலுள்ள தமிழ் மற்றும் முஸ்லிம் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிப்புக்கு உள்ளாகிறது.

சம்பந்தன் அல்லது சுரேந்திரன் மற்றும் அவர்களைப் போன்றவர்கள் தென்னிந்தியாவின் தமிழ் மீனவர்கள் புரியும் இந்த மூர்க்கத்தனமான நடவடிக்கைகள் குறித்து அல்லது அவர்களுக்கு வழங்கப்படும் அரசியல் ஆதரவு குறித்து எப்பொழுதாவது ஒரு சிறிய சிணுங்கலையாவது வெளிப்படுத்தியிருப்பார்களா? இன்று முதலமைச்சர் ஜெயலலிதா, இந்திய மீனவர்கள் எங்கள் எல்லைக்குள் இருக்கும் நீருக்குள் அத்துமீறிப் பிரவேசித்து எங்கள் உணவை திருடிச் செல்வதை தடுத்து இலங்கை கடற்படையினர் அவர்களைக் கைது செய்யும் நடவடிக்கையை ஆக்கிரமிப்பு நடவடிக்கை எனக் குற்றம் சாட்டுகிறார். வேடிக்கைதான்.

இந்திய மீனவர்கள் இலங்கையின் மீன்களை களவாடி வடக்கு மற்றும் கிழக்கினை சேர்ந்த எளிய தமிழ் மற்றும் முஸ்லிம் மீனவர்களின் வாழ்வாதாரத்துக்கு பாதிப்பை ஏற்படுத்துகிறார்கள். சம்பந்தன் மற்றும் சுரேந்திரன், இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் மிசேல் சிசன், சர்வதேச மனித உரிமை பேரவையை சேர்ந்த நவி பிள்ளை ஆகியோர் உட்பட மற்றும் பலரும் இந்த விடயத்தில் ஏன் மௌனமாக உள்ளார்கள்? இந்தியாவை எதிர்ப்பதற்கு அவர்கள் அஞ்சுகிறார்களா? அது அப்படித்தான் என்று தோன்றுகிறது. அதன்படி இதுபோன்ற முற்றிலும் கறைபடிந்த சக்திகளிடமிருந்து வெளிவரும் விமர்சனங்கள் மற்றும் குற்றச்சாட்டுகள் என்பனவற்றுக்கு எத்தகைய கனம் மற்றும் தீவிரம் என்பனவற்றை ஒருவர் செலுத்த முடியும்.

# பிழையின்றித் தமிழ் 15

– ஞானச்செல்வன் –

**கிருட்டிணமூர்த்தி என்றெழுதல் சரியா?**

இப்படி எழுதுவது பிழையாகும். கிருஷ்ணமூர்த்தி எனும் வடமொழிப் பெயரில் உள்ள "ஷ்" என்ற எழுத்தை நீக்கிவிட்டு கிருட்டிண என்று எழுதுகிறார்கள். கிருட்டி என்று ஒலித்த பின் அதனோடு ணகரம் இணைத்து கிருட்டிண என்றொலிப்பதற்குப் பெரும் முயற்சி வேண்டியுள்ளது. கிருட்டினமூர்த்தி என்று டண்ணகரத்திற்குப் பதில் றன்னகரம் போட்டு ஒலித்துப் பாருங்கள். இயல்பாக இனிமையாகச் சொல்ல வரும்.


தமிழ்மொழி ஒலியியல் பற்றியும் அறிந்தவர்கள் இதனை நன்கறிவர். இதற்கு வலுவூட்ட வேறொரு சொல்லை நாம் பார்க்க வேண்டும். நாகப்பட்டினம், சென்னைப் பட்டினம். கடற்கரையில் அமைந்த நகரங்களைப் பட்டினம் எனல் வேண்டும். பட்டணம் என்று சொல்வது பிழை. பட்டணம் நகர் என்பதைக் குறிக்கும் பொதுச் சொல். மதுரை பெரிய பட்டணம் ஆகும் என்று சொல்வது பொருந்தும்.

இங்கு பட்டினம் என்று "டி"யுடன் "ன" சேர்வதையும் பட்டணம் என்று "ட" வுடன் சேர்வதையும் கருதுக. ஆதலின் கிருட்டினமூர்த்தி என்றெழுதுவதே சரியானது. சரி, இப்பெயரைத் தூய தமிழில் மொழி பெயர்த்தால் என்னவாம்? கறுப்புக் கடவுள் என்பதாம். கிருஷ்ணம் என்றால் கறுப்பு. மூர்த்தி - கடவுள். தேய்பிறைக் காலத்தை கிருஷ்ணபட்சம் என்பதன் பொருள் புரிகிறதா? இன்னும் மனம் இசைவு பெறவில்லையா? கிருஷ்ணவேணி என்பதன் தமிழ்ப் பெயர் தெரியுமா?

கருஞ்சடை (கிருஷ்ண- கருமை; வேணி- சடை) மீண்டும் நினைவில் கொள்ளுங்கள். கரியநிறம், கருமை நிறம் என்றெல்லாம் இடையினம் வரினும் கறுப்பு எனும்போது வல்லினமே இட வேண்டும்.

யாழ்ப்பாணம் பெரும்புலவர் நா.கதிரவேற்பிள்ளை பேரகராதியிலிருந்து, கழகத் தமிழ்க் கையகராதி வரை எதில் வேண்டுமாயினும் சரி பார்த்துக் கொள்ளுங்கள்.

"கறுப்பும், சிவப்பும் வெகுளிப் பொருள" எனும் தொல்காப்பியச் சூத்திரம் நாமும் அறிவோம். ஒரு சொல்லுக்குப் பல பொருள் இருப்பது இயல்பே. கறுப்பு -



கரிய நிறம், சினம், வஞ்சனை என்று அகர முதலிகளில் காண்க.

அ, இ, உ சேர்க்கும் முறைமை:

தமிழில் உயிர் எழுத்துகள் பன்னிரண்டும் ஒரு சொல்லின் முதலெழுத்தாக வரலாம். ஆனால் உயிர்மெய் எழுத்துகளில் க,ச,த,ந,ப,ம,வ,ய,ஞ,ங எனும் பத்து மட்டுமே சொல்லின் முதல் எழுத்தாக வரக் கூடியவை. இவற்றுள் "ங" மொழி முதலில் எப்படி வரும் என்று ஐயம் தோன்றலாம். அ,இ,உ,எ,யா என்பனவற்றோடு இணைந்து அங்ஙனம், இங்ஙனம், எங்ஙனம், யாங்ஙனம் என வரும் என இலக்கணம் இயம்புகிறது. ஞ எனும் எழுத்து ஞாயிறு, ஞாலம், ஞான்று, ஞிமிறு (வண்டு) ஞமலி (நாய்) எனப் பல சொற்களில் வருதல் காணலாம்.

இப்போது நாம் சிந்திக்க வேண்டியது, ராமன், லட்சுமணன், ரங்கநாயகி, லோகநாதன் போன்ற பெயர்களைப் பற்றித்தான். இவை போன்ற வடமொழிப் பெயர்களாயிரம் தமிழில் நெடுங்காலமாக வழங்கப்பட்டு வருபவை. ல, ள, ர, ற இப்படியான எழுத்துகள் மொழி முதலில் வாரா. பின் எப்படி இவற்றை எழுதுவது? முன்னரே நாம் அறிந்து கடைப்பிடிக்கும் முறைதான். மீண்டும் நினைவூட்டுகிறேன். இத்தகைய பெயர்களின் முன்னெழுத்தாக அ, இ, உ ஆகியவற்றை இடமறிந்து, பொருத்தமறிந்து இணைத்து இச்சொற்களை எழுத வேண்டும்.

(எ-டு):- இராமன் (இ), இலட்சுமணன் (இ), அரங்கநாயகி (அ), உலகநாதன் (உ). இப்படிப் பொருத்தமாகச் சேர்க்க வேண்டும். இலட்சுமணன் என்ற பெயரைத் தமிழ் ஒலிப்படுத்தி இலக்குவன் என்றே கம்பர் எழுதினார். ரங்கசாமி என்ற பெயரை அரங்கசாமி என்றெழுதிட வேண்டும். இரங்கசாமி ஆக்கிவிடக் கூடாது. ஸ்ரீ ரங்கம் - திருவரங்கம். லட்சுமணன் என்ற பெயரை அலட்சுமணன் ஆக்கிவிடக் கூடாது. உலகநாயகி என்ற பெயரை அலகநாயகி என்றோ, இலக நாயகி என்றோ ஆக்கிடல் ஆகாது. பெரும்பாலும் நம் மக்கள் பயன்பாட்டுத் தமிழில் சரியாகவே காண்கிறேன். சிலர் ஏனோ இரங்கசாமி என்று எழுதி வருகிறார்கள். இராமசாமியை யாரும் அராமசாமி என்று இதுவரை ஆக்கவில்லை.

# காற்றுக்கு வேலி இல்லை 1

சார்லஸ் -

சார்லி சாப்ளின் இயக்கி நடித்த "தி கிரேட் டிக்டேட்டர்" படத்தில் ஒரு காட்சி வருகிறது - கட்டாயத்தால் இராணுவத்தில் சேர்க்கப்பட்ட பயந்த சுபாவமுள்ள நாயகன், போர்க்களத்தில் தன்னுடைய



படையுடன் அணிவகுத்துச் செல்கிறான். குண்டுகள் வெடித்து எங்கும் புகைமூட்டமாக இருக்க, அதனூடே அந்தப் படைப்பிரிவு முன்னேறிச் சென்றுகொண்டிருக்கிறது. குண்டுவெடிப்பு அதிகரிக்க புகைமூட்டமும் அதிகரிக்கிறது, எதிரில் என்ன இருக்கிறதென்று தெரியாத புகைக்குள் நாயகன் செல்கிறான். ஒருகட்டத்தில் புகை குறைந்து காட்சி தெளிவாகிறது, இப்போதும் நாயகன் படையில் அணிவகுத்தபடிதான் சென்றுகொண்டிருக்கிறான், ஆனால் ஏதோ தவறாக இருப்பதாக அவனுக்குப் படுகிறது. அவனுக்கு அருகில் செல்லும் சிப்பாயும் நாயகனை ஏனோ விநோதமாகப் பார்க்கிறான். உண்மையில் நாயகன் இப்போது அணிவகுத்துச் சென்றுகொண்டிருப்பது எதிரிப்படையோடு! புகைமூட்டத்தில் எங்கோ அவன் திசைமாறி, எதிரிப் படையோடு சேர்ந்திருக்கிறான். அவர்கள் அவனைச் சுடத் தயாராவதற்குள் நாயகன் ஓடித் தப்பிவிடுகிறான்.

மிக நேரடியாகப் போரின் அர்த்தமின்மையைக் காட்டிவிடும் இந்தக் காட்சி, சாப்ளினின் மேதைமைக்கு ஒரு சான்று. ஏராளமான உயிர்களைக் கொன்று குவிக்கிற அந்த இருநாட்டுப் படைவீரர்களும், தாங்கள் எந்தப் பக்கத்தில் நின்று போரிடுவது என்பதை அவர்களா தீர்மானித்தார்கள்? அவர்கள் ஒரு நாட்டில் பிறந்ததால், ஒரு இனத்தில் பிறந்ததால் அந்தப் போருக்கு வந்துசேர்ந்திருக்கிறார்கள். ஆனால் அந்த நாட்டில் அல்லது அந்த இனத்தில் அவர்கள் பிறந்தது முழுக்க முழுக்கத் தற்செயலாகத்தானே?

நாம் தற்செயலாக எங்கே பிறந்தோம் என்பதுதானே நம் இனம் எது, மொழி எது, தேசம் எது என்பதை எல்லாம் தீர்மானிக்கிறது? புகைமூட்டம் சார்லி சாப்ளினை ஓரிடத்துக்குக் கொண்டுசேர்த்ததும் அவர் அங்கிருப்பவர்களோடு சேர்ந்து "லெ∴ப்ட் ரு ரைட்" போட்டு அணிவகுத்தது போலத்தானே நாமும், தேசப்பற்று, இனப்பற்று, மதப்பற்று என்று பலவற்றையும் பற்றிக்கொண்டிருக்கிறோம்? உலகில் மிகப் பெரும்பான்மையான மக்கள் கடவுளைக் கும்பிடுவது தங்கள் பெற்றோர்கள் உண்டாக்கிய பழக்கத்தினால் அல்லவா? ஆனால் அந்தக் கடவுளே உண்மையான கடவுள் என்று அவர்கள் நம்புவதும், பிற மதத்தாரை மதமாற்றம் செய்ய முயலுவதும், தன் கடவுளை இழிவுபடுத்தியவர்களைத் தாக்கவும் கொல்லவும் கூடத் துணிவதும் எத்தனை பெரிய அபத்தம்? தான் எதேச்சையாகப் பிறந்துவிட்ட குடும்பத்தின் தெய்வம்தான் பிரபஞ்சத்தின் ஒரே கடவுள் என்று எப்படி அவர்களால் கேள்விகேட்காமல் ஏற்றுக் கொள்ள முடிந்தது? மனிதகுலத்தை அலைக்கழிப்பது இந்த மாபெரும் மாயைதான் இல்லையா? இந்த மாயையை ஒரு புகைமூட்டமாகச் சித்தரித்த சார்லி சாப்ளின் என்கிற மேதையை வியக்காமலிருக்க முடியவில்லை. திரைப்படத்தில் அரசியல் எப்படிக் கையாளப்படவேண்டும் என்பதற்கு சாப்ளினே சிறந்த வழிகாட்டி என்று நான் நினைக்கிறேன்.

ஆரம்பத்திலிருந்தே சினிமாவில் அரசியல் புகுந்து கொண்டது. காரணம் அடித்தட்டு முதல் உயர்மட்டம் வரை அனைவருக்கும் புரியக்கூடியதும் பாதிப்பைச் செலுத்தக்கூடியதுமான கலைவடிவமாக அது இருந்ததுதான். ஒரு கருத்தை மக்கள் மனதில் விதைப்பதற்குத் திரைப்படங்கள் சிறந்தவை என்று கண்டுகொண்ட உலக நாடுகளின் அரசியல் தலைவர்கள், தங்களது பிரசாரத்துக்கு அதைப் பயன்படுத்த ஆரம்பித்தார்கள். அரசாங்கங்களே நிதிகொடுத்துப் பிரசாரப் படங்களைத் தயாரித்தன. ஸ்டாலினும் ஹிட்லரும் இதில் முன்னோடிகள். செர்கே ஐசென்ஸ்டீன் போன்ற முதல்கட்ட பெரும் படைப்பாளிகள் கூட பிரசாரப் படங்களை எடுத்திருக்கிறார்கள். இரண்டாம் உலகப்போர்க் காலகட்டம் "பிரசாரப் படங்களின் பொற்காலம்" என்று அழைக்கப்படுகிறது. இந்தக் காலகட்டத்தில் தான் சார்லி சாப்ளின் எந்த அரசுப் பின்னணியும் இல்லாமல், ஒரு கலைஞனாக தன்னுடைய தனிப்பட்ட அரசியல் கருத்தை "தி கிரேட் டிக்டேட்டர்" படத்தில் பதிவுசெய்தார்.

(தொடரும்)

# குப்பையை கொடுத்தால் காய்கறி!






பழைய பேப்பர், போத்தல்கள், குப்பைகளை கொடுத்துவிட்டு, காய்கறி மற்றும் சமையல் பொருட்கள் வாங்கலாமாம் ஸ்வீடனில். அங்கு, ஒரு கோடி மக்கள் வசிக்கின்றனர். அவர்களிடமிருந்து, 1 கிலோ குப்பை 25 ரூபா வீதம் விலைக்கு வாங்குகிறது அரசு. இப்படி பொதுமக்களிடம் இருந்து 45 இலட்சம் தொன் குப்பையைப் பெற்று, அதை மின்சக்தியாக மாற்றுகிறது அந்நாடு. இதன் மூலம், இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் வீடுகளுக்கு, மின்சக்தி வழங்கப்படுகிறது.

குப்பைகள் போதவில்லை என்று, வெளிநாட்டிலிருந்து எட்டு இலட்சம் தொன், குப்பை கழிவுகளை இறக்குமதி செய்கிறது. இதில், நோர்வே தான் தொன் தொன்னாக குப்பையை ஏற்றுமதி செய்கிறது. அதே போல, மெக்ஸிகோவில் வாழும் இரண்டு கோடி மக்களிடமிருந்து, குப்பை, பழைய பேப்பர், பிளாஸ்டிக் பொருட்கள், பழைய போத்தல்கள் வாங்கப்படுகிறது. இதற்குப் பதிலாக, காய்கறிகள் வாங்கிக் கொள்ளலாம். குப்பை பிரச்சினையும் தீர்கிறது; மின்சாரமும் கிடைக்கிறது. மின்சாரக் கட்டணத்தை ஏற்றிக்கொண்டே செல்லும் நம் நாட்டிலும் இதை முயற்சிக்கலாமே!

தனக்கு உணவு கிடைக்கும் இடத்துக்கு இரண்டு பாதைகளை ஒரு எறும்பு கண்டால், அதில் எதைத் தேர்ந்தெடுப்பது என்று தெரியாமல் அந்த எறும்பு விழிக்கும்?

ஆனால், ஒரு எறும்புக் கூட்டத்துக்கு இந்தப் பிரச்சினையே இல்லை. உணவு தேடிச் செல்லும் பாதை முழுவதும் ஒவ்வொரு எறும்பும்



# எறும்பும் தேனீயும்


∴பெரோமோன்ஸ் என்கிற ஒரு வித இரசாயனத்தை விட்டுச் செல்கிறது. இதிலிருந்து எழும் மணத்தைப் பின்பற்றி எறும்புகள் தொடர்ந்து உணவுள்ள இடத்துக்குச் சென்று உணவை எடுத்துக் கொண்டு தங்களது இருப்பிடத்துக்குத் திரும்புகின்றன.

தேனீக்களும் உணவு தேடிச் செல்லும்போது, நூற்றுக்கணக்கில் பல திசைகளிலும் பறந்து செல்கின்றன. உணவிருக்கும் இடம் தெரிந்ததும் எல்லா தேனீக்களுக்கும் செய்தி பரவுகிறது. பல தேனீக்கள் அங்கு குவிகின்றன.

சிறு பூச்சிகள் பயன்படுத்தும் இந்த முறையைப் பயன்படுத்தி விஞ்ஞானிகள் மிகச் சிறிய ரோபோக்களை உருவாக்கியிருக்கிறார்கள். மனிதன் செல்ல முடியாத இடங்களுக்கு இவற்றை அனுப்பி விவரங்கள் சேகரிக்கிறார்கள்.

"எல்லா கண்டுபிடிப்புகளின் வடிவங்களையும் சோதித்துப் பார்த்தால் நாம் மீண்டும் இயற்கைக்கே திரும்புகிறோமோ எனத் தோன்றுகிறது. நவீனமான விஷயங்களில் கூட, சிறு பூச்சிகள் என்ன செய்கின்றன என்று அடிப்படையிலிருந்து ஆராயத் தொடங்குகிறோம்" என்று பூச்சி ரோபோக்களை உருவாக்கும் கார்ல் போரிங்கர் கூறுகிறார். இவர் வொஷிங்டன் பல்கலைக்கழகத்தில் பணிபுரிகிறார்.

# ஒவ்வொரு நாட்டினருடன் எப்படிப் பேசுவது?



**இங்கிலாந்து** - நாட்டினருடன் பேசும்போது நெருக்கமாக நிற்காதீர்கள். எவரையும் திருவாளர், திருமதி, டாக்டர் என்று உரிய மரியாதையுடன் அழைக்க வேண்டும். முறையாக உடை அணிய வேண்டும். அவர்களது தனிப்பட்ட வாழ்க்கையைப் பற்றிக் கேட்காதீர்கள். குடும்ப விஷயத்திலிருந்து பேச்சைத் தொடங்காதீர்கள். அதை அவர்கள் விரும்புவதில்லை.

**சீன** - நாட்டினருடன் எடுத்த எடுப்பில் வியாபார சமாச்சாரங்களைப் பேச வேண்டாம். உடலோடு ஒட்டி நிற்காதீர்கள். தொட்டுப் பேசாதீர்கள். தேநீரை இரசித்துக் குடியுங்கள். வியாபாரப் பேச்சு வார்த்தைகளின்போது அடிக்கடி தேநீர் தரப்படும். மரபு வழியிலான உடையை அணியுங்கள். வெள்ளை உடை அணிந்து பொது விழாக்களுக்குச் செல்லாதீர்கள். அங்கே வெள்ளை துக்கத்திற்கு அடையாளம்.

**அரபு** - நாட்டினருடன் உரையாடும்பொழுது உங்களுக்கு மிக அருகில் நெருக்கமாக நிற்பார்கள். அது அவர்கள் பழக்கம். அதைத் தவிர்க்க நீங்கள் பின்னே தள்ளி நிற்க முயற்சி செய்யாதீர்கள். அது அங்கே மரியாதைக் குறைவாகக் கருதப்படும். அராபியர்களிடம் அவர்களது குடும்பம் பற்றிக் கேள்வி கேட்காதீர்கள். அவர்கள் அதை விரும்புவதில்லை.

**பிரான்ஸில்** - விருந்தினர் உள்ளே நுழையும்போதும் விடை பெற்று வெளியே செல்லும்போதும் கை குலுக்குங்கள். பேச்சுவார்த்தைக்கு பிரெஞ்ச் மொழியில் முன்னதாகவே கடிதம் எழுதுங்கள்.

("நிர்வாகச் சிந்தனைகள்" நூலிலிருந்து)

# தாவடி மண்ணின் தன்னிகரற்ற தனித்தன்மை

**யாழ்.** மாநகரசபை எல்லைக்கு அப்பால் நல்லூர் பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட ஓர் அழகிய பக்தி மயமான படித்தவர்கள் வாழும் பண்பு மிக்க ஓர் கிராமமே தாவடி எனும் கிராமம்

இதில் ஜே/191,192,193,என பல கிராம சேவையாளர் பிரிவுகள் உள்ளடங்கலாகக் காணப்படுகின்றது. அதிகாலை ஆலய மணியோசைகளுடன் ஆரம்பமாகும். இவ்மக்களது பணிகள் அயராத முயற்சியாலும் உன்னத உழைப்பாலும் பல உயர்வு களைக் கண்டுள்ளது.

## பக்தியும், பண்பும்

பணப்பயிர் எனும் புகையிலை வியாபாரத்தில் உயர்வுகண்ட இக்கிராமம், படிப்பிலும், பண்பிலும் உயர்ந்த பல இளஞ்சந்ததிகளை இந்தச் சமூகத்துக்குத் தந்துள்ளது. நகர்ப்புற வாழ்வியலோடு இக்கிராமம் ஒன்றிணைந்து இருந்தாலும் பல தனித்துவப் பண்புகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

ஊர்மக்கள் உயர்விற்காக சனசமூக நிலையங்களையும், விளையாட்டுக் கழகங்களையும் ஆலயங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. தாவடி ஆதி காளியம்பாள் தேவஸ்தானம் ஜே/192 கிராம சேவையாளர் பிரிவிற்குட்பட்ட மக்களின் குல தெய்வமாக பூஜிக்கப்பட்டு வருகின்றது. இதில் பக்தி நனிசொட்டும் திருவிழாக்கள் இடம் பெறும் காலங்களில் தெய்வீக கலையாட்ட நிகழ்வுகள் வேறெங்கிலும் இல்லாத புதுமையாக நிகழ்கின்றன.

கள் மூலம் இணைபாட மற்றும் கலைத் திட்ட எண்ணக்கருக்கள் சிறப்பான முறையில் முன்நகர்த்தப்பட்டு பல சாதனைகளையும் பாடசாலைகள் சாதித்துள்ளது. புதுவருடப்பிறப்பில் மகிழ்சிகரமான தேர்த்திருவிழா விநாயகர் தேவஸ்தான வளாகத்தில் இடம் பெறும நிகழ்வு அக்கிராம

## பணப்பயிர்

தமிழினம் பல வழிகளால் துன்பப்பட்டு இன்னல்களைச் சுமந்து இருபபிடம் தெரியாது துடித்த காலங்களிலெல்லாம்




மலையேறி கிராமிய வாழ்வியல் முறையில் மீண்டும் புதுப்பொலிவு பெற்று வருகின்றார்கள். இவர்களால் கிராமங்கள் வளரவேண்டும். கிராமங்களின் வளர்ச்சிகளால் மக்கள் மனங்கள் மகிமை பெற வேண்டும். சிறுவர்களின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் கருவிகளில் ஒன்றாக கிராமங்கள் விளங்குகின்றன.


இத்தாவடி மண்ணில் சிறப்புற்று விளங்கும் இந்துமயானம் ஒன்று உள்ளது. இந்த மயானத்தை நோக்கி வேற்றுக்கிராம மக்களும் பூதஉடல்தகனத்திற்கு இக்கிராமத்தைத் தேடிவரும் வளக்கும் உள்ளது. இக்கிராம மக்களின் பிரதான பணப்பயிர் (புகையிலை)செய்கையும் அதனைப் பதப்படுத்தும் குடில்களும் ஆங்

மக்களை மாத்திரமல்ல அயற்கிராம மக்களையும் ஈர்க்கும் நிகழ்வுகளாக அமைகிறது. என்றென்றும் பொலிவுடன் திகழும் இக்கிராமம் நன்நெறி கொண்ட சமூகக் கட்டுப் பாட்டைத் தன்னகத்தே. கொண்டுள்ளது.

## புலனாய்வுத் தளம்

சங்கிலிய மன்னனின் அரசாட்சி நல்லூர் இராஜதானியை மையமாகக் கொண்டு சிறப்புற்ற காலங்களில், மன்னனின் முக்கிய போர்ததள பதியின் புலனாய்வுத் தளம் விளங்கிய இடமாகவும் தாவடி மண்பிரசித்தி பெற்று விளங்கியதாக வரலாறுகள் கூறுகின்றன. பல






தன்னகத்தே கொண்ட இக்கிராமம் தாவடியாகும். இது பல சாதனைகளையும் காலத்துக்குக் காலம் அமைத்துவருகின்றது. பிரதான வீதிக்கருகாமையில் (K.K.S. வீதி) பிரசித்திபெற்ற திருக்கல்யாண மண்டபத்தைக் கொண்ட வினாயகர் கோவில் உட்பட பல பக்திநெறி பரப்பும்

## காளியம்மன் வி.கழகம்

தாவடி காளியம்மன் விளையாட்டுக் கழகம் பல சாதனைகளை காலந்தோறும் நிகழ்த்தி வருகின்றது. A.B எனும் இரு அணிகள் இளம் பிறையன் ஆசிரியரின் பயிற்றுவிப்பால் இந்த வருடம் உயர் வெற்றிக் கிண்ணத்தைத் தனதாக்கிக் கொண்டுள்ளது.

இது தவிர நான்கு பாடசாலை



எழுத்தாளர்களையும், பல கவிஞர்களையும் உருவாக்கிய இக்கிராமம் சுயம்புலிங்கம் தோன்றிய வரலாறுகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது. அதாவது லிங்கங்கள் சுயமாக மயானத்தில் தோற்றம் பெற்றதாகவும் அது பினமர்ம்மாக மறைந்ததாகவும் ஊர்ஜிதப்படுத்தப்படாத, மரபு வழி வந்த கதைகள் பல இக்கிராமத்தில் உளளன. இது தவிர ஐயப்ப வழிபாடு பக்தி பூர்வமாக இடம்பெறும் கிராமமாகவும், இது போற்றப்படுகின்றது. சபரிமலை ஐயப்பனை வேண்டி வழிபடும் மக்கள் கூட்டம் இக்கிராமத்தில் வசித்துவருகின்றனர்.

காங்கே வீடுகள் தோறும் காணப்படுகின்றன. வேறு மாவட்டங்களிற்கு புகையிலை ஏற்றுமதி இக்கிராமத்தில் இருந்து மேற்கொள்ளப்படுகின்றது.

இக்கிராமங்களின் சாதனைகள், மகத்துவங்கள் வெளிக்கொணரப்பட வேண்டும் என்பதற்காகவே தினமுரசு வாரமொரு கிராமம், வாரமொரு பாடசாலையென பல பகுதிகளை வாரம் தோறும் வெளியிட்டுவருகிறது.

கிராமங்கள் வளரவேண்டும் நகர வாழ்வியல் கிராமியத்தால் மிளிரவேண்டும் இதுவே இப் பகுதியின் எதிர்பார்ப்பு.

# மாநகரசபை புதிய கட்டடத்திற்கு 800 மில்லியன் ரூபா ஒதுக்கீடு



யாழ்.மாநகர சபைக்கு சொந்தமான காணியில் அமையப்பெறவுள்ள புதிய கட்டடத்திற்காக ரூபா 800 மில்லியன் உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சினால் ஒதுக்கப்பட்டுள்ளது. நான்கு கட்டங்களாக பிரித்து மேற்கொள்ளப்பட இருக்கும இவ் வேலைத்திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு எதிர்வரும் 30ஆம் திகதி செவ்வாய்க்கிழமை உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சின் செயலகத்தில் இடம்பெறவுள்ளதாக யாழ். மாநகர சபையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மாதாந்தப் பொதுக கூட்டத்தில் மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்தார்.

# வலிகாமம் கல்வி வலய தமிழ்த்தினப்போட்டி முடிவுகள்

(வலிகாமம்)

வலிகாமம் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையே நடைபெற்ற வலய மட்ட தமிழ்தினப்போட்டியில் முதல மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரம் வெளியிடப்பட்டுள்ளன. விபரங்கள் வருமாறு:

(முன்னைய தொடர்...)

பாவோதல் பிரிவு-4

மு.சுதர்சினி(மானிப்பாய் மகளிர் கல்லூரி), க.கமி(இராமநாதன் கல்லூரி),அ.அஜந்தினி (ஆனைக்கோட்டை றோ.க.த.க பாடசாலை),

பிரிவு-5

து.யமுனாமலர் (யாழ்ப்பாணக்கல்லூரி), இ.கௌசிகா (பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி), இ.ஜெனார்த்தனி (யூனியன் கல்லூரி),

இசையும் அசைவும் பிரிவு 1

ர.மேரி. துஷாந்தி ( மானிப்பாய் சென்றஆன்ஸ் றோ.க.த.க.பாட), த.சரண்யா (இளவாலை கன்னியர்மடம் ம.வி.), கு.நிசாந்தினி (மல்லாகம் விசாலாட்சி வித்தியாலயம்).

இசை தனி பிரிவு 2

க.சியாமளன் (விக்ரோறியாக் கல்லூரி), உ.ஹனு சியா (இராமநாதன் கல்லூரி), அ.தோமஸ் (யாழ்ப் பாணக் கல்லூரி)

பிரிவு 3

பி.மிதுலா (மானிப்பாய் மகளிர் கல்லூரி), ச.யதுர் சன் (விக்ரோறியாக் கல்லூரி), கு.குணசர்மிலா (இராமநாதன் கல்லூரி)

பிரிவு 4

த.பவதாரணி (யூனியன் கல்லூரி), ப.சாரங்கன் (யாழ்ப்பாணக் கல்லூரி), சி.கில்மியா (இராமநாதன் கல்லூரி)

பிரிவு 5

அ.சண்முகப்பிரியன் (யூனியன் கல்லூரி), ப.டெசிந்தா (விக்ரோறியாக் கல்லூரி), இ. கதீஜா (மானிப்பாய் மகளிர் கல்லூரி)

இசை குழு 1

(உடுவில் மகளிர் கல்லூரி), (யாழ்ப்பாணக் கல்லூரி), (மகாஜனாக் கல்லூரி)

குழு 2

(இராமநாதன் கல்லூரி), (யாழ்ப்பாணக்கல்லூரி), (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி),

(தொடரும்...) (17, 06)

# உலமாக்கள் குழு யாழ். வருகை

காத்தான்குடியிலிருந்து உலமாக்கள் குழுவொன்று நேற்று முன்தினம் யாழ். நகர் வந்துள்ளது அஷ்சேஞக் ஆதம் லெப்பை தலைமையில் வருகை தந்துள்ள உலமாக்கள் வன்னி, முல்லைத்தீவு யாழ்ப்பாணம், மன்னார் மாவட்டங்களுக்குச் சென்று மக்கள் மத்தியில் இன நல்லுறவையும், பரஸ்பர அன்பையும், ஒற்றுமையையும் ஏற்படுத்தி சக வாழ்வுக்கான அறிவுரைகளை வழங்கவுள்ளார்கள் இதேவேளை இன்று வெள்ளிக்கிழமை யாழ். நகர் ஜும்மா மெஸ்கிலும், மானிப்பாய் வீதி பெரியமொஹிதீன் ஜும்மா பள்ளியிலும் குர்பாவும் ஜும்மாவும் நிகழ்த்துவார்கள்.

நான்கு நாட்கள் யாழ்.மாவட்டத்தில் தங்கியிருந்து நாட்டில் சாந்தி, சமாதானம், அமைதி ஏற்பட விசேட பிரார்த்தனையிலும் ஈடுபடவுள்ளார்கள்

யாழ்.மாவட்ட ஜம்இய்த்துல் உலமா மற்றும் முக்கிய பிரமுகர்களையும், சிங்கள, தமிழ் மதத்தலைவர்களையும், சமூக தலைவர்களையும், சந்தித்து உரையாடவுள்ளதாகவும் மௌலவி எஸ்.எம்.எம். முஸ்தபா (பலாஹி) தெரிவித்தார். (105)

வெள்ளி நற்சிந்தனை...



# ஆலயம் பிரார்த்தனைக்குரிய இடமாகும்

மனித சமுதாயம் நன்மை பெற இறைவனை வணங்குதல் அவசியம் மனிதர்களுக்குத் துன்பம் நேரும் போது இறைவனைப் பிரார்த்தனை செய்தல் அவசியமாகிறது. பிரார்த்தனை செய்யும் போது மனம் கடவுளைப் பற்றிய எண்ணத்தில் ஐக்கியமாகிறது. இறைவனது சக்தியும் நமது ஆன்ம சக்தியும் ஒன்று சேர்வது பிரார்த்தனையில் தான். மனதின் அடித்தளத்தில் உள்ள எண்ணத்துடன் நம் உள்ளக் கிடக்கை பிரார்த்தனையின் போது வெளிப்படுகின்றது. எனவே, பிரார்த்தனை செய்யும் போது மனம் தூய்மையாகிறது.

மனத்தைப் பற்றிக் கொண்டுதான் நாம் வாழ்வில் முன்னேற வேண்டும். ''மனம் எனும் தோணி பற்றி'' என்று நாவுக்கரசர் பாடுகிறார் மனித மனதில் நல்ல எண்ணங்களும் உண்டு, கெட்ட எண்ணங்களும் உண்டு. தீய எண்ணங்களை நீக்கி நல்ல எண்ணங்களை வளர்க்கப் பிரார்த்தனை அவசியம்.

மனம் உருகிஅழும்போது அந்தப் பிரார்த்தனை வலிமை பெறுகிறது. அழுதல் அக மனதை செம்மையாக்க உதவும் எண்ணங்கள் மேலோங்கி நிற்கின்றன. ஆனால் அவை போகப்போக வலிமை குன்றி மறைந்து இறைவனைப் பற்றிய எண்ணமே மேலோங்கி நிற்கும். அப்போது மனம் புனிதமடைகிறது. மனதில் புதைந்து கிடக்கும் மாபெரும் சக்தியை வெளிக்கொணர்வது பிரார்த்தனை. அது எல்லாவற்றையும் சாதிக்கும்.

பிரார்த்தனையின் அடுத்த நிலையாக இறைவனிடம் தம்மை அடைக்கலப் பொருளாக கொடுத்து விடுகிறோம். நம்முடைய விருப்பம் என்று எதுவும் அந்நிலையில் இல்லை. எல்லாம் அவனுடைய விருப்பத்தில் விட்டு விடுகிறோம். ''வேண்டத் தக்கது. அறிவோம். நீ வேண்டும். ஒன்று உண்டென்றால் அதுவும் உந்தன் விருப்பன்றே! என்கிறது திருவாசகம்.

பிரார்த்தனையின் இறுதிநிலையில் உலகிற்காகப் பிரார்த்தனை செய்கிறோம். "எல் லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லா மல் வேறொன்று அறியேன் பராபரமே'' என்று தாயுமானவர் பாடுகிறார். உலக நன்மைக்காகப் பிரார்த்தனை செய்யும் பக்குவம் வருகிறது. எனவே பிரார்த்தனை வலிமை மிக்கது. அதன் சக்தி அளவிட முடியாதது. ஆலய உற்சவங்களை களியாட்ட நிகழ்வாக மாற்றாமல், பிரார்த்தனைக்குரிய இடமாக மாற்றுவோம்.

சொல்லின் செல்வர்
**இரா.செல்வவடிவேல்**

# பதிவிறக்கப் பெட்டகம்

உன் முகம் பார்த்த என்னை
உன் அழகறைந்து
நடுத்தெருவில்
நிறுத்திற்று சில நொடிகள்
எதிர் வெயிலுக்குப் பணிந்த
தலையுயர்த்தி, ஒரு சுவற்றை
ஒரு மரத்தைப் பார்த்து
ஒதுங்குவது போல என்னைக்
கடந்து போகிறாய்...
நான் போகவிருந்த இடத்தின்
பொருள் முறிந்து
உனக்கு வலமிடமாயும்
முகமெதிரேயும்
சூழ்ந்த மனதுடன்
பின் தொடர்ந்து வருகிறேன்
முதுகில் புரளும்
கூந்தற் பதாகை
என்னை வழி நடத்துகிறது...
மீன்கொத்திப் பறவையின்
அலகு பட்ட நீர்த்தலமாய்
மெல்லதிர்கிறது உன் பின்புறம்
என்மேல் காலம் இரக்கம் வைத்து
தன் அற்புதமான பாகத்திலிருந்து
உதிர்த்துக் கொடுக்கும் தருணங்கள்
ஏதாவது ஒரு படிக்கட்டில், வாயிலில்
புகுந்து அஸ்தமிக்கப் போவதை
எதிர்பார்த்தபடியே பின்தொடர்கிறேன்.
**– யூமா. வாஸுகி**

கூரைமேல் அமர்ந்து
கூப்பிட்டுப் பார்க்கும் அம்மாவை.
உள்ளே ஸ்டவ் இரைச்சலில்
அம்மாவிற்கு அழைப்பு விழாது.
கூரையிலிருந்து
வாசலுக்கு இறங்கி
சுற்றிலும் ஒரு நோட்டம் விட்டு
தத்தும் – மீண்டும் ஒரு கூப்பிடல்.
சத்தம் கேட்டு விழித்து
'உர் உர்' என்கும்
வாசலில் கிடந்த டைகர்.
மிரட்டலுக்கு சற்று பயந்து
படலுக்குத் தாவி மீண்டும்
கூப்பிடும் அம்மாவை.
அம்மாவிற்கு காகம் தன்னை
எப்போதும் அங்கு வந்து
கூப்பிடுதல் தெரியாதுதான்.
என்றோ வீசிய பருக்கை
ஞாபகத்தில் இப்படித்தான்
தினமும் நடக்கிறது – அந்த
ஒரு கால்மணி நேரம்.
**– வா.மு.கோமு**

ஒன்றிரண்டு
கண்முன்னே
செத்துவிடுகிறது
திசைகளைத் தொலைத்து
பல
காணாமல் போய்விடுகிறது
என்றோ ஒட்டிக்கொண்ட
மகரந்தங்களோடு
நிதானமாய் பறக்கிறது
சிலது
என்றாலும்
பூப்பது நிற்பதில்லை.
**– ரவி சுப்பிரமணியன்**

சந்திரோதயம் நன்று
தெரியும் விதமாய் ஒரு தோட்டம்.
தோட்டத்து நெல்லி மரத்தில்
கயிற்றால் ஒரு ஊஞ்சல்.
'சருக்கலாகியும் சமஞ்ச குமரிக்கு
என்ன விளையாட்டுடி' எனச்
சத்தமாய் அம்மாவின் கூப்பாடு.
அப்படியே குதித்து இறங்கி
ஓடுவாள்.
ஊஞ்சல் மட்டும்
தனியே ஆடிக்கொண்டிருக்கும்
கைரேகை மங்கும் கருக்கலில்.
**– கலாப்ரியா**

தொலைத்தது தேடும்
அவசரத்தில் செல்லும்
மனித வாகனங்கள்.
வாகன மனிதர்களுடே
பழகியவர் தொட்டு வணங்க
புதியவர் பயந்து விலக
கழுத்து மணியொலிக்க
காதுகளசைத்து
தேராயசைந்து
செல்லுமந்த யானை
பாகனைச் சுமந்தவாறு.
கடைமுன் நின்று
கொடுத்ததை வாங்கி
வாயில் எறிந்தும்
காசை வாங்கிப்
பாகன் கை கொடுத்தும்
மெல்ல நகரும்
அடுத்த கடை நோக்கி.
அன்று
தன்னிச்சையாய்
மரக்கிளை ஒடித்தும்
பழக்குலை பறித்தும்
திருப்தியாயுண்டு
இனத்துடன்
நீராடித் திரிந்ததை –
பின்னாளில்
கடாரம் வென்று
கங்கை கொண்டு
இமயம் பெயர்த்த
மன்னரைச் சுமந்து
[அடிமைதானெனினும்]
இறுமாந்து சென்றதை –
அசைபோட்டவாறே
மெல்ல நகரும்
மாமூல் கடை நோக்கி.
**– ராஜசூரியன்**


எந்த நாட்டிலும் சென்று
வசிக்கத் தயார்
எந் நகரத்திலும் குடியேற
அச்சமில்லை
எந்த மனிதரோடும் பேச
தைரியம் உண்டு
எங்கள் ஊரைத் தவிர.
**– இரா.பொன்னாண்டான்**

ஓடும் இரயிலில்
ஒரு கனவு
பழகிய முகங்கள்
பாதியில் இறங்கின
புதிய முகங்கள்
நட்புக் கொண்டன
ஏறி இறங்கி
மாற்றம் கண்டன
முகங்கள்
நான் மட்டும்
அப்படியே இருக்கின்றேன்
சேரும் இடம்
தெரியாது.
**– துர்க்கா**

நம்பாதே அலைகளை
வீரத்துடன் எழுந்தாலும்
விழுந்துவிடும் மீண்டும்
துள்ளி எழுந்தாலும்
துவண்டு விழும் மீண்டும்
அருகருகே வந்தாலும்
அள்ளிக்கொள்ள முடியாது
வித்தியாசப்பட்டாலும்
விடுபட முடியாதவைகள்
முயற்சியுடையவையானாலும்
முதுகெலும்பற்றவைகள்
நம்பாதே இந்த அலைகளை
அது எதுவானாலும்
அது எந்தக் காலமானாலும்.
**– இலக்குமிகுமாரன் ஞானதிரவியம்**

# பயங்கரவாதிகளுக்கு அடைக்கலம் வழங்கி வருகிறது அரசாங்கம்

## பொன்சேகா குற்றச்சாட்டு



(கொழும்பு)

அரசாங்கம் பயங்கரவாதிகளுக்கு அடைக்கலம் வழங்கி வருவதாக முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். அரசாங்கம் பயங்கரவாதிகளையும், பிரிவினைவாதிகளையும் தேர்தலில் போட்டியிட அனுமதித்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

தயா மாஸ்டர் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் கீழ் போட்டியிடுவார் என வெளியான தகவல்களுக்கு பதிலளிக்கும் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தயா மாஸ்டர் ஓர் பயங்கரவாதத் தலைவர் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வட மாகாணசபைத் தேர்தலில் பயங்கரவாதிகளையும், குற்றவாளிகளையும் அரசாங்கம் தம் பக்கம் இணைத்துக் கொண்டு வருவதாகவும், குற்றவாளிகளுக்குத் தண்டனை விதிக்கப்படுவதனைத் தடுக்கும் நோக்கில் இவ்வாறு செயற்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

பயங்கரவாதிகளுக்கு எதிரான குற்றச் சாட்டுக்கள் தொடர்பில் விசாரணை நடத்தி தண்டனை விதிக்காது, அரசாங்கம் அவர்களைப் பாதுகாத்து வருவதாகத் தெரிவித்துள்ளார்.

முன்னாள் புலிகளின் தலைவர்களான பிள்ளையான், கருணா ஆகியோருக்கு அரசியல் சந்தர்ப்பம் வழங்கப்பட்டதாகவும், தற்போது தயா மாஸ்டருக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இன்னும் சில காலங்களில் குமரன் பத்மநாதனுக்கும் அரசியலில் களமிறங்க அரசாங்கம் வழியமைக்கும் அல்லது தேசியப் பட்டியல் ஊடாக நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை வழங்கும் என அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் இந்த நடவடிக்கையானது நாட்டின் நீதிமன்றக் கட்டமைப்பின் நடவடிக்கைகளைப் பாதிக்கும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தங்களுக்கு எதிராக கருத்து வெளியிடுவோரின் பட்டியலைத் திரட்டி வரும் அரசாங்கம், ஆதரவாக செயற்படுவோரை போஷித்துப் பாதுகாத்து வருவதாக சரத் பொன்சேகா மேலும் தெரிவித்துள்ளார்.

# மின்கட்டண அதிகரிப்பு அத்தியாவசியமான விடயம்

## என்கிறார் அமைச்சர் அமுனுகம

(கொழும்பு)

மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்பட்டமை நியாயமானது எனவும் அது அத்தியாவசியான ஒரு விடயம் எனவும் பிரதி நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் நடைபெற்ற சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியின் வருடாந்த சம்மேளனத்தில் கலந்துகொண்டு மீண்டும் நாடு திரும்பியுள்ள நிலையில் அவர் இந்தக் கருத்தினை வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, இலங்கையில் 65 வீதமாகக் காணப்பட்ட மின்விநியோகம் தற்போது 98 வீதமாகக் காணப்படுகிறது. முழு இலங்கைக்கும் மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. இதனால் மின்சாரத்திற்கான கேள்வி அதிகரித்துள்ளது.



எனவே, பாவனையாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத நிலை தற்போது காணப்படுகிறது. வங்கிகளிலுள்ள நிதியை இதற்காக ஒதுக்கீடு செய்தால் வங்கிகளின் நடவடிக்கையை முன்னெடுக்க முடியாது போகும். அதனால், இந்தப் புதிய தீர்மானத்திற்காக நாம் சிறிது அர்ப்பணிப்பு செய்ய வேண்டும்.

நியாயமானது மாத்திரமல்ல, அது அத்தியாவசியமான தொன்றாகும். வேறு எதனையும் செய்ய வழியில்லை, என்றார் பிரதி நிதியமைச்சர் சரத் அமுனுகம.

# பிரிட்டனின் அறிக்கை குறித்து பொதுபலசேனா அதிருப்தி

(கொழும்பு)

இலங்கைக்கு எதிரான பிரிட்டனின் அறிக்கை தொடர்பில் பொது பலசேனாவின் அதிருப்தியை இலங்கைக்கான பிரிட்டிஷ் தூதரகத்தின் உயரதிகாரிகளிடம் அவ் அமைப்பு நேரடியாக தெரிவித்துள்ளதோடு பொது பலசேனா முஸ்லிம் அடிப்படைவாதத்தையே எதிர்க்கின்றதே தவிர முஸ்லிம்களுக்கு எதிரான அமைப்பற்றதென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கான பிரிட்டிஷ் தூதரகத்தின் மூவரடங்கிய உயர் மட்ட அதிகாரிகள் குழுவினர் கடந்த செவ்வாய்க்கிழமை பொதுபலசேனா தலைமையகத்தில் அதன் பிரதிநிதிகளை சந்தித்து பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளனர்.

இதன்போதே பொது பலசேனா சார்பில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டதாக அதன் நிறைவேற்றுக் குழு முக்கியஸ்தர் லிலந்த வீதானகே இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தகவல் தருகையில்,

பொது பலசேனா ஒரு பயங்கரவாத அமைப்பாக தெரிவிக்கப்படுவதாகவும், முஸ்லிம்களுக்கு எதிரான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாகவும்,

மேலும் எமது அமைப்பு தொடர்பில் கடும் விமர்சனங்களுடனான தகவல்களே கிடைத்து வருவதாகவும் பிரிட்டிஷ் தூதரக குழுவினர் தெரிவித்தனர்.

இதற்கு எமது தரப்பில் நாம் பதிலளித்தோம். பொது பலசேனா பயங்கரவாத அமைப்போ அல்லது முஸ்லிம்களுக்கு எதிரான அமைப்போ கிடையாது.

மாறாக முஸ்லிம் அடிப்படைவாதத்தையே எதிர்க்கின்றோம் என எமது நிலைப்பாட்டையும் கொள்கைகளையும் தெளிவுபடுத்தியதோடு இலங்கைக்கு எதிரான பிரிட்டிஷின் அறிக்கை தொடர்பில் எமது அதிருப்தியையும் வெளியிட்டோம்.

எமது தெளிவுபடுத்தலை பிரிட்டிஷ் தூதரக அதிகாரிகள் செவிமடுத்ததோடு மீண்டும் சந்திக்கவும் இணக்கம் காணப்பட்டது.

இப்பேச்சுவார்த்தைகளில் தலைவர் கிரம விமலஜோதி தேரர், அப்புத்தளை பஞ்ஞாசார தேரர் மற்றும் நானும் கலந்துகொண்டேன் என லிலந்த விதானகே தெரிவித்தார்.

# மட்டக்களப்பிலும் காணி சுவீகரிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவம் மற்றும் கடற்படையின் தேவைக்காக 12 இடங்களில் காணிகளை சுவீகரிக்க அடையாளம் காணப்பட்டுள்ளதாக மாவட்ட செயலக வட்டாரங்கள் கூறியுள்ளன. இது தொடர்பாக மாவட்ட செயலகத்தில் ஆரம்பக்கட்ட ஆலோசனைக்கூட்டம் ஒன்று நடைபெற்றுள்ளது.

இதில் பாதுகாப்பு , காணி அமைச்சுக்களின் உயரதிகாரிகள், இராணுவ அதிகாரிகள் மற்றும் பிரதேச செயலக அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டதாகத் தெரியவருகிறது. வாகரை, கிரான், வாழைச்சேனை, செங்கலடி, பட்டிப்பளை ஆகிய பிரதேச செயலக பிரிவுகளில் 12 இடங்களில் தற்போது படையினர் நிலைகொண்டுள்ள இடங்களில் காணிகள் அடையாளம் காணப்பட்டதாக தெரிய வருகிறது.

இது குறித்து கருத்துக் கூறியுள்ள மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான பொன். செல்வராஜா இதில் தனியாரின் காணிகளும் உள்ளடங்குவதாகக் கூறி அதனைக் கண்டித்துள்ளார்.

# கொமன்வெல்த் தூதுவர்களை தி.மு.க. குழுவினர் சந்திப்பு

(சென்னை)

கொமன்வெல்த் நாடுகளின் அடுத்த சந்திப்பை இலங்கையில் நடத்தக் கூடாது என்று, அந்த அமைப்பின் உறுப்பு நாடுகளை தி.மு.க. கேட்டிருக்கிறது. இது தொடர்பாக கொமன்வெல்த் நாடுகளின் தூதர்களை தி.மு.க நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுக்கள் சந்தித்து பேசியிருக்கின்றன.

இலங்கையில் அல்லாமல் வேறு ஒரு இடத்தில் காமன்வெல்த் மாநாட்டை நடத்த வேண்டும் என்று தி.மு.க. குழுவினர் அந்த நாடுகளின் தூதுவர்களைக் கேட்டுள்ளனர். இளங்கோவன் மற்றும் டி. ஆர். பாலு ஆகியோர் தலைமையில் இரு குழுவினர் இந்த பிரசாரத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

இலங்கை மனித உரிமை நிலவரங்களைக் காரணம் காட்டி இந்த பிரசாரத்தை தி.மு.க. மேற்கொண்டு வருகிறது.

# வாகனப்பதிவில் வீழ்ச்சி

(கொழும்பு)

மோட்டார் வாகனங்களின் பதிவு வீழ்ச்சியடைந்துள்ளதாக மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த 6 மாதங்களில் வாகனங்களின் பதிவு மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டதாக மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகம் S.H.ஹரிஸ்சந்திர குறிப்பிட்டார். சாதாரணமாக மாதமொன்றிற்கு 28,000 வாகனங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. வாகனப் பதிவு வீழ்ச்சியடைவதற்கு முன்னர் மாதாந்தம் 45,000 வாகனங்கள் பதிவுசெய்யப்பட்டதாக மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் கூறினார். தற்போது நாட்டில் சுமார் 50 இலட்சம் வாகனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அவற்றில் சுமார் 35 இலட்சம் வாகனங்கள் போக்குவரத்தில் ஈடுபடுவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# வடக்கில் ஊடகசுதந்திரம் கவலை கொள்ளும் “கபே”

(கொழும்பு)

வடக்கின் ஊடக சுதந்திர நிலைமை குறித்து ‘கபே’ என்ற தேர்தல் கண்காணிப்பு அமைப்பு கவலை வெளியிட்டுள்ளது. வடக்கில் மாகாணசபைத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், ஊடகங்கள் மீது அடக்குமுறைகள் கட்டவிழ்த்துவிடப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. வடக்கில் ஊடகவியலாளர்களும் ஊடகங்களும் சுய தணிக்கை வழிகளைப் பின்பற்றி வருவதாகக் குறிப்பிட்டுள்ளது.

வடக்கில் தொடர்ச்சியாக ஊடகங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்ட காரணத்தினால் சுய தணிக்கையை ஊடகங்கள் பின்பற்றி வருவதாகத் தெரிவித்துள்ளது.

தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், மனித உரிமைகள், சட்டம் ஒழுங்கு மற்றும் ஜனநாயகம் தொடர்பில் ஊடகங்கள் சுய தணிக்கையைப் பின்பற்றுவது ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என கபேயின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திலிருந்து பிரசுரமாகும் சில ஊடகங்கள் தங்களது நிலைமைகளை மென்மையாக்கிக் கொண்டு தகவல்களை வெளியிட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

# ஆசிய அபிவிருத்தி வங்கிநிதியில் முறைகேடு இடம்பெறவில்லை

## ஊடக செய்தியை மறுக்கிறது அரசு

(கொழும்பு)

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதிஇலங்கையில் முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதாக சில ஊடகங்களில் வெளியான செய்தியை அரசாங்கம் மறுப்பதாக தகவல்ஊடகத்துறை அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

தகவல் ஊடகத்துறை அமைச்சில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு கூறினார். இங்கு அமைச்சர் மேலும் கூறியதாவது:

நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக ஆசிய அபிவிருத்தி வங்கி நிதி உதவி வழங்கும்போது அந்த நிதி எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றது என்பதை ஒரு குழு மூலம் கண்காணிக்கின்றது.


அத்துடன் ஒரு திட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட முழுத் தொகையும் ஒரே முறையில் வழங்காது திட்டங்களின் முன்னேற்றங்களை அவதானித்து கட்டம் கட்டமாகவே நிதி உதவி வழங்கப்படுகின்றது.

எனவே, சில ஊடகங் கள் குற்றம் சுமத்துவதுபோல் ஆசிய அபிவிருத்தி வங்கி உதவியில் எவ்வித முறைகேடுகளும் இடம்பெறவில்லை என்பதை அரசு உறுதியாகத் தெரிவிக்கின்றது.

மின் கட்டணத்தை உயர்த்திய அரசுக்கு எந்த வகை யிலாவது நெருக்கடி கொடுக் கவேண்டும் என்ற நோக்கிலேயே இந்தப் பொய்க் குற்றச்சாடடை சில ஊடகங்கள் பரப்புகின்றன என்றும் அமைச்சர் கூறினார்

1. மிகக் கூடியளவு உருளைக்கிழங்கு கொண்டு வரப்பட்ட நாள் எது? ........................
2. மிகக் குறைந்தளவு கத்தரிக்காய் விற்கப்பட்ட நாள் எது? ........................
3. புதன்கிழமை விற்கப்பட்ட மரக்கறிகளின் மொத்த அளவு யாது? ........................
4. செவ்வாய்கிழமை எஞ்சிய கத்தரிக்காய் எவ்வளவு? ........................
5. குறித்த வாரத்தில் விற்கப்பட்ட உருளைக்கிழங்கின் மொத்த அளவு யாது? ........................

33. வவுனியாவிலிருந்து கிளிநொச்சிக்கு மு.ப 10.45 இற்குச் செல்லவேண்டிய பேருந்து 40 நிமிடங்கள் பிந்திச் சென்றது எனின் சென்ற நேரம் யாது? ........................




34. அருகில் உள்ள உருவின் சுற்றளவு யாது? ........................

35. கூட்டுக - - ........................

36. தரப்பட்ட A, B பென்சில்களின் நீளங்களை எழுதுக.





A யின் நீளம் - ........................

B யின் நீளம் - ........................

37. 1 Kg 250g நிறையுள்ள வாழைப்பழங்களின் விலை ரூ.50.00 எனின், 1 Kg வாழைப்பழத்தின் விலை யாது? ........................


38. 6 *l* கொள்ளளவுடைய பாத்திரம் ஒன்றில் உள்ள திரவத்தை 7650 ml கொள்ளளவுடைய எத்தனை போத்தலில் ஊற்ற முடியும்? ........................

39. ரூபா 12.50 வீதம் 5 மாம்பழங்களை வாங்கி 100 ரூபாத் தாள் ஒன்றைக் கொடுத்தால் மீதி யாது? ........................

40. 

உருவில் நிழற்றப்பட்டுள்ள பகுதியைத் தசம எண்ணாக எழுதுக? ........................

41. அடைப்புக்களின் கோலத்தை அவதானித்து 3 ஆவது அடைப்புக்குள் வரவேண்டிய விதத்தை வரைக.



42. விழா ஒன்றில் கலந்து கொண்டோருக்கு நாளுக்கு இரு தடவைகள், தடவைக்கு 3 பிஸ்கட் வீதம் வழங்க 74 பேருக்கு ஒரு நாளுக்குத்தேவையான பிஸ்கட் எத்தனை? ........................

43. 2 *l* எரிபொருளில் 70 km தூரம் பயணிக்கும் மோட்டார் வாகனம் 5 *l* எரிபொருளில் பயணிக்கும் தூரம் எவ்வளவு?

44. பின்வரும் உரைப்பகுதியை வாசித்து தொடர்ந்து எழுதி நிறைவு செய்க.

"அன்று திட்டமிட்டபடி காலை ஆறு மணிக்கு சுற்றுலாவுக்காகப் பேருந்து பாடசாலை வாயிலை அடைந்தது. மாணவர்கள் எல்லோரும் ஓடிச்சென்று பேருந்தில் ஏறினார்கள். நானும் ஏறி இருக்கையில் அமர்ந்தேன். அப்போது பேருந்து புறப்பட்டது. (தொடர்ந்து ஆறு வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்கள் இடம்பெறவேண்டும்) ........................





# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2013

பகுதி - II

1 மணி 15 நிமிட

# கல்வி முரசு



ஆசிரியர் :- திரு. U.வதன்

**01) பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை தருக.**

வெயில் தணிந்து வானம் மப்பும் மந்தாரமுமாக இருந்தது. திடீரென மரங்கள் அசைந்து ஆடின. சாதாரணமாக வீசிய காற்று பலமாக வீசத் தொடங்கியது. தூசுக்கள் கடதாசிகள் எல்லாம் மேலே பறந்தன. மரங்கள் சரிந்து சரிந்து ஆடி இயலாமல் முறிந்தன. கூரைத் தகடுகள் காற்றில் பறந்தன. மழையும் பெய்யத் தொடங்கியது. "ஓ... ஓ..." என்ற சத்தத்துடன் காற்றுப் புயலாக மாறியது.

1. பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள சம்பவம் எது?
   1. வெயில் காட்சி  2. மழைக்காட்சி  3. இரவுக்காட்சி
2. பந்தியில் உள்ள பன்மைப் பெயர்ச்சொல் ஒன்று எழுதுக? ........................
3. மேலே உள்ள அடுக்குமொழிச் சொல் எது? ........................
4. பந்தியில் உள்ள இணைமொழிச் சொல் எது? ........................
5. இறந்தகாலப் பன்மைச் சொல்லை எழுதுக? ........................
6. "மரங்கள் அசைந்து ஆடின" என்பதை ஒருமை வாக்கியமாகத் தருக? ........................
7. பந்தியில் சூழலை மாசுபடுத்தக்கூடிய இரண்டு பொருட்கள் எவை? ........................
8. பந்தியில் உள்ள வீட்டின் பாகம் எது? ........................
9. இங்கு "வானம்" என்பதால் குறிப்பிடப்படுவது யாது? ........................
10. "வெயில்" என்பதன் எதிர்க்கருத்துள்ள சொல் எது? ........................

**02) பின்வரும் பொருள் தரும் மரபுத் தொடர்களை எழுதுக.**

1. சண்டை பிடித்தல் ........................
2. மிகவும் மகிழ்தல் ........................

**03) பின்வரும் பொருள் தரும் பழமொழிகளை எழுதுக.**

1. எதையும் ஆராய்ந்து பார்த்துச் செய்தல் வேண்டும் ........................
2. எதையும் தேவையில்லை என்று விடல் கூடாது ........................

**04) பின்வரும் வாக்கியங்களிற்கான நிறுத்தற் குறியீடுகளை உரிய இடங்களில் இடுக.**

1. மிருகக்காட்சி சாலை எங்கே இருக்கிறது
2. ஆகா எவ்வளவு பெரிய பூ

**05) பின்வரும் தொடர்களுக்கான தனிச் சொல்லை எழுதுக.**

1. வீணே பணத்தை செலவு செய்பவன் :- ..............................
2. அறுபதாவது ஆண்டு முடிவில் எடுக்கப்படும் விழா :- ..............................

**06) பின்வரும் இடைவெளிக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.**

1. அனைவரும் .............................. நடக்க வேண்டும் (நேர்வழி, நேர்வளி, நேர்வலி)
2. நேற்று .............................. பொழிந்தது ( பெறுமலை, பெருமலை, பெருமழை)

**07) "இங்கே வா" என்பதன் சிங்கள மொழிபெயர்ப்பைத் தமிழில் எழுதுக.**

..............................

..............................

**08) "குருத்துமா" எனும் சிங்களச் சொல்லின் தமிழ்க் கருத்தை ஆங்கிலத்தில் தருக.**

..............................

**09) "இது என்ன" என்பதை ஆங்கில வாக்கியமாகத் தருக.**

..............................

**10) "My School" என்பதைத் தமிழில் தருக**

..............................

**பின்வரும் வினாக்களுக்குச் சரியான விடையைத் தெரிவு செய்க.**

11. அவரை வித்து முளைக்கும்போது முதலில் வெளிவரும் பகுதி
 1. இலை 2. தண்டு 3. வேர் 4. அரும்பு

12. உடலிலிருந்து சக்தி கூடுதலாக விரயமாகும் விளையாட்டு எது?
 1. கரம் 2. சதுரங்கள் 3. சோகி விளையாட்டு 4. கயிறிழுத்தல்

13. பழுதடைந்த பாணில் காணப்படக்கூடிய இயல்பு யாது?
 1. வழுவழுப்பு 2. பூஞ்சணம் 3. நாறிய வாடை 4. ஒட்டும்தன்மை

14. உணவைச் சுவையூட்டவும், தரத்தை மேம்படுத்தவும் பயன்படாத பொருள் எது?
 1. கொதி நீர் 2. கறிவேப்பிலை 3. கடுகு 4. உப்பு


15. மயக்கமடைந்த ஒருவருக்கு செய்யக்கூடிய முதலுதவி
 1. நீர் பருகக் கொடுத்தல். 2. இருக்கச் செய்தல்.
 3. சுவாசிப்பதற்கு ஏற்ற சூழ்நிலையை உருவாக்கல். 4. மயக்க மருந்து கொடுத்தல்.

16. வாகனம் ஒன்றின் முன்பகுதி விளக்குகள் படத்தில் காட்டப்பட்டுள்ளது. C யினால் காட்டப்படுவது




 1. நிறுத்தி வைக்கும்போது பயன்படும் விளக்கு
 2. திரும்பும்போது பயன்படும் விளக்கு
 3. பின்நோக்கிச் செல்லும் போது பயன்படும் விளக்கு
 4. முன்நோக்கிச் செல்லும்போது பயன்படும் விளக்கு

17. இறுக்கமாகப் பற்றிப் பிடிக்கவும் சிறிய கம்பி போன்றவைகளை வெட்டவும் பயன்படும் பொருள் உருவில் எது?

1)  2)  3)  4) 



18. கடதாசித் தாள்களில் துளையிடப் பயன்படும் உரு எது?

1)  2)  3)  4) 

19. உமது பாடசாலைக்கு மட்டும் உரிய தனித்துவம் எது?
 1) தேசிய கீதம் 2) கொடிப்பாடல் 3) பாடசாலைக்கீதம் 4) ஆசிரியர்கீதம்

20. "ஈ -மெயில்" என்பதனால் கருதப்படுவது
 1) கடிதம் 2) தந்தி 3) பக்ஸ் 4) மின்னஞ்சல்

21. மிக விரைவில் தீப்பற்றக்கூடிய அல்லாதது எது?
 1) ஒயில் 2) எரிவாயு 3) பெற்றோல் 4) தின்னர்





22. "இங்கே வாகனங்கள் தரிக்கவும்" என்பதைக் காட்டும் வீதிச் சமிக்ஞை எது?

1. 

2. 
3. 

4. 

23. பின்வருவனவற்றுள் கம்பளித் தையலைக் காட்டும் சரியான உரு எது?

1.  2.  3.  4. 

**பின்வரும் வித்துக்களின் படங்களை இனங்கண்டு, பெயர்களைத்தெரிவு செய்து எழுதுக.**
(நாயுருவி, ஆடையொட்டி, ஆமணக்கு, பருத்தி, துத்திரி)

24.  25.  26.  27. 

**பின்வரும் தலைவர்களை இனங்கண்டு உரிய பெயர்களைத் தெரிவு செய்து புள்ளிக் கோட்டில் எழுதுக.**
(ஆனந்தசமரக்கோன், நாவலர், C.M.W. கன்னங்கரா, சித்திலெவ்பை )

28.  29.  30.  31. 

**32. கீழே அட்டவணையில் வாரமொன்றில் சந்தைக்குக் கொண்டு வரப்பட்ட மரக்கறிகளின் அளவும், குறித்த நாளில் விற்கப்பட்ட மரக்கறிகளின் அளவும் காட்டப்பட்டுள்ளன.**

| நாள் | கத்தரிக்காய் | | உருளைக்கிழங்கு | |
|---|---|---|---|---|
| | கொண்டு வரப்பட்ட அளவு | விற்கப்பட்ட அளவு | கொண்டு வரப்பட்ட அளவு | விற்றகப்பட்ட அளவு |
| திங்கள் | 340Kg | 185Kg | 275Kg | 196Kg |
| செவ்வாய் | 305Kg | 247Kg | 370Kg | 240Kg |
| புதன் | 280Kg | 215Kg | 210Kg | 190Kg |
| வியாழன் | 320Kg | 260Kg | 400Kg | 317Kg |
| வெள்ளி | 420Kg | 350Kg | 375Kg | 240Kg |

விசேட வினாத்தாள் II - தரம் 05 - 2013 - கல்விமுரசு

# இந்திய கடற்படைப்பலம் அதிக கவலையில் சீனா

## - என்கிறது அமெரிக்கா



இலங்கை செசெல்ஸ் போன்ற நாடுகளில் நிலைகளை அமைக்க வேண்டும் என்ற இந்து சமுத்திரம் தொடர்பான இந்தியாவின் கொள்கை குறித்து சீனா கவலை கொண்டுள்ளதாக ஆயுதக் கட்டுப்பாடுகள் தொடர்பான அமெரிக்க நிபுணர் கலாநிதி லோறா சால்மன் தெரிவித்துள்ளார்.

சீனாவின் ஆயுதக்கட்டுப்பாட்டுக் கொள்கை, இந்திய - சீன மற்றும் சீன- ரஷ்ய மூலோபாய உறவுகள் தொடர்பாக ஆராய்ச்சிகளை மேற்கொண்ட கலாநிதி லோறா சால்மன், அது தொடர்பான விபரங்களை இந்திய ஊடகம் ஒன்றில் வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பாக ஹைதராபாத்தில் ஊடகவியலாளர்களுடன் பேசிய கலாநிதி லோறா சால்மன்,

“சீனாவில் உள்ள சில நிபுணர்கள், கடற்படைப் பலத்தில் சீனாவுக்குச் சமமாக இந்தியா இருக்கிறது அல்லது அதனை முறியடிக்கக் கூடிய நிலையில் உள்ளது என்று உணர்கிறார்கள்.

அண்மைக்காலத்தில் இந்தியக் கடற்படை வலுப்படுத்தப்பட்டுள்ள நிலையில், அதனை இந்து சமுத்திரத்தைக் கட்டுப்படுத்தும் கொள்கைக்கு இந்தியா பயன்படுத்தலாம் என்று சீனா உணர்கிறது.

இது தான் அவர்களின் முதலாவது சிந்தனையாக உள்ளது.

சீனாவின் எரிபொருள் நிரப்பும் நிலைகள் பொருளாதார நலன்களுக்கு அப்பால் இராணுவ நோக்கங்களுக்கும் பயன்படுத்தப்படக் கூடும்.


பாதுகாப்பு நவீன மயப்படுத்தல் திட்டத்தை செயற்படுத்தும் இந்தியா மீதான சீனாவின் கவனம் அதிகரித்துள்ளது.

இந்திய - அமெரிக்க கூட்டை, பிராந்தியத்தில் சீனாவை முறியடிக்கும் மூலோபாயம் என்ற கோணத்திலேயே சீனா நோக்குகிறது.

ஜப்பான், தாய்வான் நாடுகளை உள்ளடக்கிய அமெரிக்க கூட்டணியில் இந்தியாவும் பங்கேற்கக் கூடும். என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்

# பிரதமர் பதவியில் விருப்பமில்லை கூறுகிறார் அமைச்சர் சிதம்பரம்

(புதுடில்லி)




எனக்கு பிரதமராக வேண்டும் என்ற ஆசை இல்லை கட்சி பணியாற்றவே விரும்புகிறேன், என மத்திய நிதிஅமைச்சர், சிதம்பரம் கூறினார்.

பிரதமர் பதவி மீது, எனக்கு ஆசை உள்ளதா என, கேட்கப்படுகிறது. உண்மையில், அப்படிப்பட்ட ஆசை எதுவும், எனக்கு இல்லை எதிர்பார்ப்பும் இல்லை. பிரதமர் பதவிக்கு அதிகமானோர் உள்ளனர்.

என்னால், கட்சிப் பணியையும், சிறப்பாக செய்ய முடியும் என்ற நம்பிக்கை உள்ளது. இதை, காங்., மேலிடத்துக்கு நிரூபித்துக் காட்ட விரும்புகிறேன். ஆனாலும், கட்சி மேலிடம் என்ன கூறுகிறதோ, அந்த கட்டளையை ஏற்று, நடப்பேன்.பயணிக்கவும், எழுதவும், படிக்கவும், ஆர்வமாக உள்ளது. கட்சி மேலிடம், இதற்கு அனுமதி அளிக்கும் என்ற நம்பிக்கை உள்ளது. லோக்சபாவுக்கு முன் கூட்டியே தேர்தல் வரும் என, கூறப்படுவதை ஏற்க முடியாது. ஐ.மு., கூட்டணி அரசு, தன் முழு பதவிக் காலத்தையும் நிறைவு செய்யும். லோக்சபாவுக்கு முன்கூட்டியே தேர்தல் நடப்பதற்கான வாய்ப்பு இல்லை.இவ்வாறு, சிதம்பரம் கூறினார்

# இந்திய எல்லைக்குள் ஊடுருவல் சீனா செல்கிறார் சல்மான் குர்ஷித்



இந்திய எல்லையான லடக் பகுதிக்குள் சீனவீரர்கள் அத்துமீறி நுழைந்திருக்கும் நிலையில், இந்தியாவின் வெளியுறவுத் துறை அமைச்சர் சல்மான் குர்ஷித் மே 9ஆம் திகதி சீனா செல்வது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்திய எல்லைப் பகுதிக்குள் சீனவீரர்கள் நுழைந்து முகாமிட்டிருப்பதாக இந்தியா கூறியுள்ள குற்றச்சாட்டை முற்றிலும் மறுத்துள்ளது சீனா.

இது இந்திய இராணுவத்தின் கற்பனையல்ல. இந்திய எல்லைப் பகுதியான டௌலட் பெக் ஓல்டி அருகே சீனவீரர்கள் முகாமிட்டிருப்பதையும், அவர்களது நடமாட்டத்தையும், இந்தியாவின் ஆளில்லா வாகனம் மூலம் இந்தியா தொடர்ந்து கண்காணித்து வருகிறது. இது தொடர்பாக இரு நாட்டு இராணுவ கமாண்டர்களுக்கு இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தையில் ஒருமித்த முடிவு எட்டப்படவில்லை.

இந்த நிலையில், சீனா சென்று முக்கியத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த சல்மான் குர்ஷித சீனா செல்ல முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்திய எல்லைக்குள் சீனவீரர்கள் ஊடுருவியிருக்கும் நிலையில், இராணுவ தளபதி பிக்ரம் சிங், இந்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ஏ.கே. அந்தோணியை சந்தித்துப் பேசினர்.

லடக் பகுதியில் தற்போதிருக்கும் நிலை குறித்தும், வடகிழக்கு கொமாண்டர் படை அப்பகுதியில் குவிக்கப்பட்டுள்ளது குறித்தும், அந்தோணியிடம், பிக்ரம் சிங் விளக்கினார். கடந்த இரண்டு நாட்களாக காஷ்மீர் சென்றிருந்த பிக்ரம் சிங், அங்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து பாதுகாப்புத் துறை அமைச்சரிடம் எடுத்துரைத்தார்.

# தாஜ்மஹால் அருகே குண்டுவெடிப்பு 2பேர் பலி



(ஆக்ரா)

தாஜ்மஹால் அருகே இராணுவ குப்பையில் இருந்து குண்டு வெடித்ததில் 2 பேர் பலியாகினர், ஒருவர் படுகாயமடைந்தார். உத்தர பிரதேச மாநிலம் ஆக்ராவின் தாஜ்கஞ்ச் பகுதியில் பழைய பொருட்கள் வைக்கும் கிடங்கு ஒன்று உள்ளது. இந்தக் கிடங்கில் இராணுவத்திடம் இருந்து வாங்கப்பட்ட பழைய பொருட்கள் வைக்கப்பட்டிருந்தன. ஒரு பழைய பொருட்கள் வாங்கும் வியாபாரி இராணுவத்திடம் இருந்து வாங்கப்பட்ட பொருட்களில் உலோகங்களில் இருந்து வெடிபொருட்களை பிரித்தெடுத்துக் கொண்டிருந்தார். அப்போது வெடிபொருட்கள் வெடித்தன. இந்தச் சம்பவத்தில் 2 பேர் பலியாகினர். மேலும், ஒரு பெண் படுகாயமடைந்தார். காயம் அடைந்தவர் மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். இந்த குண்டுவெடிப்பு நடந்த இடம் காதல் சின்னமான தாஜ்மஹால் இருக்கும் இடத்தில் இருந்து 5 கி.மீற்றர் தொலைவில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இந்தச் சம் பவம் குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# டில்லியில் பலாத்கார சம்பவங்கள் அதிகரிப்பதற்கு காரணம் என்ன?

## - கேட்கிறது உயர் நீதிமன்றம்

இந்தியச் செய்திகள்

டில்லியில் பாலியல் பலாத்கார சம்பவங்கள் அதிகரித்திருப்பதற்கான காரணம் என்ன என்பதை கண்டறியுமாறு டில்லி உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

டில்லியில் பாலியல் பலாத்கார சம்பவம் குறித்த வழக்கு விசாரணைக்கு வந்த போது, டில்லியில் என்ன நடக்கிறது என்று நினைத்தால் அதிர்ச்சியாக உள்ளது. இப்படி நடக்கஎன்ன காரணம் என்பதை முதலில் கண்டறிய வேண்டும் என்று டில்லி உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி டி. முருகேசன் கூறியுள்ளார்.

டில்லியில், எங்கே எதிலே தவறு நடக்கிறது. மக்கள் பலரும் முட்டாளாகி வருகின்ற னர். இதுபோன்று திடீரென பாலியல் பலாத்கார சம்பவங்கள் அதிகரிக்கக் காரணம் என்ன என்பதை டில்லி காவல் துறையினர் கண்டறிந்து, உடனடியாக அதன் ஆணிவேரை பிடுங்க வேண்டும்

இதுபோன்ற குற்றங்கள் அதிகம் நடக்கும் பகுதிகளில் உள்ள பொலிஸாருக்கு சிறப்பு பயிற்சி அளித்து, குற்றச் செயல்களை தடுக்க நடவடிக்கை தீவிரப் படுத்தப்பட வேண்டும் என்றும் நீதிபதி தெரிவித்துள்ளார்

## வாழ்க வளமுடன்

தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்

பெயர் : ஐஸ்நோயர் அபியு

முகவரி : 51, 6ஆம் குறுக்கு வீதி யாழ்ப்பாணம்.

அகவை 10 இல்

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்



தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்

பெயர் : கோ.அஸ்வின்

முகவரி :5/A வட்டாரம். நயினாதீவு.

அகவை 5 இல்

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்



## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ......................................

முகவரி : ......................................

பிறந்த ஆண்டு : ......................................


கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

......................................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் “தினமுரசு” தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# எட்டுமாடிக் கட்டடம் இடிந்து வீழ்ந்து
# பங்களாதேஷில் 175 பேர் உயிரிழப்பு



(டாக்கா)

பங்காளதேஷ் தலைநகர் டாக்காவின் புறநகரான "சவார்" பகுதியில் ரானா பிளாசா என்ற இடத்தில் 8 மாடிக் கட்டடம் இருந்தது. அங்கு ஆயத்த ஆடைத் தொழிற்சாலைகள் இயங்கி வந்தன. அங்கு சுமார் 2,600இற்கும் மேற்பட்டவர்கள் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது யாரும் எதிர்பாராத வகையில் அந்தக் கட்டடம் நேற்றுமுன்தினம் இடிந்து விழுந்து தரைமட்டமானது. இதனால் இடிபாடுகளில் சிக்கி 175 பேர் பலியாகினர். தகவல் அறிந்ததும் பொலிஸார் தீயணைப்பு படையினர் உள்ளிட்ட மீட்புக் குழுவினர் விரைந்தனர். இடிபாடுகளை அகற்றி காயமடைந்தவர்களை மீட்டனர். அப்போது மேலும் பல உடல்கள் கண்டெடுக்கப்பட்டன.

இதுவரை 175 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. இடிபாடுகளை அகற்றும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இதுவரை 1000 பேர் காயத்துடன் மீட்கப்பட்டுள்ளனர். இன்னும் நூற்றுக்கணக்கானவர்கள் இடிபாடுகளில் சிக்கி தவிக்கின்றனர். அவர்களை உயிருடன் மீட்கும் பணி நடந்து வருகிறது. எனவே, இடிபாடுகள் அதிவேகமாக அகற்றப்பட்டு வருகின்றன.

இதற்கிடையே இக்கட்டடம் மிகவும் பழுதடைந்து . இடியும் நிலையில் இருந்ததாகவும், தொழிற்சாலையின் மேலாளர் அதைக் கண்டு கொள்ளாமல் தொடர்ந்து இயக்கியதால்தான் இந்தக் கோர விபத்து நடந்ததாகவும் தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

இந்தக் கட்டடம் ஆளும்அவாமி லீக் கட்சியின் இளைஞர் அணித் தலைவருக்கு சொந் தமானது. அவரும் கட்டட இடிபாடுகளுக்குள் சிக்கியிருந்தார். பின்னர் அவர் உயிருடன் மீட்கப்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

# இயற்கை அனர்த்தம்; ஆப்கனில் 33பேர் பலி



ஆப்கானிஸ்தானின் கிழக்குப் பகுதியில் பாகிஸ்தானை ஒட்டி அமைந்துள்ள ஜலாலாபாத்தில் நேற்றுமுன்தினம் மாலை 3 மணியளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவில் 5.7 ஆகப் பதிவான இந்த நிலநடுக்கத்திற்கு குனர், நங்கர்ஹர் அப்பகுதி வீடுகள் இடிந்து விழுந்தன. இதில் 18 பேர் உயிரிழந்தனர். இதன் பூகம்ப மையம் லாக்மான் மாகாணத்தில் இருந்து 11 ஆவது கிலோமீற்றரில் 65 கிலோ மீற்றர் ஆழத்தில் இருந்ததாக அமெரிக்க மண்ணியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இந்த பூகம்பம் டில்லியில் உணரப்பட்டது.

இதேவேளை ஆப்கனின் வடக்குப்பகுதியில் அமைந்துள்ள பால்க் மாகாணத்தில் பெய்த கன மழையால் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இதில் சிக்கி 15 பேர் உயிரிழந்தனர்.

உலகச் செய்திகள்

# வெள்ளை மாளிகையில் குண்டுவெடிப்பு
# டுவிட்டர் செய்தியால் பேரிழப்பு




வெள்ளை மாளிகையில் குண்டுவெடித்து அதிபர் ஒபாமா காயமடைந்துள்ளதாக டுவிட்டரில் வெளியான செய்தியால் 200 பில்லியன் டொலர் இழப்பு ஏற்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் ஏபி செய்தி நிறுவனத்தின் டுவிட்டர் கணக்கினுள் ஊடுருவிய சிரிய ஹேக்கர்ஸ், வெள்ளை மாளிகையில் இரு குண்டுகள் வெடித்துள்ளதாகவும், அதிபர் ஒபாமா காயமடைந்துள்ளதாகவும் செய்தி வெளியிட்டனர். உடனடியாக இந்தச் செய்தி மறுக்கப்பட்டபோதிலும், இரண்டு மில்லியன் மக்கள் இதனைப் பார்வையிட்டனர். இதனால் அமெரிக்காவின் வர்த்தகம் வெகுவாகப் பாதிக்கப்பட்டது. இந்த இழப்பு சுமார் 200 பில்லியன் டொலர் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

# தீவிரவாதிகள் தாக்குதல்
# சீனாவில் 21பேர் பலி

(பீஜிங்)

சீனாவில் தீவிரவாதிகள் நடத்திய குண்டு வெடிப்பு தாக்குதல் சம்பவத்தில் 21 பேர் கொல்லப்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. சீனாவின் ஜின்ஜிகாங் மாநிலம் பாசு கவுன்டி அருகே கஷ்கார் நகரில் தீவிரவாதிகள் கடந்த செவ்வாய்கிழமை வெடிகுண்டுத் தாக்குதலில் ஈடுபட்டனர். இதில் 21 பேர் கொல்லப்பட்டனர்.

சீனாவில் புதிய அதிபராக ஜி ஜிங்பிங் பதவி ஏற்றுள்ள நிலையில் மிகப்பெரிய தீவிரவாத தாக்குதல் நடைபெற்றுள்ளது அங்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பாக அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சக செய்தி தொடர்பாளர் "ஹசியாங் செய்தியாளர்களிடம் பேசினார் அப்போது அவர் கூறியதாவது, தீவிரவாதிகள் நடத்திய வெடிகுண்டு தாக்குதலில் 21 பேர் கொல்லப்பட்டனர். இதில் 6 தீவிரவாதிகள் பொலிஸாரால் துப்பாக்கியால் சுட்டுக்கொல்லப்பட்டனர். 15 சமுதாய பணியாளர்கள் வெடிகுண்டு சம்பவத்தில் பலியானார்கள். மேலும் 8 தீவிரவாதிகள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# முஷரப்பை அவமானப்படுத்தினால் சட்டத்தரணிகளுக்கு தக்க பதிலடி

## ஓய்வு பெற்ற தளபதிகள் எச்சரிக்கை

"பாகிஸ்தான் முன்னாள் அதிபரும் அந்த நாட்டு இராணுவத்தின் முன்னாள் தலைமைத் தளபதியுமான முஷரப்பை அவமானப்படுத்த நினைக்கும் சட்டத்தரணிகளுக்கு தக்க பதிலடி தருவோம்" என ஓய்வு பெற்ற இராணுவத் தளபதிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.



இது தொடர்பாக ஓய்வு பெற்ற இராணுவத் தளபதி மிர்சா அஸ்லம் பேக் செய்தியாளர்களிடம் கூறியதாவது,

முஷரப்புக்கு எதிராக சிலர் வன்முறையைத் தூண்டிவிட்டு அரசியல் ஆதாயம் பெற முயன்று வருகின்றனர். ஒரு கட்டத்திற்கு மேல் அவரை அவமானப்படுத்துவதை மூத்த இராணுவ அதிகாரிகளான எங்களால் சகித்துக் கொள்ள முடியாது.

இந்த நாட்டின் அதிபராக 7 ஆண்டு காலம் பதவி வகித்த முஷரப்புக்கு எதிராக அவரை அவமானப்படுத்தும் வகையில் நடந்து கொள்ளும் துணிச்சல் இவர்களுக்கு (சட்டத்தரணிகளுக்கு) எங்கிருந்து வந்தது?

முஷரப் வெளிநாட்டில் இருந்தபோது சமூக வலைத்தளங்களின் மூலம், பாகிஸ்தான் அவரது வருகைக்காகக் காத்திருப்பது போன்றும், வெளிநாட்டில் இருந்து அவர் பாகிஸ்தான் திரும்பி வந்தால் உடனடியாக அவருக்கு கிரீடம் சூட்டப்படும் என்பது போன்ற செய்திகளை பரப்பி, சில தீயசக்திகள் சதி வலை பின்னின.

அவரது வருகைக்குப் பின்னர் அந்த தீயசக்திகள் எல்லாம் கூட்டணி அமைத்துக் கொண்டு, திட்டமிட்டு அவரை அவமானப்படுத்த துணிந்துள்ளன. முஷரப்புடன் சேர்ந்து இராணுவ அமைப்பையும் தேவையில்லாத சர்ச்சைக்கு இவர்கள் உள்ளாக்க முயற்சித்து வருகின்றனர்.

இதேபோல், தொடர்ந்து முஷரப்பை அவமானப்படுத்தவும், இராணுவத்தை நீதிமன்றுக்கு இழுக்கவும் சட்டத்தரணிகள் நினைத்தால் நாங்கள் சரியான பதிலடி தருவோம். அப்போது நிலைமை இன்னும் அபாயகரமாகவும், விபரீதமாகவும் மாறி விடும் என எச்சரிக்க விரும்புகிறோம். இவ்வாறு அவர் கூறினார்.

முஷரப்பின் ஆட்சிக் காலத்தில் பதவி உயர்வு பெற்ற அதிகாரிகளில் பலர் தற்போது இராணுவத்தின் உயர் பொறுப்புகளில் உள்ளதால் முஷரப் அவமானப்படுத்தப்படுவதை அவர்கள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்.

முஷரப் மீது விசுவாசம் கொண்ட சிலர் அவரை வீட்டு சிறைக்காவலில் இருந்து காப்பாற்றவும் முயற்சிக்கக்கூடும் என ஓய்வு பெற்ற இராணுவ உயரதிகாரி ஜாம்ஷெட் அயாஸ் கூறினார்.

# தொழில்மையத்தைத் திறக்க வடகொரியாவிற்கு அழைப்பு


(சியோல்)

வடகொரியாவில் உள்ள தொழில் மையத்தை மீண்டும் திறக்க பேச்சுவார்த்தை நடத்த வடகொரியாவுக்கு தென்கொரியா நேற்று அழைப்பு விடுத்துள்ளது.

தென்கொரிய எல்லையில் உள்ள வடகொரியா பகுதியில் கெசாங் தொழில் மையம் இயங்கி வந்தது. இருநாடுகளும் கூட்டாக அமைத்துள்ள, இதில் இரு நாட்டு தொழிலாளர்களும் பணிபுரிந்து வந்தனர். போர் பிரகடனம் செய்ததை தொடர்ந்து கடந்த 3ஆம் திகதி இந்த வளாகத்தை வடகொரியா மூடியது.

இதில் பணிபுரிந்த தனது பணியாளர்களை கடந்த 9ஆம் திகதி தென்கொரியா திரும்ப அழைத்துக்கொண்டது.

இந்நிலையில், தென்கொரியாவின் ஒருங்கிணைப்பு அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் கிம் ஹியூங் சியோக் நேற்று கூறியிருப்பதாவது,



இந்த தொழில்மையத்தை திறப்பது தொடர்பாக இரண்டு நாடுகளின் அரசு அதிகாரிகளிடையே பேச்சுவார்த்தை நடத்துவதை நாங்கள் ஆதிகாரபூர்வமாக முன்மொழிகிறோம்.

வடகொரியா தனது பதிலை இன்று காலைக்குள் தெரிவிக்க வேண்டும். இதனை மறுத்தால், நாங்கள் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்வோம். இவ்வாறு அவர் கூறினார்.

# கல்வியில் உற்சாகம் ஊட்ட யு.என்.டி.பி. செயற்றிட்டம்

(திருநெல்வேலி)

யு.என்.டி.பி. நிறுவனத்தினால் ஐந்து மாவட்டங்களைச் சேர்ந்த பின்தங்கிய பிரதேசங்களில் உள்ள இருபத்திரண்டு பாடசாலைகளைச் சேர்ந்த 225 மாணவ, மாணவிகள் பதுளை ஊவா பல்கலைக்கழகத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு பல பயனுள்ள கல்விச் செயற்பாடுகள் மற்றும் விளையாட்டுப் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த 17 ஆம் திகதியிலிருந்து 21 ஆம் திகதி வரை இப்பயணம் மேற்கொள்ளப்பட்டது. யாழ்ப்பாணம், அநுராதபுரம், வவுனியா, பொலநறுவை, அம்பாறை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த தமிழ், சிங்கள, முஸ்லிம் மாணவர்களுடன் பெற்றோர், அதிபர், ஆசிரியர்கள், கல்விப் பணிப்பாளர்கள், ஆகியோரும் கலந்துகொண்டனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து உயரப்புலம் மெ.மி.த.க. வித்தியாலயம், சில்லாலை றோ.க.த.க. பாடசாலை, பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி, ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாலயம் ஆகிய ஐந்து பாடசாலைகளைச் சேர்ந்த ஐம்பது மாணவர்கள் கலந்துகொண்டனர்.

கலந்துகொண்ட மாணவர்களுக்கு வழங்கப்பட்ட கிரிக்கெட் பயிற்சியினை நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் இலங்கைக் கிரிக்கெட் கொமிட்டியின் தலைவருமான அர்ஜுன ரணதுங்க, சஜீவ ரணதுங்க, நுவான் கொய்சா மற்றும் பலர் வழங்கினர். பெண்களுக்கான இலங்கை கூடைப்பந்தாட்டத் தலைவி தர்ஷினி சிவலிங்கம், கால்பந்தாட்டத் தலைவர் மொகமட் அமுனுல்லா, கரப்பந்தாட்டத் தலைவர் நஸின் அந்தஸ்தத் சம்பத் போன்றோர் பயிற்சிகளை வழங்கினர். நடனம், சங்கீதம் போன்ற பல கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

மகியங்கனையிலிருந்து வேடுவத் தலைவர் உட்பட அவரது குழுவினர் அழைத்து வரப்பட்டு ஆடல், பாடல் நிகழ்வுகள் நடாத்தப்பட்டன. பயனுள்ள பல கல்விச் செயற்பாடுகளும் இடம்பெற்றன.

கடந்த இரண்டு வருடகாலமாக நடைபெற்ற தமிழ், சிங்கள, முஸ்லிம் பாடசாலைகளை இணைக்கும் செயற்திட்டத்தின் நிறைவு நிகழ்வாக இப்பயணம் அமைந்துள்ளது. (137)

## காணி சுவீகரிப்பு...

அவ்வாறான செயற்றிட்டங்களை முன்னெடுக்கவும் தயாராகவுள்ளோம். கிளிநொச்சியில் படைத்தரப்பினர் வசமிருந்த அறிவியல் நகரை மீளப்பெற்று தற்போது அங்கு யாழ். பல்கலைக்கழகத்தின் விவசாய மற்றும் பொறியியல் பீடங்களை இயங்க வைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு அதில் வெற்றியும் கண்டுள்ளோம்.

அந்தவகையில், வலிகாமம் வடக்கு மற்றும் கிழக்குப் புகுதிகளில் தற்போது படைத்தரப்பினரால் அபகரிக்கப்பட்டுள்ள காணிகள் தொடர்பில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் விரைவில் கலந்துரையாடலொன்றை மேற்கொண்டு குறித்த விடயம் தொடர்பாக தெளிவுபடுத்தவுள்ளதாகவும் அமைச்சர் இதன்போது சுட்டிக்காட்டினார். இச் சந்திப்பின்போது ஈ.பி.டி.பி.யின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்) உடனிருந்தார்.

## வலி. வடக்கு...

என்று கோரியிருக்கின்றது. காணி உரிமையாளர்கள் சென்று பார்க்கமுடியாதவாறு அதியுயர் பாதுகாப்பு நிலையில் வைத்துள்ள இந்தக் காணிகளை காணி எடுத்தல் சட்டப்படி சுவீகரிக்கப் போவதாகக் கூறி, அதற்கான அறிவித்தல்களை அந்தக் காணிகளில் அரசாங்கம் ஒட்டியிருக்கின்றது. ஆயினும் அந்தக் காணிகள் யாருடையவை என்பது இன்னும் அடையாளம் காணப்படவில்லை என்றும் அந்த அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

எனவே, வலி. வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள காணிகளை மக்கள் படையினருக்கு இனம் காட்டக்கூடாது. அந்தக் காணிகளை நீங்கள் பார்க்கப்போவது, அவற்றை நீங்களே படையினரிடம் ஒப்படைத்தது போலாகிவிடும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா மேலும் தெரிவித்திருக்கின்றார்.

இந்தக் காணிகளை பொதுமக்கள் சென்று பார்வையிடலாம் என்று தகவல் வெளியாகியிருக்கின்ற நிலையிலேயே மாவை சேனாதிராஜா இதனைத் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் யாழ். மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத் தலைவி சாந்தா அபிமன்னசிங்கத்தின் தலைமையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் பொன்னம்பலம் கஜேந்திரகுமார் உள்ளிட்ட சட்டத்தரணிகள் குழுவொன்று புதன்கிழமை வலிகாமம் வடக்கு அதியுயர் பாதுகாப்பு வலயத்திற்குள் சென்று காணிகளைப் பார்வையிட முயற்சித்த போதிலும், அதற்கு இராணுவம் அனுமதி வழங்கவில்லை.

சுவீகரிக்கப்படவுள்ள 6400 ஏக்கர் காணிகளைச் சுற்றிலும் அமைக்கப்பட்டுள்ள வீதிவழியாக வேண்டுமென்றால் சட்டத்தரணிகள் சென்று பார்வையிடலாம் என அங்கிருந்த இராணுவ அதிகாரிகள் தெரிவித்திருந்ததாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன தெரிவித்திருக்கின்றார்.

பொதுமக்கள் காணிகளைச் சென்று பார்வையிடலாம் என்ற தகவல் வெளியாகியதையடுத்து, நேற்றுக் காலை அங்கு சென்ற சுமார் 20. - 25 பொதுமக்களை, அங்கு செல்ல அனுமதிக்காமல் மாவிட்டபுரம் வீதி சோதனைச்சாவடியில் வைத்து இராணுவத்தினர் திருப்பி அனுப்பி வைத்ததாக வலிகாமம் வடக்கு பிரதேசசபைத் தலைவர் சோமசுந்தரம் சுகிர்தன் தெரிவித்தார்.

## வடக்கு...

ஊடகவியலாளர் மாநாட்டில் ரணில்விக்கிரமசிங்க மேலும் தெரிவிக்கையில், இந்த வருடம் வடமாகாண சபைத்தேர்தலை செப்ரெம்பர் மாதத்தில் நடத்துமாறு தமது கட்சி அரசிடம் கோருவதாகவும் அரசாங்கம் உடைத்து உடைத்து தேர்தலை வைப்பதன் மூலம் முழுமையான ஜனநாயகத்தை எதிர்பார்க்க முடியாது. அவ்வாறு அரசாங்கம் எட்டு மாகாண சபைகளில் தேர்தலை நடாத்தி முடித்துவிட்டது மீதி இருப்பது வடக்குத் தேர்தல் மட்டுமே அரசாங்கம் இந்தத் தேர்தலை நடாத்துவதற்கு முன்பு குறிப்பாக சுதந்திர ஆணைக்குழுக்களை நியமிக்கவேண்டும். அதாவது பொலிஸ் ஆணைக்குழு, நீதிச்சேவை ஆணைக்குழு போன்றவை இதனையே எல்.எல்.ஆர்.சி.யும் வலியுறுத்தியுள்ளது. என்றும் தெரிவித்த ரணில் விக்கிரமசிங்க எதிர்க்கட்சியுடனும் வடமாகாண தேர்தல் குறித்து அரசு கலந்தாலோசிக்க வேண்டும் என்றும், பொது ஆளுநர் ஒருவரையும் அரசு நியமிக்க வேண்டும் அவ்வாறு நியமிக்கப்படாவிட்டால் சுதந்திரமான தேர்தல் நடைபெறமாட்டாது.

தேர்தலிற்கு முன்னர் வெளிநாட்டுக் கண்காணிபபாளர்களை இங்கு கடமையாற்ற அரசு அனுமதிக்க வேண்டும். இவ்வாறு அரசு செயற்பட்டாலே சுதந்திரமான தேர்தலை வடக்கில் நடாத்தமுடியும். அவ்வாறு சுதந்திரமான குழுக்களின் பங்களிப்புடன் தேர்தல் நடத்தப்பட்டால் அதனை நாம் ஏற்றுக கொள்வோம் என்றும் தெரிவித்த ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவிக்கையில்,

கடந்த சில நாட்களுக்கு முன்னர் உதயன் பத்திரிகை அச்சகம் தாக்கப்பட்டுள்ளது. இதை நடாத்தியது சிவில் உடையணிந்த பாதுகாப்புத் தரப்பினர் என்ற செய்தி தமக்குக் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் இவ்வாறான சூழலில் உண்மையான ஜனநாயக சூழலை எதிர்பார்க்க முடியாது.

வடக்கு மாகாண சபைத் தேர்தலை முன்னிட்டு ஐக்கிய தேசிக் கட்சி பலதரப்பினரையும் சந்தித்துக் கலந்தாலோசிக்கவே நான்கு நாள் விஜயம் மேற்கொண்டு இங்கு வந்திருப்பதா கவும் தெரிவித்ததுடன்,

இந்த விஜயத்தில் மதத் தலைவர்கள் உள்ளிட்ட ஏனைய சட்டப் பிரதிநிதிகளையும் சந்தித்துக் கலந்துரையாட எண்ணியிருப்ப தாகவும் தெரிவித்தார்.

அதேவேளை நேற்று மாலை வடமராட்சியில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டார். மாகாணசபை தேர்தலில் வடமராட்சிப் பகுதியின் வேட்பாளர் தெரிவு பற்றியும் விலைவாசி பற்றியும், மின்சாரக் கட்டண உயர்வு பற்றியும், வடமராட்சிப் பகுதி மக்களின் கருத்துப் பற்றியும் அங்கு கலந்து ஆலோசிக்கப்பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சி தலைவர் பேசி முடிந்ததும் ஊடகவியலாளர்கள் வெளியேற்றப்பட்டு அதன பிறகு மந்திர ஆலோசனை நடைபெற்றது. அதன் பிறகு ப.நோ.கூ. சங்க கிளைக் கடையை (மாலுச் சந்தி) பார்வையிட்டார். பொதுமக்களின் வியாபார ஸ்தாபனத்தையும் பார்வையிட்டார். பொதுமக்களின் குறைநிறையும் கேட்டறிந்தார். (பா,180)

# சென்னையிடம் வீழ்ந்தது ஹைதராபாத்




(சென்னை)

சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணியுடன் நேற்று நடைபெற்ற போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 5 விக்கட்டுக்களால் வெற்றி பெற்றது.

நாணாயச் சுழற்சியில் வென்ற சன்ரைசர்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 159 ஓட்டங்களைப் பெற்றது சன்ரைசர்ஸ் அணி. சன்ரைசர்ஸ் அணியின் ஷிகார் தவான் 63 ஓட்டங்களையும், ஆசிஷ்ரெட்டி 36 ஓட்டங்களையும், டேரன்சமி 19 ஓட்டங்களையும் குவித்து சென்னை சுப்பர் கிங்ஸுக்கான வெற்றி இலக்காக 160 ஓட்டங்கள் நிர்ணயித்த நிலையில் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 19.4 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 160 ஓட்டங்களைப் பெற்று 5 விக்கெட்டுக்கள் வித்தியசத்தில் வெற்றி பெற்றது.

# யாழ். நவீன சந்தையில் அடிப்படை வசதி இல்லை

(திருநெல்வேலி)

யாழ்ப்பாணம் நவீன சந்தை மேல்மாடியில் உள்ள வர்த்தகர்கள் மற்றும் ஊழியர்களுக்கான பாவனைக்கு ஒரே ஒரு மலசலகூடமே உள்ளதாகவும் இதனை சுமார் ஐம்பது பேருக்கு மேலானவர்கள் பாவிப்பதில் பல இன்னல்கள் ஏற்படுவதாகவும் யாழ். வணிகர் கழகத்திற்கு இவர்களினால் கையெழுத்திட்ட மகஜர் ஒன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

மேல் மாடியில் உள்ள இரண்டு மலசலகூடங்களில் ஒன்றை ஆயுர்வேத வைத்தியசாலையினர் பூட்டிவைத்துப் பாவிப்பதாகவும், இதனால் ஒரு மலசலகூடத்தை ஐம்பதுக்கும் மேற்பட்டவர்கள் பாவிப்பதில் இடைஞ்சல்கள் ஏற்படுவதாகவும் அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் வசதியான முறையில் இதற்கான ஏற்பாடுகளை உரியவர்களுடன் கலந்தாலோசித்து உடன் செய்து தருமாறு யாழ். நவீன சந்தை மேல்மாடி வர்த்தகர்கள், ஊழியர்கள் வணிகர் கழகத்தினரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (137)

## ரணிலுடன் சுரேஷ்...

தற்போது வெடித்திருக்கும் உச்சக்கட்ட உட்கட்சி மோதல் குறித்து உரையாடப்பட்டதாகத் தகவல்கள் கசிந்துள்ளன. இந்த உட்கட்சி மோதல் எதிர்வரும் மாகாண சபைத் தேர்தல் வியூகங்களில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதனால் உடையும் நிலையில் உள்ள கூட்டமைப்புக்குள் ஒட்டுப்போடும் முயற்சியும் இச்சந்திப்பில் இடம்பெற்றதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இச்சந்திப்பு நிறைவடைந்த பின்னர் செய்தியாளர்களின் கேள்விகள் எதற்கும் பதிலளிக்க இருவரும் மறுத்துவிட்டனர். (02,25)

## இந்திய வீடமைப்பு...

தொடங்கப்பட்டன. இந்த வீடு கட்டும் திட்டத்தைக் கண்காணிப்புக் குழு பார்வையிட்டு அறிக்கை அளித்துள்ளது. அதில் இரண்டாவது கட்ட வீடு கட்டும் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு, பயனாளிகள் தேர்வு ஆகியவை முதலாவது ஆண்டில் திட்டமிட்டபடி நடந்து வருகிறது என்று பாராட்டுத் தெரிவித்துள்ளது. மார்ச் மாத இறுதி வரை 228 கோடி இலங்கை ரூபாய் தவணை தொகையாக வழங்கப்பட்டுள்ளது. முதல் தவணைத் தொகை, 11,379 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. 2 ஆவது தவணைத் தொகை 3,448 பயனாளிகளுக்கும், 3 ஆவது தவணைத் தொகை 741 பயனாளிகளுக்கும், 4 ஆவது தவணைத் தொகை 18 பயனாளி களுக்கும் வழங்கப்படும்.

கிழக்கு மாகாணத்தில் இந்த வீடு கட்டும் திட்டம் அடுத்த மாதம் தொடங்குகிறது. இதில் மிகவும் அதிகமாக பாதிக்கப்பட்ட பகுதிகள் கண்டறியப்பட்டு அந்தப் பகுதிகளில் உள்ள மறுவாழ்வு அளிக்கப்பட்டுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். குடியிருப்புகள் கட்டிக்கொடுக்கும் 4 நிறுவனங்களில் ஐ.நா.வும் ஒன்று. 36 மாத திட்டமான இந்த ஐ.நா. குடியிருப்புத்திட்டம் 2012 மத்தியில் தொடங்கி 2015 மத்தியில் முடிகிறது. மக்களுக்கு நேரடியாக வீடு வழங்கும் இந்தத் திட்டத்தின் கீழ் 43,000 வீடுகள் புதிதாகக் கட்டுதல் மற்றும் சீரமைத்தல் மூலம் வழங்கப்படுகிறது என்றும் அதில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

# வலி.வடக்கில் கதவடைப்பு ஐ.தே.குழுவின் பிரசார யுக்தி




(யாழ்ப்பாணம்)

ஐக்கிய தேசியக் கட்சியின் தூதுக்குழுவினர் வலி.வடக்கு செல்வதற்கு பாதுகாப்பு படையினர் தடை விதித்தனரா? அல்லது இத்தூதுக்குழுவினர் வழமையான நடைமுறைகளைப் பின்பற்றத் தவ்றியதால் வலி. வடக்கின் அனைத்துப் பகுதிகளிலும், அக்குழுவின்ரால் உள்நுழைய முடியாமல் போய் விட்டதா என்று முன்னுக்குப் பின்னரான செய்திகள் வெளியாகியுள்ளன.

வலி.வடக்கு காணி விவகாரம் குறித்து நேரடியாக மாவையிடம் தான் சென்ற போது படையின்ர் அதற்கு அனுமதிக்க மறுத்து விட்டதாக இக்குழுவினர் தமது தேர்தல் பிரசாரத்துக்காக நேற்று மாலை ஊடகங்களுக்கு கருதது வெளியிடும் போதே

உயர்பாதுகாப்பு வலயத்திற்கு குட்பட்ட வலிகாமம் வடக்குப் பிரதேசத்திலிருந்து கடந்த ஓரிரு தினங்களுக்கு முன்னர் இராணுவத்தால் சுவீகரிக்கப்பட்ட 6 ஆயிரத்து 500 ஏக்கர் நிலப்பரப்பு தொடர்பில் ஆராய்வதற்காக மேற்படி குழுவினர் உயர்பாதுகாப்பு வலயத்திற்குச் செல்ல நேற்று மாலை முற்பட்டுள்ளார்.

ஐ.தே.க.வின் இந்த உயர் மட்டக்குழுவில் நாடாளுமன்ற உறுப்பினர்களான திஸ்ஸ அத்தநாயக்க, ரவி கருணாநாயக்க மற்றும் சுவாமிநாதன் ஆகியோர் உள்ளடங்கியிருந்தனர். (02)

## விதிகளை மீறினால் வழக்கு

தென் அதிவேக நெடுஞ்சாலையில் ஒரு மணித்தியாலத்திற்கு 100 கிலோமீற்றர் வேகம் என்ற கட்டுப்பாட்டை மீறி பயணித்த 5147 வாகனங்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் தெரிவித்தார்.

நெடுஞ்சாலையில் மரணத்தை ஏற்படுத்தும் வகையில் இடம்பெற்ற ஆறு விபத்துகளில் ஐந்து விபத்துக்கள் வேகக் கட்டுப்பாட்டை கடைப்பிடிக்காமையினால் இடம்பெற்றதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

இந்த நெடுஞ்சாலையில் ஏற்பட்ட விபத்துக்களில் இதுவரையிலும் ஏழுபேர் பலியாகியுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

## நீதிபதியின் வீட்டில் திருடர்கள் சூறை

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி றோஹினி மாறசிங்கவின் வீட்டில் இனந்தெரியாத நபர்கள் கொள்ளையிட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மிரிஹான பொலிஸ் பிரிவில் உட்ட ஹபுல்ல, நடுக்காரவத்த பிரதேசத்தில் உள்ள நீதிபதியின் வீட்டிற்குள் நேற்று இரவு புகுந்த கொள்ளையர்கள் பெறுமதி வாய்ந்த பொருட்களை திருடிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவம் தொடர்பான விசாரணைகள் இடம்பெறுவதாக மிரான பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை மிரிஹான பிரதேசத்தில் அண்மைக்காலமாக கொள்ளை மற்றும் குற்றச் செயல்கள் அதிகரித்துச் செல்வதாக பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். உடகமுள்ள பிரதேச வீடொன்றில் பெண் ஒருவர் சுட்டுக் கொலை செய்யப்பட்டார்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை என பொலிஸ் ஊடகப்பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது. எனினும் குற்றச் செயல்கள் அதிகரிப்பதை தடுப்பதற்கும் குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்களை கைது செய்வதற்கும் மிரிஹான பொலிஸார் நடவடிக்கை எடுப்பதில்லை என பிரதேச மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

## வீட்டு வாயிலில் மண்டையோடு; காத்திருந்தது அதிர்ச்சி

(திருகோணமலை)

திருகோணமலை நகரில் உள்ள பிரபல்யமான ஆண்கள் பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர் ஒருவரின் வீட்டின் முன்பாக மண்டை ஒடு வைக்கப்பட்டு எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது.

மண்டையோட்டுடன் எச்சரிக்கை செய்யும் வாசகம் அடங்கிய பதாகையொன்றும் வைக்கப்பட்டுள்ளது.

அதில் பாடசாலை மாணவர்களது சிகை அலங்கார விடயங்களில் அடிமைப்படுத்த வேண்டாம் என எழுதப்பட்டுள்ளதுடன்.

பாதிக்கப்பட்ட மாணவர்கள் என்றும் உரிமைகோரப்பட்டுள்ளது. ஆசிரியரின் வீட்டிற்கு முன்பாக நேற்று முன்தினம் இரவே மண்டையோடு வைக்கப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை கதவைத் திறந்த ஆசிரியர் இதனைக் கண்டு அச்சமடைந்ததுடன் இது தொடர்பில் திருகோணமலை பொலிஸிற்கு தெரியப்படுத்தியுள்ளார்.

ஸ்தலத்திற்கு விரைந்த பொலிசார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதுடன் இராணுவத்தினரும் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## விளம்பர நிகழ்ச்சிக்கு ஆப்பு

ஹைதராபாத் சன் ரைசர்ஸ் கிரிக்கெட் அணியின் கேப்டன் குமார் சங்ககாரா உட்பட சன் ரைசர்ஸ் வீரர்கள் கலந்து கொள்ள இருந்த விளம்பர தாரர்கள் நிகழ்ச்சி 11.30 க்கு சென்னை எக்ஸ்பிரஸ் அவென்யூவில் பலத்த காவல்துறை பாதுகாப்புடன் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது. இதனை அறிந்த மாணவர்கள் அங்கு முற்றுகையிட திரண்டனர் இதனை அறிந்த நிகழ்ச்சி ஏற்பாட்டளர்கள் எக்ஸ்பிரஸ் அவென்யூவில் நடக்க இருந்த நிகழ்ச்சியை இரத்து செய்வதாக அறிவித்து பின்னர் அங்கு நிகழ்ச்சி நடைபெறவில்லை. அதனையடுத்து அந்த நிகழ்ச்சியை தாஜ் கோர மண்டபத்திற்கு மாற்றினர் அங்கும் மாணவர்கள் திரண்டு பதட்டம் நிலவியதால் நிகழ்ச்சி நடைபெறவில்லை. விளம்பரதாரர்களின் நிகழ்ச்சி நடைபெற வேண்டிய கட்டாயத்தில் உள்ளதால் அடுத்து நிகழ்ச்சி எப்போ, எங்கே நடத்துவது என்று தெரியாத நிலையில் உள்ளனர் நிகழ்ச்சி ஏற்பட்டாளர்கள். பலத்த பொலிஸ் பாது காப்பு இரு இடங்களிலும் போடப்பட்டுள்ளது. மாணவர்கள் அந்த நிகழ்வை தடுக்கக தயார் நிலையில் உள்ளனர்.

## திருப்தியற்ற பேச்சு முயற்சி; தொழிற்சங்கம் அதிருப்தி

ஜனாதிபதி செயலாளருடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தையில் தமது பிரச்சினைக்கு உரிய தீர்வு கிடைக்கவில்லை என ரயில் தரப்படுத்தல் தொழிற்சங்க கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இந்தப் பேச்சுவார்த்தையில் கொடுப்பனவு ஒன்றை வழங்க அதிகாரிகள் இணக்கம் தெரிவித்தபோதும், அது திருப்தி அளிக்கவில்லை என கூட்டமைப்பின் ஏற்பாட்டாளர் ஜானக்க பெனாண்டோ தெரிவித்துள்ளார். இது தொடர்பில் தமது தொழிற்சங்க பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தி இறுதி முடிவு எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டார்.

# இலங்கையர்களுக்கு இந்தியாவில் பாதுகாப்பு

## இந்தியத் தூதுவர் உறுதி மொழி

இந்தியாவில் இலங்கையர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் என இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் அசோக் காந்தா தெரிவித்துள்ளார். மல்வத்து அஸ்கிரி பீடாதிபதிகளை சந்தித்து பிரியாவிடை பெற்றுக் கொண்ட சந்தர்ப்பத்தில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கான உயர்ஸ்தானிகராக கடமையாற்றி வந்த அசோக் காந்தா இந்திய வெளிவிவகார அமைச்சின் உயர் பதவியொன்றுக்காக நியமிக்கப்பட்டுள்ளார். தமிழகத்தில் அண்மையில் இலங்கையர்களுக்கு எதிராக இடம்பெற்ற சம்பவங்களை பொருட்படுத்தப்பட வேண்டியதில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக தமிழக மாநில அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவிதுள்ளார். மத்திய மாநில அரசாங்கங்களின் ஒத்துழைப்புடன் இலங்கையர்களை பாதுகாக்கும் சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். இந்தியாவிற்கு விஜயம் செய்யுமாறு மல்வத்து அஸ்கிரி பீடாதிபதிகளுக்கு அசோக் காந்த அழைப்பு விடுத்துள்ளார்.

இந்தியாவிற்கு விஜயம் செய்யும் இலங்கையர்களுக்கு போதியளவு பாதுகாப்பு வழங்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

# உள்வீட்டு விவகாரத்தில் யாரும் தலையிட முடியாது

(கொழும்பு)

பயங்கரவாதத்தில் இருந்து நாட்டை முழுமையாக விடுவிப்பதற்காக அரசாங்கம் மேற்கொண்ட மனிதாபிமான நடவடிக்கைகளை சர்வதேச ஊடகம் கொலைக்களமாக சித்தரித்தமையே தவறு என ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார். மோதல் தீர்வே தவிர யுத்தமல்ல. எந்த நாட்டிலும் இவ்வாறான மோதல் தீர்வில் ஊடகங்களின் பங்களிப்பு மிக முக்கியமானதாக இருக்கும். இலங்கையிலும் ஊடகங்கள் இதில் முக்கிய பங்காற்றியதாக தகவல் ஊடகத்துறை அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார். குறிப்பிட்ட வரையறைக்குள் அநேக விடயங்கள் குறித்து சார்க் நாடுகளிடையே கலந்தாலோசிக்க முடியும். ஆனால் மற்ற நாட்டு உள்விவகாரங்களில் தேவையின்றி தலையீடு செய்ய முடியாது எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

சார்க் தகவல் நிலையம் ஏற்பாடு செய்திருந்த சமாதானத்தைக் கட்டியெழுப்புதலும் மோதல் தீர்வில் ஊடகங்களின் பங்களிப்பும் என்ற தொனிப் பொருளிலான மாநாடு நேற்று முனதினம் கொழும்பு தாஜ் சமுத்ரா ஹோட்டலில் ஆரம்பமானது. இதில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். இந்த மாநாட்டில் சார்க் நாட்டு தூதுக்குழுவினர் பங்கேற்றனர். மேஜர் ஜெனரல் பிரசாத் சமரசிங்க பிரதான உரையாற்றினார். இந்த நிகழ்வில் அமைச்சர் ஹெலிய உரையாற்றுகையில்,

30 வருட யுத்தம் முழு நாட்டையும் பாதித்தது. இத்தகைய மோசமான மோதலை உலகில் பல நாடுகள் முகம்கொடுத்தன. பயங்கரவாதத்திலிருந்து நாட்டை முழுமையாக மீட்க ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ 2006 ஆம் ஆண்டு முடிவு செய்தார். பயங்கரவாதத்தை முடிவுக்குக் கொண்டு வரும் நம்பிக்கையும் பொறிமுறையும் அவரிடமிருந்தது. இந்த விடயத்தில் ஊடகங்களின் பங்கு பிரதானமானது என்பதால் அது குறித்து ஜனாதிபதி என்னுடன் ஆராய்ந்தார். ஊடகங்களை சரியாக கையாளாவிட்டால் யுத்தத்திற்கு முடிவு கட்டுவது கடினம் என்பதை ஜனாதிபதி அறிந்திருந்தார். அதன்படியே ஊடக மத்திய நிலையம் உருவாக்கப்பட்டது. நானும் இதில் பங்காளியாக இருந்தது குறித்து பெருமை அடைகிறேன்.

சார்க் நாடுகள் பூகோள ரீதியில் ஒன்றுபட்டு செயற்படுகின்றன. ஏனைய நாட்டு உள்விவகாரங்களில் தலையிடாது செயற்படுவதன் மூலம் தொடர்ந்து ஒன்றாக செயற்பட முடியும். சார்க் எனும் கப்பலுக்கு சுழல் காற்று, பாரிய அலைகள் என எந்த சவால் வந்தாலும் ஒன்றுபட்டு செயற்படுவதன் மூலம் முகம் கொடுக்க முடியும். ஒருவருக்கொருவர் தன்னிச்சையாக உதவலாம் என்றார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 ஏப்ரல் 26 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.